# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 11 வெள்ளிக்கிழமை (25.03.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 119


## லிபியா போன்ற ஒரு நிலையை இலங்கையிலும் ஏற்படுத்தவே 2009 இல் முயற்சி எடுக்கப்பட்டது

கொழும்பு, மார்ச் 25

லிபியாவில் கிளர்ச்சியாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களை மேற்கத்தேய நாடுகள் ஆதரித்துள்ளன. இதன் காரணமாக அந்நாடு பிளவுபடும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது. லிபியாவில் உள்ளது போன்ற ஒரு நிலைமையை இலங்கையிலும் ஏற்படுத்தவே 2009 மே மாதம் ஐ.நா. முயன்றது.

-இப்படி ஜாதிக ஹெல உறுமய குற்றம் சாட்டுகின்றது.

லிபியாவில் மாத்திரமல்ல, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் கூடத் தமது நாட்டு மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தியுள்ளன. எனினும் அந்த நாடுகள் மீது குண்டுகளை வீச எந்த நாடும் முன்வரவில்லை என்று ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் மின்சக்தி அமைச்சரு

(29ஆம் பக்கம் பார்க்க)



02

நடப்புச் சம்பியனை வீட்டுக்கு அனுப்பியது இந்தியா



16

பொறுக்குமா வையகம்



31

ஐ.தே.க. போராட்டம் நடத்தும்

உள்ளே யுவராஜ்ஜின் வர்ணப்படம் இணைப்பு





உங்கள் உதயனுடன் தொடர்ச்சியாய் வீரர்களின் வர்ணப் படங்கள் எதிர்பாருங்கள்

## புலம்பெயர் தமிழர்களுடன் சொல்ஹெய்ம் திடீர் சந்திப்பு

### அரசுடன் பேசுமாறு அவர் அறிவுரை

ஒஸ்லோ, மார்ச் 25

**அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுக்களுக்கு அனுசரணையாளராக இருந்தவரும் நோர்வே நாட்டு அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம், புலம்பெயர் ஈழத் தமிழர் பிரதிநிதிகள் சிலரைச் சந்தித்துக் கலந்துரையாடி உள்ளார். கடந்த வாரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்தும் அதில் புலம்பெயர் தமிழரின் வகிபாகம் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.**

கடந்த வெள்ளியன்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றது என்று ஒஸ்லோச் செய்திகள் கூறுகின்றன. தமிழ்க் குழுக்கள் சில கேட்டுக் கொண்டதன் பேரிலேயே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டதாக நோர்வே வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

"இலங்கை தொடர்பிலான நோர்வேயின் தற்போதைய அரசியல் நிலைப்பாடு என்பதை புலம்பெயர் தமிழர்களுக்கு விளக்குவதற்கும், அவர்களின் கருத்

(29ஆம் பக்கம் பார்க்க)




ஐ.நா. அலுவலகம் முன் ரயர்களைக் கொளுத்தி ஆர்ப்பாட்டம்.

## தேடப்படும் கொலையாளி ஒபாமா ஐ.நாவை கண்டித்து ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 25

தேடப்படும் கொலையாளி ஒபாமா என்ற வாசகம் அடங்கிய பதாகையைத் தாங்கியபடி ஐ.நாவுக்கு எதிராகக் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

லிபியா மீது உலக நாடுகள் மேற்கொண்டு வரும் தாக்குதல்களுக்கு எதிராகவும், லிபியாவுக்கு

(29ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு தலைவர்கள் பதவியேற்பு திருமலையில்

கொழும்பு, மார்ச் 25

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றிய 12 உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், தவிசாளர்களின் பதவிஏற்பு வைபவத்தை திருகோணமலையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 15 சபைகளில் போட்டியிட்டு 12 சபைகளைக் கைப்பற்றி வெற்றி பெற்ற கட்சிகளின் பட்டியலில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இந்தநிலையில் 12சபைகளிலும்

(32ஆம் பக்கம் பார்க்க)

## கிடைத்தது விடுதலை தயானந்தவுக்கு: தேர்தல் ஆணையர் புதிதாக நியமனம்

கொழும்பு, மார்ச் 25

தேர்தல்கள் திணைக்கள ஆணையாளராக மஹிந்த தேசப்பிரிய இன்று பதவியேற்கிறார். ஓய்வுபெறும் காலத்தின் பின்னரும் பல வருட காலமாக அப்பதவியில் இருந்து விலகிச் செல்ல முடியாமல் தவித்து வந்த தயானந்த திஸநாயக்கவுக்கு இதன் மூலம் விடுதலை கிடைத்துள்ளது.

மஹிந்த தேசப்பிரிய நேற்று வரை துணைத் தேர்தல்கள் ஆணையாளராகப் பணியாற்றி வந்தார். இன்று அவர் தனது

(32ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியக் கடற்படையினர் நேற்று வடமராட்சிக் கடலில் நடமாட்டம்

வடமராட்சி, மார்ச் 25

வடமராட்சிக் கடற்பரப்பில் நேற்று இந்தியக் கடற்படையினரின் நடமாட்டம் அதிகமாக இருந்தது என்று வடமராட்சி வடக்கு கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.எமிலியாம்பிள்ளை உதயனுக்குத் தெரிவித்தார்.

வழமைக்கு மாறாக நேற்றுக் காலை முதல் மாலை வரை வடமராட்சிக் கடற்பரப்பில் கண்ணுக்கெட்டிய தூரத்தில் இந்தியக் கடற்படையினரின் அதிவேகப் படகுகளின் நடமாட்டம்

(32ஆம் பக்கம் பார்க்க)

## தலைமையை விமர்சித்தால் தண்டனை

### ஐ.தே.க. அறிவிப்பு

கொழும்பு,மார்ச் 25

இனிமேல், கட்சித் தலைமையை விமர்சிக்கும் உறுப்பினர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பேச்சாளருமான மங்கள சமரவீர நேற்று இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

நேற்றுமுன்தினம் கூடிய கட்சியின் உயர்மட்டக் குழு எடுத்த தீர்மானத்துக்கு அமைவாக இந்த நடவடிக்கை உடனடியாக நடைமுறைக்கு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (உ)

## சீன உறவுக்கே எப்போதும் முன்னுரிமை

பெய்ஜிங், மார்ச் 25

சீனாவுடனான உறவுகளைப் பலப்படுத்துவதற்கு இலங்கை அரசும் அதன் தலைவர்களும் எப்போதும் முழு முன்னுரிமை கொடுத்துச் செயற்பட்டிருக்கிறார்கள் என்று கூறி இருக்கிறார் சீனாவுக்கான தூதர் கருணா திலக அமுனுகம.

சீன வெளிவிகார அமைச்சில் துணை வெளிவிவகார அமைச்சர்

(29ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் மீதான அனுதாபத்தை வெளிப்படுத்த சிவ்சங்கர் மேனனைப் பதவி விலக்குங்கள்

### ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு சோனியாவிடம் கோரிக்கை

நியூயோர்க், மார்ச் 25

ஈழத் தமிழர்கள் மீது சோனியாவுக்கு அனுதாபம் இருந்தால், தேசிய பாதுகாப்பு ஆலோசகரான சிவ்சங்கர் மேனனை அவர் பதவி நீக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு செயற்படும் இந்த அமைப்பு, நேற்று இந்தக் கோரிக்கையை விடுத்தது.

(29ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்புச் சம்பியனை வீட்டுக்கு அனுப்பி புது வரலாறு படைத்தது இந்தியா





ஆட்டத்தில் திமிராய் சச்சினுடன் வாக்குவாதம்



மண்ணைக் கவ்விய சோகம்

-டிலீப்-

பத்தாவது உலகக் கிண்ணத்தின் மினி இறுதி ஆட்டம் அஹமதாபாத்தில் நடந்தது நேற்று. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதியில் ஏற்பட்ட தோல்விக்கு பழிதீர்த்துக்கொண்டது இந்தியா. முறையாய் வாங்கிக்கட்டி வாலைச் சுருட்டியது ஆஸ்திரேலியா.

நாணயச் சுழற்சியில் வென்றதும் ஆஸி எடுத்தது துடுப்பெடுத்தாட தீர்மானம். தவறான தீர்மானம் அதுவென்பது இப்போது புரிந்திருக்கும் அவர்களுக்கு. வொட்ஸனுடன் ஹடின் களத்தில் இறக்கம். இந்தியா ஆரம்பப் பந்து வீச்சை மாற்றத்துடன் ஆரம்பித்தது. அஸ்வின் அழைக்கப்பட்டார் முதலாவது ஓவரை வீச. ஆரம்பத்தில் ஆஸி அடக்கியே ஆடியது. காரணம் தப்பினால் மரணம் இரு அணிகளினது நிலைப்பாடும். நிதானமாய் ஆடி வெல்வது ஆஸியின் நோக்கம்.

வொட்ஸன் அமைதியாய் ஆட மறு முனையில் இந்தியப் பந்து வீச்சை விளாசத் தொடங்கினார் ஹடின். அதிரடி நிதானம் கலந்து தொடர்ந்தது ஆஸியின் ஆரம்ப ஆட்டம். மெல்ல அதிரடி ஆசை தொற்றியது வொட்ஸனிலும். அதிரடிக்கு ஆசைப்பட்டு பறி கொடுத்தார் விக்கெட்டை. பறித்தெடுத்தவர் அஸ்வின். 40 ஓட்டங்களில் வீழ்த்தப்பட்டது முதலாவது விக்கெட்.

பொன்டிங் நுழைந்தார் களத்துக்கு. இணைந்து கொண்டார் ஹடினுடன். பொன்டிங் கடந்த போட்டிகளில் சொதப்பல் ஆட்டம். இதனால் நின்று ஆடினார். ஹடின் தன்னால் முடிந்தவரை அதிரடியாய் ஆடினார். பொன்டிங்கும் இணையாய் ஆட்டம். இவர்களது இணைப்பால் அணி எட்டியது சதம். தொடர்ந்தது இவர்களது சிறப்பான ஆட்டம். இந்தியர்கள் மாற்றியமைத்துப் பார்த்தனர் வியூகங்களை. வீழ்த்த முடியவில்லை இவர்களது விக்கெட்டுக்களை. ஹடின் எட்டினார் விரைவாய் அரைச்சதம். 70 ஓட்டங்கள் இரண்டாவது விக்கெட் இணைப்புக்காய் பெறப்பட்டது. டோனியால் அழைக்கப்பட்டார் யுவராஜ். பிரித்தார் இணைப்பை. எடுத்தார் விக்கெட்டை. அரைச் சதம் கடந்த ஹடின் ஆட்டமிழந்தார்.

தலைவர் பொன்டிங் களத்தில் தனித்து நின்று போராட்டம். புதிதாய் வந்தார் உதவித் தலைவர் கிளார்க். எட்டு ஓட்டங்கள் மட்டும் அவரது பெறுகை. யுவராஜ் அனுப்பினார் அவரை பவிலியனுக்கு. 140/3 ஆஸியின் ஆபத்தான கட்டம். பொன்டிங் கடந்தார் அரைச்சதம். தன்மீதான விமர்சனத்தை தன் துடுப்பால் நொருக்கினார் பொன்டிங்.

மைக்கல் ஹஸியும் பொறுப்பில்லா ஆட்டம். இதனால் அடுத்த விக்கெட்டும் பறிக்கப்பட்டது இந்தியாவால். 150/4. வைட் இணைந்தார் பொன்டிங்குடன். நிதானமாய் ஆடியதால் வீணே சென்றது பல ஓவர்கள். இவர்களின் நிதானம் சாதகமாகியது இந்தியாவுக்கு. வைட் ஆட்டத்தை முடித்து வைத்தார் சகீர். 12 ஓட்டங்கள் மட்டும் பெற்றுக் கொடுத்திருந்தார் வைட்.

டேவிட் ஹஸி அதிரடியாய் ஆட்டம் தொடக்கம். இதுவரை காட்டிய நிதானத்துக்கு அதிரடியாய் பதிலடி. நொருக்கத் தொடங்கினார் டேவிட் ஹஸி. மறு முனையில் பொன்டிங் கடந்தார் சதம். பத்தாவது உலகக் கிண்ணத்தில் அவரது முதல் சதம். அவரது உலகக் கிண்ண வாழ்க்கையில் இது இறுதிச் சதம்.

பொன்டிங் இறுதிக்கட்டத் தாக்குதல் முன்னெடுப்பு. அதில் முதலில் பலியானதும் அவரே. அஸ்வின் பந்தில் 'றிவேஸ் ஸ்வீப்' முயற்சி. வீழ்த்தப்பட்டது பொன்டிங் விக்கெட்.

ஹஸியின் இறுதிக் கட்டத் தாக்குதலால் எட்டியது 260 ஓட்டங்கள். இதற்காய் பலிகொடுத்தது 6 விக்கெட்டுக்கள். பந்து வீச்சில் மூவர் கைப்பற்றினர் இரண்டு விக்கெட்டுக்கள். அஸ்வின், யுவராஜ், சகீர்கான் இவர்களே அவர்கள்.

பதிலுக்கு ஆட்டத்தை ஆட வந்தனர் சச்சின்-சேவாக் ஜோடி. ஆட்டம் ஆரம்பித்தது அதிரடியுடன். சச்சின் இரண்டாவது ஓவரிலேயே அதிரடி தொடக்கம். இவர்களின் ஆரம்ப அதிரடிகளால் குழம்பிப்போனது ஆஸி. இருந்தும் சுதாகரித்து பின்னர் கட்டுக்குள் கொண்டு வந்தது. சேவாக்கின் ஆட்டம் மெல்ல அமைதியடைந்தது. அமைதிக்கு வந்ததும் ஆட்டத்தை முடித்து வைத்தார் வொட்ஸன். 15 ஓட்டங்களுடன் வெளியேற்றம் சேவாக். அரங்கே அமைதி. கம்பீர் களத்துக்கு வந்து இணைந்தார் சச்சினுடன். இவர்களின் இணைப்பால் மெல்ல நிமிர்ந்தது இந்தியா. சச்சின் அனுபவ ஆட்டம். இணைப்பு எட்டியது அரைச்சதம். சச்சின் அதிரடி ஆட்டம் இதனால் எட்டினார் அரைச் சதம். பவிலியனுக்கு அனுப்பி வைத்தார் ரைட். ஹோக்லி வந்தார் களத்துக்கு. நின்று முண்டு கொடுத்தார் கம்பீருக்கு. ஹோக்லி 24 ஓட்டங்களுடன் டேவிட் ஹஸி வழியனுப்பி வைப்பு. யுவராஜ் அமர்களமாய் ஆட்டம் தொடக்கம். மறுமுனையில் கம்பீர் எட்டினார் அரைச்சதம். கம்பீர் ரன் அவுட் முதல் பந்தில் ஆஸியின் களத்தடுப்பிலிருந்து தவறியது. சந்தர்பம் மீண்டும் அடுத்த பந்திலேயே கிடைத்தது ஆஸிக்கு. வீழ்த்தியது கம்பீரை. டோனி களத்துக்கு வருகை. நிற்கவில்லை நீண்டநேரம். 7 ஓட்டங்களுடன் வெளியேற்றம். மீண்டும் இந்திய மத்திய வரிசையின் சறுக்கல் நிரூபணம். இருந்தும் யுவராஜ் - ரெய்னா ஜோடி மாற்றியது. அழுத்தம் இல்லாமல் ஆடியது இந்த ஜோடி. அதிரடிகளை அள்ளிக் குவித்தது. யுவராஜ் எட்டினார் அரைச்சதம். தொடர்ந்து எட்டப்பட்டது வரலாற்று வெற்றி. ஆஸியின் தொடர் கிண்ண வேட்டை முற்றுப் புள்ளி.

பல சாதனைகளை படைத்த யுவராஜ் ஆட்ட நாயகன் விருதுக்கு சொந்தக்காரர்.




வெற்றிக் களிப்பில் ரெய்னா - யுவராஜ்

## 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண இரண்டாவது காலிறுதி ஆட்டம்

ஆட்டம்: இந்தியா Vs ஆஸ்திரேலியா — நாணயச் சுழற்சி: ஆஸ்திரேலியா
முடிவு: இந்தியா 05 விக்கெட்டுக்களால் வெற்றி — ஆட்டநாயகன்: யுவராஜ்

ஆஸ்திரேலியா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| வொட்ஸன் | b அஸ்வின் | 25 | 38 | 5 | 0 |
| ஹடின் | c ரெய்னா b யுவராஜ் | 53 | 62 | 6 | 1 |
| பொன்டிங் | c சகீர்கான் b அஸ்வின் | 104 | 118 | 7 | 1 |
| கிளார்க் | c சகீர்கான் b யுவராஜ் | 08 | 19 | 0 | 0 |
| மைக்கல் ஹஸி | b சகீர்கான் | 03 | 09 | 0 | 0 |
| வைட் | c&b சகீர்கான் | 12 | 22 | 0 | 0 |
| டேவிட் ஹஸி | ஆட்டமிழப்பில்லை | 38 | 26 | 3 | 1 |
| ஜோன்ஸன் | ஆட்டமிழப்பில்லை | 06 | 06 | 0 | 0 |
| லீ | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| கிரேஜா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ரைட் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (lb 2,w 9) | 11 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| அஸ்வின் | 10 | 52 | 2 | 0 |
| சகீர்கான் | 10 | 53 | 2 | 0 |
| ஹர்பஜன்சிங் | 10 | 50 | 0 | 0 |
| முனாப்பட்டேல் | 07 | 44 | 0 | 0 |
| யுவராஜ்சிங் | 10 | 44 | 2 | 0 |
| டெண்டுல்கார் | 02 | 09 | 0 | 0 |
| ஹோக்லி | 01 | 06 | 0 | 0 |

TOTAL - 260/6 (50)
1-40 (வொட்ஸன்), 2-110 (ஹடின்), 3-140 (கிளார்க்), 4-150 (மைக்கல்ஹஸி), 5-190 (வைட்), 6-245 (பொன்டிங்)

இந்தியா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| சேவாக் | c மைக்கல்ஹஸி b வொட்ஸன் | 15 | 22 | 2 | 0 |
| டெண்டுல்கார் | c ஹடின் b ரைட் | 53 | 68 | 7 | 0 |
| கம்பீர் | run out ( வைட்/ஹஸி) | 50 | 64 | 2 | 0 |
| ஹோக்லி | c கிளார்க் b டேவிட்ஹஸி | 24 | 33 | 1 | 0 |
| யுவராஜ்சிங் | ஆட்டமிழப்பில்லை | 57 | 65 | 8 | 0 |
| டோனி | c கிளார்க் b லீ | 07 | 08 | 1 | 0 |
| ரெய்னா | ஆட்டமிழப்பில்லை | 34 | 28 | 2 | 1 |
| அஸ்வின் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஹர்பஜன்சிங் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| சகீர்கான் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| முனாப்பட்டேல் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 16, lb 3, nb 2) | 21 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| லீ | 8.4 | 45 | 1 | 1 |
| ரைட் | 7 | 52 | 1 | 0 |
| ஜோன்ஸன் | 8 | 41 | 0 | 0 |
| வொட்ஸன் | 7 | 37 | 1 | 0 |
| கிரேஜா | 9 | 45 | 0 | 0 |
| கிளார்க் | 3 | 19 | 0 | 0 |
| டேவிட்ஹஸி | 5 | 19 | 0 | 0 |

TOTAL - 261/5(47.4)
1-44 (சேவாக்), 2-94 (டெண்டுல்கார்), 3-143 (ஹோக்லி), 4-168 (கம்பீர்), 5-187 (டோனி),

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவை சமாளிக்குமா நியூஸிலாந்து

- அருண்மொழி -

உலகக் கிண்ணக் காலிறுதி ஆட்டங்களில் மூன்றாவது ஆட்டம் நியூஸிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையில் டாக்காவில் உள்ள மிர்பூர் மைதானத்தில் இன்று இடம்பெற உள்ளது. இன்றைய ஆட்டத்தில் எந்த அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குள் நுழையப் போகின்றது என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பு.

இதில் தென்னாபிரிக்க அணியை வீழ்த்தக் கூடிய வல்லமை நியூஸிலாந்திடம் உள்ளதா? என்றால் இல்லை என்பதே பலரது பதிலாக இருக்கும்.

நியூஸிலாந்து அணி முதல் சுற்றில் தான் விளையாடிய ஆறு ஆட்டங்களில் நான்கு ஆட்டங்களில் வெற்றிபெற்றது. இதில் மூன்று ஆட்டங்கள் பலவீனமான அணிகளான கென்யா, சிம்பாப்வே, கனடா ஆகிய அணிகளுக்கு எதிராகப் பெற்றுக்கொள்ளப் பட்டது. பலமான அணிகளான ஆஸ்திரேலியா, இலங்கை அணிகளுக்கு எதிராக மிக மோசமான தோல்வியினை சந்தித்தது. பலமான பாகிஸ்தான் அணியை அபார வெற்றி கொண்டது.

பலவீனமான அணிகள் எல்லாவற்றுக்கும் எதிராக நியூஸிலாந்து பலமான வெற்றியைப் பதிவு செய்தது. பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்திலும் நியூஸிலாந்து ஆரம்பத்தில் தடுமாறியிருந்தாலும் பின்னர் இறுதி ஓவர்களில் ரெயிலரின் அபார அதிரடி ஆட்டத்தின் மூலம் வெற்றியைப் பதிவு செய்தது. இதில் முக்கியமாக ரெய்லரின் மூன்று ஆட்டமிழப்புக்கான சந்தர்ப்பங்களை பாகிஸ்தான் கோட்டை விட்டது குறிப்பிடத்தக்கது. அந்த ஆட்டமிழப்புக்கள் உரிய முறையில் பாகிஸ்தான் பயன்படுத்தியிருக்குமானால் நியூஸிலாந்தின் நிலைமை மோசமாகியிருக்கும்.

ஆஸ்திரேலிய அணியுடனும் இறுதியாக இடம் பெற்ற இலங்கை அணியுடனான ஆட்டத்திலும் நியூஸிலாந்தின் செயற்பாடுகள் மிக மோசமாகவே அமைந்திருந்தன. நியூஸிலாந்தின் பலமே அந்த அணியின் சகலதுறை ஆட்டம்தான். டானியல் வெற்றோரி, ஸ்ராங்லின், நதன் மக்கலம் ஆகியோரது சகலதுறை ஆட்டம் அந்த அணிக்குப் பெரிதும் கைகொடுத்து உதவுகின்றது.

அணியின் துடுப்பாட்ட வரிசை பலமானதாகவே இருந்தாலும் எவரையும் சிறப்பாகச் செய்வார்கள் என்று சொல்லும்படியாக இல்லை. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கும் பிரண்டன் மக்கலம் - குப்தில் ஜோடி உலகக் கிண்ண லீக் ஆட்டங்களில் பலமான எந்தவொரு அணிக்கும் எதிராகச் சிறப்பாக ஆடவில்லை. கென்யா மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கு எதிராக மட்டும் எந்தவித விக்கெட் இழப்புமின்றி வெற்றி பெறுவதற்கு வழி செய்தார்கள். ரெய்லர், ரைடர் ஆகிய முன்னணி துடுப்பாட்ட வீரர்களைக் கொண்டிருந்தாலும் ஒரு சில ஆட்டங்களில் மட்டுமே தமது திறமைகளை சரிவர வெளிப்படுத்தியுள்ளனர். மத்தியவரிசையில் அணித்தலைவர் டானியல் வெற்றோரி, நதன் மக்கலம் ஆகியோர் சகல ஆட்டங்களிலும் சிறப்பாகச் செயற்பட்டனர். டானியல் வெற்றோரி காயம் காரணமாக அணியிலிருந்து விலகியமை நியூஸிலாந்துக்கு பெரும் பின்னடைவே. மத்தியவரிசை துடுப்பாட்டத்தில் பாரிய வெற்றிடம் ஏற்பட்டுள்ளதுடன், பந்து வீச்சிலும் குறிப்பாக சுழல் பந்து வீச்சில் பின்னடைவை அந்த அணிக்குத் தோற்றுவித்துள்ளது. ஏற்கனவே வேகப்பந்து வீச்சாளர் மில்ஸ் விலகிய நிலையில் வெற்றோரியும் காயம் காரணமாக விலகியிருப்பது நியூஸிலாந்தின் தோல்வியை மேலும் உறுதி செய்வதாக அமைகின்றது.



'பி' பிரிவில் முதலிடம் பெற்றுள்ள தென்னாபிரிக்க அணியுடன் 'ஏ' பிரிவில் நான்காம் இடத்தினைப் பெற்ற நியூஸிலாந்து மோதுவதால் ஆட்டம் எதிர்பார்ப்புக்குரியதாக இல்லை. காயத்தால் அவதிப்பட்ட வெற்றோரி, மில்ஸ் அணிக்கு மீண்டும் திரும்பும் இடத்து நியூஸிலாந்து தென்னாபிரிக்காவுக்குச் சவால் விடும் என்பதில் சந்தேகம் இல்லை. அத்துடன் நியூஸியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் தென்னாபிரிக்காவின் பந்து வீச்சை பலவீனமான அணிகளுக்கு எதிராக எவ்வாறு லீக் ஆட்டங்களில் அடித்து நொருக்கினார்களோ அதே போன்று அடித்து நொருக்கினால் வெற்றி வாய்ப்பு ஓரளவாவது நியூஸியின் பக்கம் இருக்கும்.



தென்னாபிரிக்க அணியோ உலகக் கிண்ண ஆட்டங்களில் ஏனைய அணிகளைவிட பலமான நிலையிலேயே இருக்கின்றது. இங்கிலாந்துக்கு எதிரான ஓர் ஆட்டத்தில் மாத்திரமே தோல்வியடைந்தது. அந்த ஆட்டத்தில் தென்னாபிரிக்காவின் பந்து வீச்சு மேலோங்கியிருந்தது. இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் வைத்து 'திரில்' வெற்றி பெற்றது.

பந்து வீச்சுப் பலத்தை மட்டுமே தென்னாபிரிக்கா நம்பியுள்ளது. எந்தவொரு அணிக்கு எதிராகவும் தென்னாபிரிக்காவின் பந்து வீச்சு மிகச் சிறப்பாகவே இருந்துள்ளது. இந்திய அணிக்கு எதிரான ஆட்டத்தில் மாத்திரமே தென்னாபிரிக்காவின் பந்து வீச்சு ஆரம்பத்தில் தடுமாறியது. இருந்தும் பின்வரிசை ஓவர்களில் சீர்செய்யப்பட்டு இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தியது. தென்னாபிரிக்க அணியில் பெரும் குறைபாடாக இருந்து வந்த சுழல் பந்து வீச்சு தற்போதும் நிரவப்பட்டிருக்கின்றது. போதுமென்ற அளவுக்கு சுழல் பந்து வீச்சாளர்கள் அந்த அணிக்குத் தற்போது கிடைத்துள்ளனர். இம்ரான் தகீர், பீற்றர்ஸன், போத்தா என்று சிறப்பான சுழல் பந்து வீச்சாளர்களின் பட்டியல் உள்ளது.

நியூஸிலாந்து அணிக்கு நெருக்கடி கொடுக்கும் விதத்தில் ஆடுவதற்குத் தென்னாபிரிக்கா தயாராகவே உள்ளது. துடுப்பாட்டத்தில் முன்னர் இருந்ததைப் போல்அல்லாவிட்டாலும் தற்போதும் சிறப்பாகவே அந்த அணி செயற்பட்டுவருகின்றது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் முதல் இறுதி வீரர்கள் வரை எவருமே சிறப்பாக ஆடும் நிலையில் இருக்கின்றனர். வெற்றி வாய்ப்புக்களும் தென்னாபிரிக்காவுக்குச் சார்பாகவே உளளன.

எல்லாவற்றுக்கும் மேலாக இன்றைய ஆடுகளத்தைப் பொறுத்த வரையில் நாணயச் சுழற்சி என்பது முக்கிய பங்கு வகிக்கும். காரணம் முதலில் துடுப்பெடுத்தாடும் அணியினரால் இந்த மைதானத்தில் அதிகளவான ஓட்டங்கள் குவிக்க முடியாது. இந்த மைதானத்திலேயே பங்களாதேஷ் இரண்டு தடவைகள் குறைவான ஓட்டங்களுக்கு (58- மே.தீவுகளுக்கு எதிராக, 78- தென்னாபிரிக்காவுக்கு எதிராக) ஆட்டமிழந்தது. எனவே நாணயச் சுழற்சியில் வெற்றி பெறும் அணியின் கைகளுக்கு வெற்றி செல்வதற்கான வாய்ப்புக்களும் இருக்கின்றன. இருப்பினும் இந்த மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளின் அணித்தலைவர் சமி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றுத் தவறான முடிவை தேர்வு செய்தமையால் வந்த வினையை இப்போது அறிந்திருப்பார்.

தென்னாபிரிக்கா எவ்வளவு அதிஷ்டமான அணி என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். எனவே இன்றைய ஆட்டத்தில் அதிஷ்டமும் விளையாடுவதால் எந்த அணி வெற்றி பெறும் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

## அச்சம் என்பது எமக்கில்லை

உலகக் கிண்ண அரை இறுதி ஆட்டத்துக்கு பாகிஸ்தான் தகுதி பெற்றுள்ளது. பாகிஸ்தான் இறுதி ஆட்டத்திலும் விளையாடும் என ரசிகர்கள் பெரும்பாலும் எதிர்பார்க்கின்றனர். எனவே இந்த ஆட்டத்தைக் காணும் நோக்கத்துடன் பாகிஸ்தான் ரசிகர்கள் ஏராளமானோர் இந்தியா வர விசா கேட்டு விண்ணப்பித்து உள்ளனர்.

இதில் 5 ஆயிரம் பேருக்கு இந்தியா வர விசா வழங்கப்பட்டு உள்ளது. அவர்களில் பலர் பங்களாதேஷ், இலங்கை நாடுகளுக்குச் சென்று கால் இறுதி, அரை இறுதி ஆட்டங்களைப் பார்த்து விட்டு இந்தியா வர திட்டமிட்டு உள்ளனர்.

பலர் இறுதி ஆட்டத்தை மட்டும் பார்க்க வருகின்றனர். அவர்கள் இறுதி ஆட்டத்துக்கான டிக்கெட் வைத்திருந்தால் மட்டுமே விசா வழங்கப்படுகிறது. ரசிகர்களோடு ரசிகர்களாக தீவிரவாதிகள் வந்து விடக் கூடாது என்பதால் கடும் பரிசீலனைக்குப் பிறகே விசா கொடுக்கப்படுகிறது.

மேலும் பாகிஸ்தான் அணித்தலைவர் அப்ரிடி அந்த நாட்டுத் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

உலகக் கிண்ணப் போட்டியின் அரை இறுதி, இறுதி ஆட்டங்கள் இந்தியாவில் நடக்கிறது. நாங்கள் இந்தியாவில் விளையாடத் தயாராகி விட்டோம். பாதுகாப்பு குறித்து எங்களுக்கு எந்தப் பயமும் இல்லை - இவ்வாறு அவர் கூறினார். (15)

## வேதனையளிக்கின்றது மேற்கிந்தியத் தீவுகள்

உலகக் கிண்ண ஆட்டங்களின் முதல் காலிறுதி ஆட்டத்தில் நேற்று முன்தினம் மேற்கிந்தியத்தீவுகள் பாகிஸ்தான் அணிகள் மோதியது. இதில் பாகிஸ்தான் அணி பத்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது.

தோல்வி குறித்து மேற்கிந்தியத்தீவுகளின் பயிற்சியாளர் கிப்சன் கூறியதாவது:

இந்தத் தோல்வி மிகவும் துரதிஷ்டவசமானது. கடந்த 10 வருடங்களாக அணி நிலைமையில் எந்தவித முன்னேற்றமும் இல்லை.

அதே வீரர்களுடன் ஆடி வருகிறோம். மூத்த வீரர்கள் யாருமே ஒழுங்காக விளையாடவில்லை. இது அவர்கள் மீது நான் குற்றம் சொல்வதாக அர்த்தமில்லை. உண்மை நிலை இதுதான்.

மூத்த வீரர் என்றால் சச்சின் போன்று இருக்க வேண்டும். ஒவ்வொரு ஆட்டத்திலும் அவர் ஓட்டங்கள் குவித்து மிரளச் செய்வார்.

தற்போதுள்ள நிலையில் அணியை வலுப்படுத்த வேண்டுமென்றால் களையெடுக்க வேண்டும். முக்கியமான முடிவுகளை அதிரடியாக எடுக்க வேண்டும்.

அப்போது தான் பாகிஸ்தானுக்கு எதிராக உள்ளூரில் [illegible] முடியும். [illegible] பலர் நம்பிக்கை அளிக்கும் விதமாக ஆடினர் என்றார். (15)




| அதிகூடிய ஓட்டங்கள் | M | R | 50s | 100s | H.S | Avg. |
|---|---|---|---|---|---|---|
| சச்சின் (இந்தியா) | 07 | 379 | 01 | 02 | 120 | 54.14 |
| சங்கக்கார(இலங்கை) | 06 | 363 | 02 | 01 | 111 | 121.00 |
| சேவாக் (இந்தியா) | 07 | 342 | 01 | 01 | 175 | 57.00 |

| அதிகூடிய விக்கெட்டுக்கள் | M | W | Best |
|---|---|---|---|
| அப்ரிடி (பாகிஸ்தான்) | 07 | 21 | 05/16 |
| சகீர்கான்(இந்தியா) | 07 | 17 | 03/20 |
| பீற்றர்ஸன் (தென்னாபிரிக்கா) | 06 | 14 | 04/12 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த உலகக் கிண்ணத்தில் இதுவரை...

* உலகக் கிண்ணப் போட்டிகளில் 6 சதங்கள் அடித்த ஒரே வீரர் என்ற சாதனையை எட்டியுள்ளார் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கார். உலகக் கிண்ண போட்டியில் 2,000 ஓட்டங்களை கடந்த முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றார் சச்சின்.

* அயர்லாந்து வீரர் கெவின் ஓ பிரெய்ன் 50 பந்துகளில் சதமடித்து ஆகக் குறைந்த பந்துகளில் சதம் அடித்த வீரர் என்ற பெருமையைப் பெற்றார். இதற்கு முன் ஆஸ்திரேலியாவின் ஹைடன் 66 பந்துகளில் சதமடித்ததே சாதனையாக இருந்தது.

* உலகக் கிண்ண போட்டிகளில் அதிக ஆட்டங்களில் விளையாடியவர் என்ற பெருமையைப் பெற்றார் ஆஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் (45 ஆட்டங்கள்).

* இந்த உலகக் கிண்ண போட்டியில் கென்யாவுக்கு எதிராக 'ஹட்ரிக்' விக்கெட் வீழ்த்தியதன் மூலம் உலகக் கிண்ண வரலாற்றில் இரு முறை 'ஹட்ரிக்' சாதனை நிகழ்த்தியவர் என்ற சாதனையை எட்டினார் இலங்கையின் லசித் மலிங்க.

* இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் இரண்டாவதாக துடுப்பெடுத்தாடி 329 ஓட்டங்களை எட்டிப் பிடித்து வெற்றிபெற்றது அயர்லாந்து. இதுவே உலகக் கிண்ண வரலாற்றில் ஒரு அணி கலைத்த அதிக ஓட்டங்கள் ஆகும்.

* பெங்களூரில் நடைபெற்ற இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 676 ஓட்டங்கள் குவிக்கப்பட்டது. இந்த ஆட்டம் சமநிலையில் முடிந்தது. இதுவே உலகக் கிண்ண வரலாற்றில் குவிக்கப்பட்ட அதிகபட்ச ஓட்டங்களாகும்.




* சிம்பாப்வேக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கையின் டில்ஷான்-தரங்க ஜோடி முதல் விக்கெட்டுக்கு 282 ஓட்டங்கள் குவித்து புதிய சாதனை படைத்தது.

* உலகக் கிண்ண வரலாற்றில் சதம் அடித்த இளம் வீரர் என்ற பெருமையைப் பெற்றார் அயர்லாந்தின் போல் ஸ்டிரிலிங் (20 வயது).

* 30 ஆட்டங்களில் நாணயச் சுழற்சியில் வென்ற அணித்தலைவர்கள் துடுப்பாட்டத்தையே தேர்வு செய்தனர். 12 ஆட்டங்களில் மட்டுமே களத்தடுப்பு முதலில் தேர்வு செய்யப்பட்டது. 22 ஆட்டங்களில் முதலில் துடுப்பெடுத்தா டிய அணியும், 18 ஆட்டங்களில் இரண் டாவது துடுப்பெடுத்தாடிய அணியும் வாகை சூடியுள்ளன.(15)

* இங்கிலாந்து அணியின் சகலதுறை ஆட்டக்காரர் போல் கொலிங்வூட் உலகக் கிண்ண போட்டி முடிந்ததும் முழங்கால் மூட்டு காயத்துக்கு அறுவை சிகிச்சை செய்து கொள்ளப் போவதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனால் ஐ.பி.எல் ரி-20 தொடரில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக அவர் களமிறங்குவது கேள்விக்குறி யாகி உள்ளது.

* ஆஸ்திரேலியா - சிம்பாப்வே அணிகளிடையே அஹமதாபாத்தில் பெப் ரவரி 21 ஆம் திகதி நடந்த லீக் ஆட்டத்தில், 'மட்ச் பிக்சிங்' நடந்ததா என்பது பற்றி சர்வ தேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி) ஊழல் தடுப்புக் குழு ஆய்வு செய்து வருவதாக வெளியான தகவலை ஐ.சி.சி தலைமை செயலதிகாரி ஹாரூன் லார்கட் மறுத்துள்ளார். கற்பனையான செய்திகளை நம்ப வேண்டாம் என அவர் தெரிவித்துள்ளார்.

* இந்தியா - தென்னாபிரிக்க அணிகளிடையே நடந்த 'பி' பிரிவு லீக் ஆட்டத்தை, இதுவரை இல்லாத அளவுக்கு மிக அதிகமான ரசிகர்கள் இணையதளத்தில் பார்த்து ரசித்ததாக புள்ளி விவரம் தெரிவிக்கிறது. இந்த போட்டியின் நேரடி ஒளிபரப்பை 30 லட்சம் பேர் 'கிளிக்' செய்து பார்த்திருப்பது தெரியு வந்துள்ளது.


(15)

## சூதாட்டத்தில் இந்தியா கிண்ணம் வென்றது

டில்லி,மார்ச் 25

தற்போது நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டியை முன் வைத்து சூதாட்டங்கள் பரபரப்பாக நடந்து வருகின்றன. எந்த அணி வெற்றி பெறும் என்று பலர் பந்தயங்கள் கட்டுகின்றனர். இதில் இந்திய அணிக்கே உலகக் கிண்ணம் கிடைக்கும் என்று அதிகம் பேர் பந்தயம் கட்டி வருகின்றனர்.

அதற்கு அடுத்த இடத்தில் தென்னாபிரிக்கா உள்ளது. 3 ஆவது இடத்தில் இலங்கை உள்ளது. தற்போது பாகிஸ்தான் அணிக்கு சாதகமாக பந்தயம் கட்டுவதும் அதிகரித்து உள்ளது. (15)




மகிழ்ச்சி: பாகிஸ்தான் - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றதைக் கொண்டாடும் ரசிகர்கள்.

## சச்சினின் பதிலடி



அஹமதாபாத்,மார்ச் 25

சென்னையில் நடந்த லீக் ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவு வீரர் ராம்போல் வீசிய பந்தில் ஆட்டமிழந்த சச்சின் நடுவர் முடிவை எதிர்பார்க்காமல் தானாகவே களத்தை விட்டு வெளியேறினார்.

நடுவர் ஆட்டமிழப்புக் கொடுக்க மறுத்தும் அதை கவனிக்காமல் சச்சின் வெளியேறியது அனைவரது வரவேற்பையும் பெற்றது. அதே சமயம் ஆஸ்திரேலிய அணித் தலைவர் பொன்டிங் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் துடுப்பு மட்டையில் பந்து பட்டும் வெளியே போகவில்லை. இது விமர்சனத்தை ஏற்படுத்தியது.

இந்த விவகாரங்கள் தொடர்பாக பொன்டிங் கூறியதாவது:

நடுவர் முடிவை சச்சின் பார்க்கவில்லை என்று நான் நினைக்கிறேன். அதை பார்த்திருந்தால் அவர் வெளியேறி இருக்க மாட்டார். இதுவும் ஆட்டத்தில் ஒரு பகுதி தான். நான் எப்போதும் நடுவர் முடிவுக்காக காத்திருப்பேன். எனது அணித்தலைமை பதவி குறித்து பல விமர்சனங்கள் எழுகின்றன. எனது துடுப்பாட்டம் சரியில்லை. அதனால் அப்படி பேசுகிறார்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இது குறித்து சச்சின் கூறியதாவது:

அஹமதாபாத்தில் நேற்று முன்தினம் பயிற்சி முடித்து வெளியேறிய சச்சினிடம் சென்னை ஆட்டத்தில் ராம்போல் வீசிய பந்து உங்கள் மட்டையில் பட்டது என்று நீங்கள் இப்போதும் நினைக்கிறீர்களா? என்று கேள்வி கேட்கப்பட்டது.

அதற்கு உடனடியாக பதில் அளித்த சச்சின் அப்படியானால் என்னை பைத்தியக்காரன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? என்று திருப்பிக்கேட்டார்.

**பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்**

துர்க்கா புத்தகசாலை
சுன்னாகம்.

ரூபன் பல்பொருள்
அளவெட்டி.

இணுவில் பத்திரிகை
முகவர்
இணுவில்.

இந்திரா பல்பொருள்
வாணிபம்
வேலணை.

அம்பாள் பல்பொருள் வாணிபம்
புங்குடுதீவு.

கந்தசாமி கடை
காரைநகர்.

சிறிமுருகன் களஞ்சியம்
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை

மலர் கடை
இளவாலை.

நகுலேந்திரன் பல்பொருள்
வாணிபம்.
முழங்காவில்.

அன்பரசன் புத்தகசாலை
ஒட்டுசுட்டான்.

மதுரா ரெயிலர் கடை
நாச்சிக்குடாச் சந்தி
முன்பாக, நாச்சிக்குடா.

உதயன் அலுவலகம்
கரடிப்போக்குச் சந்தி.

சூரியா பார்மஸி.
அச்சுவேலி.

கிருபா போட்டோ
மல்லாகம்.

**பருத்தித்துறையில்**
கண்ணன் போட்டோ
கவிதா ஸ்ரோர்ஸ்

**நெல்லியடியில்**
மொடோன் ஸ்ரோர்ஸ்
ராஜலக்சுமி புத்தகசாலை
சதா பொன்ஸ்

**மந்திகையில்**
நாவலர் புத்தகசாலை

**உடுப்பிட்டியில்**
ரஜினி பீடா

**வல்வெட்டித்துறையில்**
கலைச்சோலை பான்சி கவுஸ்

**தென்மராட்சியில்**
அருள்நாயகி புத்தகசாலை
மணியம் ஸ்ரோர்ஸ்
ஸ்ரீ கருணா மல்ரி சொப்
கஜனன் மல்ரி சேர்விஸ் சென்ரர்
அல்லாரை ஆர்.டி.
உதயன் காரியாலயம்
சிறீராம் மல்ரி சென்ரர்

**கிளிநொச்சியில்**
பிள்ளையார் புத்தகசாலை
அறிவுநதி புத்தகசாலை
சோமசுந்தரம் மல்ரி சென்ரர்
புவனேஸ்வரி புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்றைய ஆட்டம்**
மிர்பூர் - பி.ப.2.30
தென்னாபிரிக்கா - நியூஸிலாந்து



**உங்கள் நட்சத்திரங்களின் வர்ணப் படங்கள் இணைந்திருங்கள் உங்கள் உதயனுடன்**



# இலங்கை கிண்ணம் வெல்வது உறுதி



கொழும்பு,மார்ச் 25

இலங்கை அணிக்கு உலகக் கிண்ணம் வெல்லும் வாய்ப்பு அதிகம் உள்ளது என முன்னாள் அணித் தலைவர் அர்ஜுனா ரணதுங்க நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷில் பத்தாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடக்கிறது. கொழும்பில் உள்ள பிரேமதாசா மைதானத்தில் நாளை நடக்கும் 4 ஆவது காலிறுதியில் இலங்கை, இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன.

இது குறித்து கடந்த 1996 இல் இலங்கை அணிக்கு உலகக் கிண்ணம் பெற்றுக் கொடுத்த அர்ஜுனா ரணதுங்க கூறியதாவது:

லீக் சுற்றில் இலங்கை அணி சிறப்பாக செயல்பட்டது. இது அடுத்து வரவுள்ள 'நொக்அவுட்' சுற்றிலும் தொடரும் என நம்புகிறேன். இந்த முறை இலங்கை அணிக்கு உலகக் கிண்ணம் வெல்லும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

இதற்கு காலிறுதி மற்றும் அரையிறுதிப் ஆட்டங்களை சொந்த மண்ணில் விளையாட இருப்பது சாதகமான விஷயம். ஆசிய மண்ணில் இலங்கை அணியினர் சிறப்பாக விளையாடக் கூடியவர்கள். எனவே எங்கு விளையாடுகிறோம் என்பது பெரிய கவலை அளிக்காது.

ஏனெனில் கடந்த 1996 இல் கிண்ணம் வென்ற இலங்கை அணி காலிறுதி ஆட்டத்தை பைசலாபாத்திலும், அரையிறுதி ஆட்டத்தை கொல்கத்தாவிலும் விளையாடியது. இங்கிலாந்து வீரர்கள் சுழலில் திணறக் கூடியவர்கள். இருப்பினும் இங்கிலாந்தின் அணித் தலைவர் ஸ்ரோரஸ், ரொரட் உள்ளிட்டோர் துடுப்பாட்டத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

எனவே இவர்களுக்கு மிகுந்த கவனமுடன் பந்துவீச வேண்டும். முரளிதரன், மெண்டிஸ் உள்ளிட்ட திறமையான சுழற்பந்து வீச்சாளர்கள் இருப்பது பலம். இந்த ஆட்டத்தில் முன்வரிசை துடுப்பாட்டக்காரர்கள் ஓட்டங்கள் குவிக்கும் வாய்ப்பு உள்ளது.

ஆனால் மத்தியவரிசை கவலை அளிக்கின்றது. இதனை சரி செய்யும் பட்சத்தில் இங்கிலாந்து அணிக்கு வலுவான இலக்கை நிர்ணயிக்கலாம். (15)



கடும் பயிற்சி: இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நாளைய காலிறுதி ஆட்டத்துக்காக பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் மலிங்க, சமரவீர, ஹேரத்.

# எனது இறுதி உலகக் கிண்ணப் பயணம்



அஹமதாபாத்,மார்ச் 25

உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கார். 6ஆவது உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடும் அவருக்கு வெற்றி பெறுவது லட்சியமாக உள்ளது. தற்போது நடைபெறும் போட்டி தனது வாழ்க்கையில் மிக முக்கியமான போட்டி என்று டெண்டுல்கார் கூறியுள்ளார். இதை அவர் தனக்கு நெருக்கமான நண்பர்களிடம் தெரிவித்தும் உள்ளார்.

ஒவ்வொரு வீரரும் சரியாக ஆட வேண்டும். எனது பணியையும் நான் சிறப்பாக செய்ய வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். 1992, 1996, 1999, 2003, 2007 ஆம் ஆண்டு நடந்த போட்டியில் டெண்டுல்கார் ஆடியுள்ளார்.

இதில் 1996, 2003 ஆம் பேர்ட்டிகளில் அரை இறுதி வரை சென்று இந்திய அணி தோற்றது. இந்தப் போட்டித் தொடரில் டெண்டுல்காரின் பங்களிப்பு முக்கியத்துவம் பெற்றதாகவே இருந்தது. (15)

**தினமொரு பரிசுப் போட்டி**

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நாளைய (26.03.2011) ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி எது?

..............................................

பெயர் : ..............................................

தே.அ.இல : ..............................................

முகவரி : ..............................................

..............................................

இந்தக் கேள்விக்கான விடையை இந்தக் கூப்பனில் எழுதி நாளை (26.03.2011) பிற்பகல் 2 மணிக்கு முன் தினமொரு பரிசு, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குத் தபாலிலோ அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கவும்.

பங்குபற்றுங்கள் போட்டிகளில் வென்றுகொள்ளுங்கள் பணப்பரிசில்களை

வெல்லுங்கள் 1 1/2 லட்சம் ரூபா பணப் பரிசு

உதயன் வழங்கும்

1ஆம் பரிசு

2ஆம் பரிசு

எட்டமுடியாத லட்சங்கள் உங்களுக்காக

1 லட்சம் ரூபா பணப் பரிசு

Click GATEWAY CENTRE JAFFNA 4 1/2 லட்சம் ரூபா வழங்கும் பெறுமதியான பரிசுக் கூப்பன்கள்
48 பேருக்கு தலா 9 ஆயிரம் ரூபா பெறுமதியானவை

காலிறுதிப் போட்டிக்கான பரிசில்கள்

கம்ப்யூட்டர் ருடே வழங்கும்
தினமும் வெல்லும் ஒருவருக்கு ஒரு வருடத்துக்கான கம்ப்யூட்டர் ருடே இலவச சந்தா

உதயன் வழங்கும்
தலா 10 ஆயிரம் வீதம் 5 பேருக்கு.

உங்களுக்காகவே காத்திருக்கின்றன லட்சங்கள்.

மாபெரும் இறுதிப் போட்டி 10 ஆறுதல் பரிசுகள்
அள்ளுங்கள் ஆறுதல் பரிசில்களை

SINGER PLUS
No.01 STANLY ROAD JAFFNA.வழங்கும் EGG BEATER

SINGER
HOSPITAL ROAD JAFFNA.வழங்கும் FAN

SINGER PLUS
CHUNNAKAM. வழங்கும் FAN

SINGER PLUS
NELLIYADEY. வழங்கும் FAN

SINGER PLUS
CHAVAKACHCHERI. வழங்கும் TOASTER

PC SOLUTION
KASTHURIYAR ROAD JAFFNA. வழங்கும் COLOUR PRINTER

PC POWER UNIT
LUXAN PLAZA KASTHURIYAR ROAD. வழங்கும் Rs. 5000 GIFT VOUCHER

BARANABAS
247, Stanly Road, Jaffna. வழங்கும் SINSUNG DVD PLAYER

சரவணா ரெக்ஸ்
770, 772, கே.கே.எஸ் வீதி, (துட்டாதெருச் சந்தி யாழ்ப்பாணம்.
Rs. 5000 GIFT VOUCHER

கிருபா லேணர்ஸ்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Rs. 5000 GIFT VOUCHER

**போட்டி விதிகள்**

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தே.அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் தே.அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம். உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்களோ அவர்களது குடும்பத்தவர்களோ போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி உதயனில் அறிவிக்கப்படும். சகல போட்டிகளுக்குமான பெயர்களை இடது மேல் மூலையில் குறிப்பிட்டு, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் சேர்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வெளியீடு, சம்பந்தர் விருது வழங்கல் இரு நிகழ்வுகளும் ஞாயிறன்று ஆதீனத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 25

2009 ஆம் ஆண்டுக்கான சம்பந்தர் விருது வழங்கும் நிகழ்வும் அமரர் திருமதி பூரணபாக்கியம் சங்கரின் முதலாம் ஆண்டு நினைவாக சுதந்திரனில் வெளியான 10 சிறுகதைகளின் தொகுப்பு நூல்வெளியீட்டு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் 2009 ஆம் ஆண்டுக்கான சம்பந்தர் விருதைப் பேராசிரியர் வி.விசாகரூபன் எழுதிய 'ஈழத்தின் தமிழ் நாவல்கள் நாட்டார் பண்பாட்டுக் கூறுகள் பயில் நிலையும் பயன்பாடும்' என்ற நூல் பெற்றுக் கொள்கிறது.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, பேராசிரியர் கி. விசாகரூபன் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளன.

நூல் வெளியீட்டுரையை இ.சங்கரும் ஆய்வுரையை பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸும் நிகழ்த்தவுள்ளனர்.

வரதர், வ.அ.இராசரத்தினம், எஸ்.பொன்னுத்துரை, புதுமைலோலன், தேவன், சிற்பி, அன்புமணி, செங்கை ஆழியான், செம்பியன்செல்வன், நவசோதி ஆகியோர் சுதந்திரன் பத்திரிகையில் எழுதிய சிறுகதைத் தொகுப்பே நூலாக வெளியிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-9)

# ஜப்பானில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கையிலிருந்து தேயிலைப் பைக்கற்

கொழும்பு, மார்ச் 24

ஜப்பானில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான தேயிலைப் பைக்கற்றுக்களை இலங்கை அரசு ஜப்பானுக்கு அனுப்பிவைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

பாதிப்புக்குள்ளாகியுள்ள ஜப்பானிய மக்களின் பாவனைக்காக 60 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான 30 இலட்சம் தேயிலைப் பக்கற்றுக்களை அனுப்பி வைப்பதற்கான நட வடிக்கை களை அரசு மேற்கொண்டுவருகிறது. அண்மையில் ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் ஆழிப் பேரலைப் பேரனர்த்தம் காரணமாகப் பெரும் உயிரிழப்புக்களும் சொத்திழப்புக்களும் ஏற்பட்டிருந்தன.

அந்த மக்களுக்கு இலங்கை அரசினால் வழங்கக்கூடிய அனைத்து உதவிகள் ஒத்தாசைகளைப் புரிவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வந்துள்ளார். அதற்கமைய ஜனாதிபதியினால் விடுக்கப்பட்ட கோரிக்கையினை அடுத்து இலங்கையின் தேயிலை ஏற்றுமதியாளர் சங்கத்தினால் 30 லட்சம் தேயிலைப் பக்கற்றுக்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 21 ஆம் திகதி இலங்கைத் தேயிலை ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் ஜயந்த கேரகாவினால் அலரிமாளிகையில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இவை கையளிக்கப்பட்டுள்ளன.

(எ-22)

# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 25

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் பாடசாலை அதிபர்கள் உதயனுக்கு அனுப்பிவைத்துள்ள பெறுபேற்று விவரங்கள் வருமாறு:

**ஏழாலை மகாவித்தியாலயம்**

ஜென்சி சிவபாதம்- 6ஏபி2சி, ஜான்சிகா ரவிச்சந்திரன்- 2ஏ2பி4சிஎஸ், வினோஜினி ஜெகதீஸ்வரன்- 3ஏபிசி2எஸ், நித்தியா செல்வராசா- ஏபிசி4எஸ், கனிஸ்ரா பிறேமதாஸ்- ஏ4சி3எஸ்.

**நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி**

த.தபீந்திரன்- 8ஏபி, த.டினுஜன்- 5ஏ3எஸ், ஜெ.ஜெயகீர்த்தன்- 4ஏபி, தே.சந்துரு- 4ஏபி3சிஎஸ், பே.டிவாகரன்- 3ஏ2பி3சிஎஸ், தி.ஜெகன்- 3ஏ3பி, க.கயல்விழி- 3ஏபிசி3எஸ், ந.பவிதா- 3ஏபி4சிஎஸ், சி. சஞ்சீவன்- 2ஏபி4சிஎஸ், ந. மிருசா- 2ஏபி3சி3எஸ், க.தர்ஷந்தினி- 2ஏபி2சி3எஸ்.

**வல்வை சிவகுரு வித்தியாசாலை**

ஞானரத்தினம் வசந்தகுமார்-2ஏ2பி3சி2எஸ், ரவீந்திரசிகாமணி குகன்- 2ஏபி2சி3எஸ், பவிதா விக்கேஸ்வரன்- 2ஏ2சி5எஸ், வினோதா விஜயகுமார்- ஏ3பி3சிஎஸ், திவ்வியா பிறேமதாஸ்- ஏ2பி2சி4எஸ், செல்வராசா தமிழரசன் ஏபி2சி3எஸ், சிவஞானம் நிரோஜன்- 2பி3சி 2எஸ், சிவசோதி சாம்ஜெயவேல்- பி4சி4எஸ், முத்தவன் நிஷாந்தன்- பி3சி4எஸ், பாலச்சந் திரன் கேதீசன்- பி2சி3எஸ்.

**வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி**

விஜிதா திருநாவுக்கரசு- 7ஏ2பி, கஜரூபனா தியாகராஜா-6ஏ3பி, கஸ்தூரி விஜயரட்ணம்- 2ஏபி2சி3எஸ், கல்யாணி விஜயரட்ணம்- ஏபி4சி2எஸ், சிறீநேதாஜி நிதர்சன்- 2ஏ5சிஎஸ், குகேந்திரம் லக்ஷ்மன்- 4ஏபி2சி2எஸ், மோகனதாஸ் மயூரன்- ஏ3பி5சி, ஜெகரட்ணம் பிரகதீஸ்வரன்- ஏபி4சிஎஸ், செல்வராசா ராஜேந்திரன் ஏ2பி4 சிஎஸ், கணேசரட்ணம் சதீஸ்காந்- பி, 3சி2எஸ், குணசுகி சண்முகலிங்கம்-3ஏ4சிஎஸ், ஜெகநாதன் அஜந்தன்- ஏ2பி2சி2எஸ், மகாலிங்கம் நிரோஷாந்- 3சி3எஸ்.

**இணுவில் மத்திய கல்லூரி**

பாஸ்கரன் பவித்திரன் 7ஏ2பி, கஜந்தா தவரட்ணம்- 4ஏ3பி2சி, கோகுலவர்த்தனி சிவசுப்பிரமணியம்- 4ஏ2பி3சி, யாழினி கதிர்காம ஈஸ்வரன் - 4ஏ2பி3 சி, செல்வநாயகம் கிசோநாத்- 4ஏபி2சி எஸ், தங்கராசா தமிழ்ச்செல்வன்- 3ஏ2பி2சி எஸ், மகேந்திரன் மதுகுலன் - 3ஏபி2சி 2எஸ், அலைமகள் சிவபாலன்- 3ஏபி2 சி2எஸ், வரதலிங்கம் மாதுளன்- 3ஏபி 2சிஎஸ்.


# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

**திரு.திருமதி பரணீதரன் ஷோபிகா தம்பதிகளின்**

செல்வப்புதல்வன் **ஹரிஷ்** தனது முதலாவது பிறந்தநாளை இன்று(25.03.2011) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

*இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமா, அத்தை, மச்சாள் மற்றும் அப்பப்பாமார், அப்பம்மாமார், அம்மப்பா, அம்மம்மாமார், மாமா, மாமிமார், பெரியப்பா, பெரியம்மாமார், சித்தப்பா, சித்திமார் மற்றும் உற்றார், உறவினர் யாவரும் ஹரிஷ் நுணாவில் வைரவப்பெருமான் அருள் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.*




அப்பப்பா, அப்பம்மா
நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

(49,20,22)


# தவக்காலச் சிந்தனை

## உண்மையே எம் வாழ்வின் மையம்

மனித வாழ்வில் மிக முக்கியமான ஒரு விழுமியம் உண்மையாகும். மானிடம் வளரவும் மனிதம் தளைக்கவும் எம் வாழ்வுக்கு உண்மையையே கவசமாக அணிந்து கொள்ள வேண்டும். ஒருவன் உண்மைத்தன்மையுடன் நடப்பான் எனில் அதுவே அவனை எச்சந்தர்ப்பத்திலும் காக்கும்.

ஒரு கிராமத்தில் ஒரே வயதுடைய இரு மாணவர்கள் வசித்து வந்தனர். ஒருவன் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவன். இன்னொருவன் உணவு உண்பதற்குக் கூட முடியாதளவு வறுமைக்குடும்பத்தைச் சேர்ந்தவன். இருவரும் சென்று கொண்டிருந்த வேளையில் ஏழை மாணவன் கையில் ஒரு பணப்பொதிகிடைக்கின்றது. இதைக்கண்ட மற்றவன் ''நாம் இருவரும் தானே வந்தோம். சரிசமமாகப் பிரித்துக் கொள்வோம்'' என்றான். ஆனால் ஏழை மாணவனின் மனம் அதற்கு இணங்கவில்லை. இருவருக்குமிடையில் பிரிவு ஏற்பட்டு அவர்களின் நட்புத் துண்டிக்கப்பட்டது. ஏழைமாணவன் பொலிஸ் நிலையம் சென்று பணத்தைஒப்படைக்கிறான். உரியவர் அதைப்பெற்று கொண்டார். தகுந்த சன்மானத்தையும், நற்புகழை யும் பெற்றான் ஏழைமாணவன். இதை அறிந்து கொண்ட நண்பன் தன் தீய எண்ணத்தையும் தன் பிழையையும் உணர்ந்து மன்னிப்பு வேண்டி ஒப்புரவு செய்து மீண்டும் நட்புத்தொடர்ந்தது.

இச்சிறிய சம்பவத்தின் மூலம் மனிதர்கள் நாம் அனைவரும் பலவீனர்கள் என்பதை உணருகின்றோம். நாம் உலகத்தின் மேல் கொண்ட நாட்டங்களினால் தீமையை நாடிச் செல்கின்றோம். எம் அன்றாட சிறு செயற்பாட்டிலும் உண்மைத் தன்மை காணப்பட வேண்டும். ஓர் உண்மை சொல்லி மடிவதை விட பொய் சொல்லிப் பிழைப்பது எவ்வளவு இழிவான செயல் என்பதை நாம் உணருவோம். உண்மை என்பது மனிதனுடைய மனதில் எழும் நல்லதொரு பண்பு. ஒருவனை நல்ல பாதையிலே அழைத்துச் செல்லும் உண்மைத்தனம் காணப்பட்டால் பிளவுகள் ஏற்படாது. நாமும் எம் வாழ்விலும் சரி, பிறர்வாழ்விலும் சரி, குடும்பம், சமூகம், நாம் வாழும் வீடு என்ற பல்வேறுபட்ட இடங்களிலும் சரி உண்மைத்தன்மையுடன் வாழவேண்டும். பிழைசெய்யும் நாம் எம் பிழைகளை ஏற்று, மாற்றங்கள் முன்னிலையில் உண்மைத்தனமுடைய மனிதர்களாக வாழவேண்டும். அதனை உள்ளத்தால் மட்டு மல்ல எம் செயல்களாலும் வெளிப்படுத்தவேண்டும்.

ம. றொஷாந்தி,
*நாவாந்துறை.*


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

**சீட்டிழுப்பு இல. 2210 திகதி 23-03-2011**

ஆங்கில எழுத்திற்கும் J

வெற்றி எண்கள் 11 28 37 38

போனஸ் இல: 49

ஜக்பொட் பரிசு ரூ. **17,370,075/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 209002 | 20/- | 4,180,040/- |
| 2 இல | 14985 | 100/- | 1,498,500/- |
| 3 இல | 315 | 1,000/- | 315,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8345 | 40/- | 333,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 545 | 1,000/- | 545,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 13 | 10,000/- | 130,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 17,370,075/- | - |
| 1 இல + போனஸ் இல | 9871 | 100/- | 987,100/- |
| 2 இல + போனஸ் இல | 468 | 500/- | 234,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 416 | 200/- | 83,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 22 | 1,500/- | 33,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,739,640/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 243997 | | 10,339,640/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கண்டி | 202966522-7-30 |
| கம்பஹா | 202971342-7-25 |
| மொனராகலை | 202964852-1-12 |
| கொழும்பு | 202979260-7-19 |
| யாழ்ப்பாணம் | 202987645-7-13 |
| களுத்துறை | 202980948-6-13 |
| கம்பஹா | 202985180-9-04 |
| கேகாலை | 202968841-4-31 |
| குருநாகல் | 202962992-4-49 |
| புத்தளம் | 202964025-7-16 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 17,940,300/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் தலைமைத்துவமும் துணியுமா?

இலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளில் ஒன்றும், நாட்டின் மூத்த கட்சிகளில் ஒன்றுமான ஐக்கிய தேசியக் கட்சியில் நிலவிய தலைமைத்துவப் போட்டி தணிந்து புதிய நிர்வாகிகள் நியமனம் - தெரிவு - சுமுகமாக நடைபெற்று முடிந்துள்ளது. கட்சிகள், சங்கங்கள் என்ற அமைப்புகளில் பதவிப் போட்டிகளும், குத்து வெட்டுகளும், குழிபறிப்புகளும் இந்த நாட்டில் சகஜம்.

இந்த நாடு சுதந்திரம் அடைந்த போது, அகில இலங்கை ரீதியாக செல்வாக்குடன் இயங்கியதே ஐக்கிய தேசியக் கட்சி. சுமார் எட்டு வருடங்கள் தனிக்காட்டு ராஜாவாக விளங்கிய கட்சியை, எஸ்.டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா உடைத்தார். அதன் பின்னர், அரச கட்டிலில் ஏறுவதற்கு அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் கடும் போட்டி நிலவியது. அந்தப் போட்டியில் தத்தமது வாக்கு வங்கிகளை வளர்ப்பதற்காக இருதரப்புகளும் தமிழ் மக்களின் பிரிக்கமுடியாத ஜனநாயக, அரசியல் உரிமைகளைப் பிடுங்கி எடுத்தன, பறித்தன. சிறுபான்மை இனத்தவர் என்பதால் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெரும்பான்மைப் பலம் என்ற கத்திகொண்டு வெட்டி வீழ்த்தின. தமது அரசாட்சிக்கான போட்டியில் தமிழ் மக்களின் அரசியல் சுதந்திரத்தை நீறாக்கினர். இதுவே இலங்கையின் அரசியலில் களேபரங்களுக்கும், தமிழர் மீதான வன் செயல்களுக்கும் அடிகோலின, தூபமிட்டன. இந்த அநியாயத்திலும் அரசியல் அக்கிரமத்திலும் தெற்கின் இரண்டு பிரதான கட்சிகளுக்கும் சமபங்குண்டு.

ஆகையால், ஐக்கிய தேசியக் கட்சியில் கடந்த பல மாதங்களாக நிலைவிய தலைமைத்துவப் போட்டி தீர்ந்து, போனதால் தமிழ் மக்களுக்கு எதுவும் புதிதாக கிடைக்கப்போவதில்லை. கடந்த வாரம் நடை பெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வெறும் ஒன்பது சபைகளின் ஆட்சியை மட்டுமே கைப்பற்றி ஐக்கிய தேசியக் கட்சி மூன்றாவது இடத்தைப் பெற்றது. தம்மைத் திருப்திப்படுத்திக் கொண்டு அக்கட்சியினர் என்ன காரண காரியத்தை கூறினாலும் அக் கட்சிக்கு உண்டான வீழ்ச்சி பெரும் வீழ்ச்சியே.

இத்தகைய ஒரு பின்புலத்தில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்கு நிலவிய போட்டி நீங்கி நிலைமை சுமுகமாக வேண்டிய தேவை உண்டானது. அது நிறைவேறி உள்ளது. அவ்வாறில்லை எனின் அக்கட்சி உடைந்து விழும் நிலைமை ஏற்பட்டிருக்கும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், ரணில் விக்கிரமசிங்கவும், சஜித் பிரேமதாசவும் சட்டியும் பானையும் போன்ற நிலைமையே. ரணில் பிரதமராக பதவிவகித்த காலத்திலும் இனப்பிரச்சினையை தீர்ப்பதில் அவரால் எள்ளளவும் உதவ முடியாத பலவீனமான அரசியலை நடத்தினார்; அவரிடம் இயலாமையே வெளிப்பட்டது. சஜித் பிரேமதாச இளைய தலைமுறையின் தலைவர். அவரது தந்தையார் அதிகாரத்துவப் பலம் மிக்க ஜனாதிபதியாக இருந்த போதிலும், தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் வேண்டிய அக்கறை காட்டாமல் அதனை மேலும் ஆழப் படுத்தியவர். இப்போது அவரது மகன் சஜித் தமிழர் பிரச்சினையை உரிய பரிமாணத்தில் கணக்கில்கொள்ளாத போக்கு உடையவராகவே தென்படுகிறார். அவர் தமிழர் பிரச்சினை குறித்து வெளியிட்டு வந்த கருத்துக்கள் அதனைச் சுட்டி நின்றன.

இந்தப் பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக எவர் பதவிக்கு வந்தாலும், தமிழர் விவகாரத்தில் அக்கட்சியிடம் காணப்படும் ஆற்றாமை நீடிக்கவே செய்யும். அது ஒரு புறமிருக்க -

தென்னிலங்கை அரசியல் புலத்தில் மிகவும் தேய்ந்து போயுள்ள ஐக்கிய தேசியக் கட்சியை மேலும் அமிழ்த்தும் அரசியல் தந்திரோபாயங்களை மஹிந்தா கையாள்வார் என்பது நிச்சயம். அவருடைய ''எறிகணை'' களில் இருந்து தப்புவதற்கான அல்லது தட்டி விடுவதற்கான பலமும் வைராக்கியமும் உள்ள தலைமைத்துவமுமே அக்கட்சிக்குத் தேவைப்படுகின்றது. ஒப்பீட்டளவில் ரணில் அக்கட்சியின் தலைவராகத் தொடர்வதால் கட்சியின் எதிர்காலம் ஓரளவு பரவாயில்லை எனலாம்.

எப்படியோ -

அரசுடன் பிணங்கிப்போவதா இணங்கிப் போவதா என்பதனை நிலைமைக்கு, சூழ்நிலைக்கு ஏற்ப சமயோசிதமாக, புத்திசாலித்தனமாக, தந்திரோபாயங்களுடன் முடிவு செய்யும் தலைமைத்துவம் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தேவை.

சிங்கள மக்களின் பிரச்சினைகள், போதாமைகள் குறித்தும், சர்வதேச மட்டத்திலான பலமான உறவு அல்லது ஆதரவு குறித்தும் அதிக அக்கறை காட்டுவது போன்று, தமிழர் விவகாரத்திலும் முன்னரைப் போன்று ஒளித்துப் பிடித்து விளையாடாமல், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் மட்டுமன்றி, அதன் அங்கத்துவமும் மனமொன்றிச் செயற்படவேண்டும்.

இதுவரை காலமும் தமிழ் மக்களுக்கு இதய சுத்தியுடன் உதவாது சுத்துமாத்துகள் செய்ததைப் புறந்தள்ளி, தமிழர் விவகாரத்தில் புதுப் பாதையில் கால்பதிக்க ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் தலைமைத்துவமும் துணியுமா?

# வலி. வடக்கில் மீள்குடியமர்ந்தோரை நோர்வே தூதுவர் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருக்கும் நோர்வேத் தூதுவர் ஹில்டே ஹரலட்ஸ்டட் வலி.வடக்கில் மீள்குடியமர்த்தப்பட்ட பகுதிகளுக்கு நேற்று வியாழக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டு அங்குள்ள மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

மீள்குடியமர்வுக்கு அனுமதிக் கப்பட்ட இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு, வித்தகபுரம் ஆகிய பகுதிகளுக்குச் சென்ற நோர்வேத் தூதுவர் அங்கு மேற்கொள்ளப் படுகின்ற அபிவிருத்திப் பணிகள் குறித்தும் ஆராய்ந்தார்.

நோர்வே நாட்டின் நிதியுதவியுடன் இளவாலை வடமேற்கில் அமைக்கப்படவுள்ள 50 வீடுகளுக்கான அடிக்கல்லை நட்டு வைத்து பணிகளை ஆரம்பித்துவைத்தார்.

அத்துடன் வசந்தபுரத்தில் அமைக்கப் படவுள்ள முன்பள்ளி, ப.நோ.கூ.சங்கம், பொதுநோக்கு மண்டபம் ஆகியவற்றுக்கான கட்டடப்பணிகளையும் ஆரம்பித்து வைத்தார்.

இங்கு மீள்குடியமர்ந்துள்ள மக்களைச் சந்தித்து அங்கு மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி குறித்தும் கேட்டறிந்துள்ளார்.

(ம-9)

# தயாமாஸ்ரர், ஜோர்ஜ் மாஸ்ரர் பற்றிய சட்டமா அதிபரின் அறிக்கைக்கு உத்தரவு

## ஏப்ரல் 25 இல் மீண்டும் வழக்கு விசாரணை

கொழும்பு, மார்ச் 25

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் பணிபுரிந்தவர்களான தயாமாஸ்ரர் மற்றும் ஜோர்ஜ் மாஸ்ரர் ஆகிய இருவர் தொடர்பாகவும் சட்டமா அதிபர் திணைக் களத்தின் அறிவுறுத்தல்களைப் பெற்று விரிவான அறிக்கையொன்றினை நீதிமன்றில் அடுத்த தவணை விசாரணையின் போது தாக்கல் செய்யுமாறு கொழும்பு பிரதம நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிவானுமாகிய ரஷ்மி சிங்கப்புலி புலனாய்வுப் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தயாமாஸ்ரர் என்றழைக்கப்படும் வேலாயுதம் தயாநிதி மற்றும் விடுதலைப்புலிகளின் முன்னாள் மொழிபெயர்ப்பாளர் ஜோர்ஜ் மாஸ்ரர் என்றழைக்கப்படும் வேலுபிள்ளை குமாரு பஞ்சரட்ணம் ஆகிய இருவரும் கடந்த 22 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகி இருந்தனர். ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் தோற்றும்படி அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர். விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத்தலைவரான தமிழினி என்றழைக்கப்படும் சுப்பிரமணியம் சிவகாமியை மே 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். தமிழினி 2009 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம்திகதி பாதுகாப்புப் படையினரால் வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்டார்.

(ப)

# பொது நிகழ்வுகளில் மங்கள விளக்கேற்றல்

உலகுக்கு இன்றி அமையாதது ஒளி. இருளை நீக்கவல்லது என்பதால் இன்பத்தின் அடையாளமாகவும் ஒளியைக் கொள்ளலாம்.

இறைவன் ஒளிவடிவாகத் திகழ்கின்றான். சிவராத்திரியில் வெளிப்பட்ட ஜோதியும் இதற்குச் சான்று. ஒளியைத் தரும் விளக்காக இறைவனை உருவகித்து நம் அருளாளர்கள் பாடியுள்ளனர்.

''ஒளிவளர் விளக்கே உவப்பிலா ஒன்றே'' எனத் திருவிசைப்பாவும்

''சூழொளி விளக்கே'' எனத் திருவாசகமும் இறைவனைப் போற்றுகின்றன.

விளக்கின் பிரசன்னம் இறைவனை நினைவூட்டுவதாகவே கொள்ளப்படுகின்றது. விளக்கைத் தீப லட்சுமியாகக் கருதி வணங்குவதும் ஆலயப் பூசைகளின் போது விளக்குக்கு முதலில் பூசை செய்வதும் இங்கு குறிப்பிட்டுக்காட்டத்தக்கவை.

மங்கள நிகழ்வுகளின் போது தீபமேற்றி இறையாசியுடன் ஆரம்பிக்கின்றோம். நிகழ்வு இன்பத்தைத் தருகிறது என்ற குறியீடாகவும் இதனைக்கொள்ளலாம்.

இறை அம்சமாக விளங்கும் விளக்கை எப்படி ஏற்றுவது என்பது பலருக்குத் தெரிவதில்லை.

காலில் உள்ள பாதணிகளைக் கழற்றிவிட்டு தீபம் ஏற்றும்போது வடக்குத் திசையாகவோ கிழக்குத் திசையாகவோ நின்று ஏற்றுவதே நலமுடையது.

ஞானக்கதிர்

தீபமேற்றல் பண்பாட்டின் அடையாளமாக அமைந்திருக்கும் இந்துசமயிகள் மெழுகுதிரி மூலம் தீபம் ஏற்றுவதைத் தவிர்க்க வேண்டும். இதற்கென ஒரு சிறிய தீபத்தை வைத்து அதன் மூலம் மங்கல விளங்கேற்றுவது நிகழ்வை அர்த்தமுடையதாக்கும். இதனால் ஒவ்வொரு தீபத்துக்கும் ஒவ்வொரு தீக்குச்சியை பயன்படுத்தும் வழக்கத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கலாம்.

சில விழாக்களில் வந்திருக்கின்ற விருந்தினர்களை மகிழ்விப்பதற்காக-மங்கல விளக்கேற்றுதலில் பலரைப் பங்கேற்கச் செய்வதற்காக ஏற்றிய தீபத்தை மீண்டும் அணைத்து மீளத் தீபமேற்றும் பரிதாப நிலையையும் எம் பிரதேசங்களில் காண முடிகின்றது. இவையாவும் தவிர்க்கப்பட வேண்டியவை.

தீபம் ஏற்றும் போது மங்கலச் சொற்களை உபயோகிப்பதும் அவசியமானது. பெரியவர்கள்கூட ''கொளுத்துங்கள், பற்றவையுங்கள்'' என்று பேசிக்கொள்கிறார்கள்.

இவ்வாறான சொற்பிரயோகங்களையும் தவிர்க்க வேண்டும். அத்துடன் ஏற்றிய தீபம், நிகழ்வு நிறைவடையும் வரை ஒளிர்வதை உறுதிப்படுத்த வேண்டும்.

வேற்றுச் சமயிகளும் தற்போது மங்கல விளக்கேற்றல் என்ற நிகழ்வைத் தமிழ் பண்பாட்டுத் தளத்தில் ஏற்றுக்கொண்டு கைக் கொள்கின்றனர். இது மகிழ்வுக்குரியதே.

மங்கல விளக்கேற்றல் என்றும் மங்கள விளக்கேற்றல் என்றும் குறிக்கப்படும் செயற்பாடு, அர்த்தமுள்ளதாக அமைய அனைவரும் முயல்வோம்.

**ச. லலீசன்,**
விரிவுரையாளர். கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்கள், கைகளைக் கட்டிவிட்டு சிகரெட்டினால் சுட்டுத் தாக்கினார்

## கடத்தப்பட்ட இளைஞன் 27 மணி நேரத்தில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 25

என்னைக் கடத்தியவர்கள் எனது கண்களையும் கைகளையும் கட்டிவிட்டு கதறக் கதற முட்கம்பிகளாலும் மரச்சலாகைகளாலும் தாக்கினர். பல தடவைகள் மயங்கி வீழ்ந்த போதும் பல இடங்களில் காயம் ஏற்படுமளவுக்கு சிகரெட்டினால் சுட்டனர். ஒருவர் சிங்கள மொழியில் ஏதேதோ கேள்விகள் சொல்லச் சொல்ல இன்னொருவர் அதனை மொழிபெயர்த்து தமிழில் கேட்டவாறு இருவரும் தாக்கினர்.

இவ்வாறு தெரிவித்தார் லண்டனில் இருந்து வந்திருந்த வேளை இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டு 27 மணித்தியாலங்களின் பின் வயல் வெளியில் வீசப்பட்ட மீசாலை மேற்கைச் சேர்ந்த கதிரவேலு அஜந்தன் (வயது-29) என்ற இளைஞன். அவர் கடத்தப் பட்டுத் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார். இது பற்றி மேலும் தெரியவருவதாவது

குறித்த இளைஞன் கடந்த டிசெம்பர் மாதம் மாணவர் விசாவில் லண்டன் சென்றிருந்தார். இந்த நிலையில் விடுமுறையில் தனது செந்த இடத்துக்கு வந்த அவர் தனது நண்பர் ஒருவரை சந்திப்பதற்காக கடந்த திங்கட்கிழமை யாழ். நகருக்கு வந்தபோது இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார்.

தபாற்கந்தோர் வீதியூடாக ஸ்ரான்லி வீதிக்குச் செல்லும் போது இவருக்கு பின்புறமாக வந்த வெள்ளை வானில் இருந்த இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார். வெள்ளை வானுக்குக் கீழே வீழ்த்தப்பட்டு அவர் அணிதிருந்த ரீசேட்டை கழற்றி அவரது கண்களை கட்டினர். கயிற்றினால் கைகளை பின்புறமாக வைத்துக் கட்டினர். லண்டனுக்கு சென்றதற்கான காரணம், அதற்கான பணம் எவ்வாறு கிடைத்தது, திரும்பி வந்ததற்கான காரணம் என்பவற்றை விசாரித்ததோடு ஒன்லைன் மூலமாகப் பணம் பெற்றுக் கொள்ளும் வங்கி அட்டைகள் பேர்ஸ் என்பவற்றையும் எடுத்து வைத்து வங்கியில் எவ்வளவு பணம் உள்ளது என்று கேட்டனர். இந்த விசாரணைகள், தாக்குதல்கள் வீடொன்றில் வைத்தே இடம்பெற்றது. பின்னர் மறுநாள் செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணியளவில் அராலி வீதியில் கல்லுண்டாய் வீதிப் பகுதியிலுள்ள வயற்காணி ஒன்றினுள் அவரைத் தூக்கி வீசிவிட்டு வெள்ளை வான் கும்பல் தப்பிச் சென்றது. அங்கிருந்து பஸ் மூலம் யாழ்.நகர் வந்த அவர் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ஒ-4)

# இடை நடுவில் ஏறும் பயணிகளிடம் அதிகளவு கட்டணம் அறவிடப்படுகிறது

## பயணிகள் விசனம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரும் அரச மற்றும் தனியார் பேருந்துகளில் பயணங்கள் மேற்கொள்வதற்காக இடையில் ஏறும் பயணிகளிடம் அதிக கட்டணங்கள் அறவிடப்படுவதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் பேருந்துகள் பயணிகளிடம் இருந்து 71 ரூபாவைக் கட்டணமாக அறவிடுகின்றனர்.

ஆனால் நீண்டதூரம் செல்லும் பேருந்துகளில் இடையில் நின்று ஏறும் பயணி களிடம் அதிகளவு கட்டணம் அறவிப்படுவதால் பயணி களுக்கும் பேருந்து நடத்துநர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்குப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் பயணிகளை முற்பதிவு செய்து பயணச் சீட்டை வழங்கியே சேவையில் ஈடுபடுகின்றன. ஆனால் இடையில் நின்று ஏறும் பயணிகளிடம் கூடுதலான கட்டணங்கள் அறவிடப் படுவதாலும் கட்டணங்கள் அறவிடப்படுவதற்கான பயணச்சீட்டை வழங்காததாலும் பயணிகள் விசனம் அடைந்துள்ளனர்.

ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் எடுத்து நிலையான ஒரு கட்டணத்தைப் பேருந் துகள் பயணிகளிடமிருந்து அறவிட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர். (எ)

# சீல் சாராய விற்பனையில் ஈடுபட்ட பெண்ணுக்கு அபராதம்

காரைநகர் களபூமி பகுதியில் சட்ட விரோதமாகச் சீல் சாராயம் விற்பனை செய்த குடும்பப் பெண்ணுக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

மேற்படி இடத்தில் சட்ட விரோத சீல் சாராயம் விற்பனை செய்வதாகக் கிடைத்த தகவலையடுத்து அங்கு விரைந்த ஊர்காவற்றுறை பொலிஸார் ஒரு தொகுதி சாராயப் போத்தல்களைக் கைப்பற்றியதுடன் வீட்டில் இருந்த குடும்பப் பெண்ணையும் கைதுசெய்தனர்.

கைது செய்யப்பட்ட இவரை பொலிஸார் கடந்த திங்கட்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் ஜோய் மகிழ்மகாதேவா குறித்த நபரை 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (எ-9-93)

## புதிய வருகை....



யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் 23 ஆவது வணிகஜோதி வெளியீட்டுவிழா பாடசாலையின் பிரதான மண்டபத்தில் மாணவன் ம.கஜேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் யாழ்.கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.மாணிக்கம் மலரை வெளியிட்டு வைக்க யாழ்.பல்கலைக்கழகத்தின் வணிகபீட முகாமைத்துவக் கற்கைகள் நிதி முகாமைத் துறைத்தலைவர் பேராசிரியர் மா.நடராச சுந்தரம் பெற்றுக் கொள்கிறார். (311)

# யாழ்.பொலிஸார் நுளம்பு ஒழிப்பு சிரமதானம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டதை முன்னிட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிரமதான பணியில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய வளாகத்துக்குள்ளும் வெளிப்புறப் பகுதியிலும் சிரமதானத்தை மேற்கொண் டனர். எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரையான ஒரு வாரகாலப்பகுதி தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரமாக ஜனாதிபதியின் டெங்கு ஒழிப்புச் செயலணிக் குழுவினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சாவகச்சேரிப் பகுதியில் பல இடங்களிலும் சிரமதானம் நடைபெற்றது. அரச திணைக்கள அலுவலகங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், நகர்ப்பகுதி போன்ற இடங்களில் சிரமதானப் பணிகள் இடம்பெற்றன. (ம-14-207)

# இயங்க முடியாது கழிவகற்றும் வாகனம் சேவையைப் பெறமுடியாது சாவகச்சேரி மக்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 25

சாவகச்சேரி பிரதேச சபைக்குரிய மலசலகூடக் கழிவு அகற்றும் வாகனத்தின் குழாய்க்குரிய உபகரணம் இல்லாமையால் மேற்படி வாகனத்தைப் பயன் படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இரண்டு வருடங்களாக பிரதேச சபையின் வாகனத் தரிப்பிடத்திலேயே இயங்க முடியாமல் இந்த வாகனம் தரித்து நிற்பதால் அப்பிரதேச மக்கள் தமது தேவைகளுக்கு வெளியிடங்களில் இருந்தே கழிவு அகற்றும் வாகனத்தை வாடகைக்கு அமர்த்த வேண்டியுள்ளது.

இதேவேளை நாவற்குழி தொடக்கம் எழுதுமட்டுவாழ் வரையான எல்லைகளைக் கொண்ட இப்பிரதேச சபை எல்லைப் பரப்பில் சாவகச்சேரி நகரசபை எல்லைகள் தவிர்த்து சுமார் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடியிருப்புக்கள் உள்ளன. இந்தக் குடும்பங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் நிறுவனமொன்றின் கழிவு அகற்றும் வாகனத்தினை வாடகைக்குப் பெற்றுப் பயன்படுத்தி வருகின்றனர்.

ஒரு பவுஸர் கழிவு எடுப்பதற்கு 3 ஆயிரம் ரூபா கட்டணம் அறவிடுவதுடன் அதன் பயணத் தூரத்திற்கு கிலோமீற்றருக்கு 100 ரூபா வீதம் அறவிடப்படுகிறது.

இதனால் பிரதேச மக்கள் பெருமளவு பணம் செலவிட வேண்டியுள்ளதால் உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் அக்கறை கொண்டு பிரதேச மக்களுக்கு பயன் கிடைக்க ஆவன செய்யமாட்டார்களா எனக் கேள்வி எழும்புகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு கடந்த 2009 ஆம் ஆண்டு யுனிசெவ் நிறுவனத்தினரால் மலசலகூட கழிவு அகற்றும் வாகனம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-207)

# யாழ். மதுவரித் திணைக்களத்தினால் 64 விற்பனை நிலையங்களுக்கு அனுமதி

யாழ். மாவட்டத்தில் 64 மதுபான விற்பனை நிலையங்களுக்கு மதுவரித் திணைக்களத்தின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என யாழ். மாவட்ட மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் என்.சோதிநாதன் தெரிவித்தார்.

மதுவரித் திணைக்களத்தின் அனுமதி பெற்று இயங்கிவரும் மதுபான விற்பனை நிலையங்கள் தொடர்பாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்:

மது வரித் திணைக்களத்தின் அனுமதி பெற்ற 64 மதுபான விற்பனை நிலையங்கள் யாழ். மாவட்டத்தில் இயங்கிவருகின்றன. திணைக்களத்தின் யாழ். நகர அலுவலகப் பிரிவில் 27 மதுபான விற்பனை நிலையங்கள் அனுமதி பெற்று இயங்கிவருகின்றன.

பருத்தித்துறை அலுவலகப் பிரிவில் 14 நிலையங்களும் மல்லாகம் அலுவலகப் பிரிவில் 10 நிலையங்களும், சங்கானை அலுவலகப் பிரிவில் 07 விற்பனை நிலையங்களும் சாவச்சேரி அலுவலக பிரிவில் 06 விற்பனை நிலையங்களும் ஆக 64 மதுபான விற்பனை நிலையங்கள் மதுவரித் திணைக்களத்தின் அனுமதி பெற்று இயங்கிவருகின்றன.

இதேபோல் கிளிநொச்சி மாவட்டத்தில் 02 மதுபான விற்பனை நிலையங்களுக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு மதுபான விற்பனை நிலையத்துக்கும் திணைக்களத்தின் அனுமதி வழங்கப்பட்டு இயங்கி வருகின்றன என்று மேலும் தெரிவித்தார். (எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு 6 லட்சம் ரூபா செலவில் வீடுகள் அமைப்பு

## யு.என்.டி.பி. நிதி உதவி

யாழ்ப்பாணம்,மார்ச்25

வலி.வடக்கில் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்ட இளவாலை வடமேற்கில் 50 குடும்பங்களுக்கு யு.என்.டி.பி நிறுவனம் 6 லட்சம் ரூபா செலவில் வீடுகளை அமைக்கவுள்ளது.

நோர்வேத் தூதுவர் ஹில்டே ஹரலட் ஸ்டட் நேற்று இதற்கான அடிக்கல்லினை நட்டு வைத்துப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

வலி.வடக்கில் மக்கள் மீள் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு, வித்தகபுரம் ஆகிய பகுதிகளில் மக்கள் படிப்படியாக மீள்குடியமர்ந்து வருகின்றனர். இவர்களுக்குரிய உதவிகளை வழங்க அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது என்று உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

இதன்பிரகாரம் இளவாலை வடமேற்கில் மீள்குடியமர்ந்துள்ள 50 குடும்பங்களுக்கு வீடுகளையும் மலசல கூடங்களையும் அமைப்பதற்கு யு.என். டி.பி. நிறுவனம் முன்வந்துள்ளது.

ஒவ்வொரு வீடும் தலா 6 லட்சம் ரூபா செலவில் பெரியளவில் அமைக்கப்படவுள்ளது. வீடுகள் அமைக்கும் பணிகள் ஆறுமாத காலத்துக்குள் பூர்த்தியாக்கப்பட்டு உரிய பயனாளிகளிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

# கட்டாக்காலி கால்நடைகளை வளர்க்க கோசாலை அமைக்கக் கோரிக்கை

காரைநகர்,மார்ச்25

காரைநகரில் கோசாலை ஒன்று அமைக்கப்பட்டு கட்டாக்காலி கால்நடைகளை வளர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

காரைநகர்ப் பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரச அதிபர் ஆர்.ரி. ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்றபோது கூட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்களே இந்தக் கோரிக்கையை முன் வைத்தனர்.

இது தொடர்பாக மக்கள் மேலும் தெரிவிக்கையில் - பசுக்கள் இறைச்சிக்காக ஏலம் விடுவது இந்தச் சிவபூமியில் இந்து மத கலாசாரத்துக்குப் பொருந்தாது எனவும் கட்டாக்காலி கால்நடைகளை வளர்க்க கோசாலை அமைப்பது சிறந்தது எனவும் வவுனியாவில் இவ்வாறான கோசாலை ஒன்று இயங்கி வருகின்றது என்றும் தெரிவித்தார்கள்.(எ-250)

# சீர் செய்யப்படும் போக்குவரத்து

யாழ்ப்பாணம்,மார்ச்25

குடாநாட்டில்உள்ளஅனைத்து வீதிகளிலும் போக்குவரத்துப் பொலிஸார் தினமும் தீவிர நடவடிக்கைளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி, வரி அனுமதிப்பத்திரம் என்பனவற்றைத் துருவித் துருவிப் பார்வையிடுவதுடன் வாகனத்தின் தரங்களையும் கண்காணித்து அவை உரிய முறையில் இல்லையெனில் தண்டம் அறவிட்டும் வருகின்றனர்.

அத்துடன் சைக்கிள்களில், மோட்டார் சைக்கிள்களில் சமாந்தர சவாரி செய்வோரையும் வழிமறித்து எச்சரிக்கை செய்வதுடன் தண்டமும் அறவிடப்படுகின்றது.

போக்குவரத்துப் பொலிஸாரின் இத்தகைய தொடர் நடவடிக்கைகளால் வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் ஓரளவு சீர்செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-9)

# நோயாளர்களுக்கு குறைந்த விலையில் உணவுப் பொருள்கள் விற்பனை

தென்மராட்சி,மார்ச்25

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலையில் நோயாளர்களுக்கு குறைந்த விலையில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

வைத்திய வளாகத்தில் இயங்கிய சிற்றுண்டிச்சாலை புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிற்றுண்டிச் சாலைக் கட்டடத்துக்கு மாற்றப்பட்டதையடுத்து வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க வைத்தியசாலை நோயாளர்களுக்கு குறைந்த விலையில் உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-207)

# கண்சிகிச்சைப் பிரிவு நேற்று திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ்.போதனா வைத்தியசாலையில் 25 லட்சம் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட கண்சிகிச்சைப் பிரிவு நேற்று வியாழக்கிழமை காலை திறந்துவைக்கப்பட்டது.

வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா தலைமையில் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் பி.டி.மகிபால உள்ளிட்ட குழுவினர் இந்தக் கட்டடத்தை நாடாவெட்டித் திறந்துவைத்தனர்.

சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் 'விஷன் 2020' திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில் இது புனரமைப்புச் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் வைத்திய நிபுணர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கட்டடத்தைத் திறந்துவைத்து அதனைப் பார்வையிட்டதோடு கண் சிகிச்சைக்குத் தேவையான சில உபகரணங்களையும் செயலாளர் கையளித்திருந்தார்.

இந்தப் பிரிவு புனரமைக்கப்பட்டுள்ளதனால் எதிர்காலத்தில் இங்குவரும் நோயாளிகள் சிறப்பான சேவையைப் பெறலாம் என்று எதிர்பார்க்கின்றனர். (ம-4)



# வீட்டின் சுவர் வீழ்ந்ததில் இளைஞனுக்கு கால் முறிந்தது

மல்லாகம்,மார்ச்25

மல்லாகம் பகுதியில் வீட்டின் சுவரை இடித்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவரின் காலில் தூண் விழுந்ததால் கால் முறிந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மல்லாகம் காளிகோயிலடிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த இ.சுரேஷ்குமார் (வயது 23) என்பவரே காயமடைந்தவராவார்.

புதிய வீடு கட்டுவதற்காக பழைய வீட்டின் சுவரை இடித்துக் கொண்டி ருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-4)

## அஞ்சல் அடையாள அட்டையுடன்

# சாதாரண தரப் பரீட்சை எழுதியோருக்கு பெறுபேறுகள் இன்னும் வரவில்லை

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் அஞ்சல் அடையாள அட்டையுடன் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்குப் பெறுபேறுகள் இன்னும் வந்துசேரவில்லை. இதனால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஏப்ரல் மாத நடுப்பகுதியில் நடமாடும் சேவை மூலமே பெறுபேறுகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுதொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் போது தேசிய அடையாள அட்டையின்றி அஞ்சல் அடையாள அட்டையுடன் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு பெறுபேறுகள் இன்னும் வந்துசேரவில்லை. இதனால் பல மாணவர்கள் தமது பெறுபேறுகள் அறியமுடியாமல் என்ன செய்வது? ஏது செய்வது? என்று தெரியாத நிலையில்திண்டாடிக்கொண்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடுப்பகுதியில் நடத்தப்படவுள்ள நடமாடும் சேவையின் போது மாணவர்களுக்கான பெறுபேறுகளை அடையாள அட்டையினைக் காட்டிப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதுவரைக்கும் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளாத மாணவர்கள் தமது பாடசாலை அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் உறுதிப்படுத்தலுடன் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்தால் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.(ம-9-207-253)

# இராமகிருஷ்ண பரமஹம்சரின் 176 ஆவது ஜெயந்தி தின நிகழ்வு

சண்டிலிப்பாய்,மார்ச்25

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் 176 ஆவது ஜெயந்தி தின நிகழ்வு மானிப்பாய் தாவடி வீதியிலுள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியியிலிருந்து பிற்பகல் 1 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வை முன்னிட்டு நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள புற்றுநோயாளர் விடுதிக்கு கொழும்பு இராமகிருஷ்ண மிஷனால் மின்விசிறிகள் வழங்கப்படவிருக்கின்றன.

புற்றுநோய் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ந.ஜெயக்குமாரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தர் பிரதம விருந்தினராகவும் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பவானி பசுபதிராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

ஜெயந்தி விழாவை முன்னிட்டு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலையிலிருந்து இராம கிருஷ்ண பரமஹம்சரின் திருவுருவப்படம் பூந்தண்டிகையில் வைத்து தாவடியிலுள்ள சமிதி வரை ஊர்வலமாக எடுத்துவரப்படும்.

அதைத்தொடர்ந்து ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியின் தலைவர் த.முருகானந்தா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்குப் பரிசில்களும் வன்னி மாவட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதி உதவியும் பாடசாலைகளுக்குப் புத்தகப் பொதிகளும் வழங்கப்படவுள்ளன. (எ-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துஐயன்கட்டுக் குளத்தின் கீழ் உப உணவுச் செய்கை சாத்தியமாகுமா?

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரிய நீர்ப்பாசனக் குளமான முத்து ஐயன்கட்டுக் குளம் கட்டப்பட்டதன் நோக்கம் உப உணவுச் செய்கைக்கே என்பது யாவரும் அறிந்ததே.

அந்தக் காலத்தில் காடுகளை அழித்துத் துப்புரவு செய்து காணிக் கச்சேரிகளை நடத்தி இளைஞர், யுவதிகளுக்கென சில திட்டங்களை உருவாக்கியும் ஏனையோருக்குத் தலா 3 ஏக்கர் வீதம் காணிகளைப் பகிர்ந்தளித்தும் ஏற்று நீர்ப்பாசனக் காணிகளுக்கு நீர்ப்பம்பிகளைப் பொருத்தியும் வாய்க்கால்களை அமைத்தும் கொடுக்கப்பட்டதால் விவசாயிகள் உப உணவுப் பயிர்ச் செய்கைகளை மெற்கொண்டு மிகுந்த பயன்களைப் பெற்றனர்.

வெங்காயம், மிளகாய், பூசணி, நிலக்கடலை போன்ற பல பயிர்களை நட்டு நிறைந்த வருவாயை இவர்கள் பெற்று வந்ததுடன் தென்பகுதிக்கும் கொண்டு சென்று விற்பனை செய்தனர். உதாரணமாக ஒரு அந்தர் வெங்காயம் பயிரிட்டால் 20 அந்தர் வெங்காயத்தைப் பெறக்கூடியதான நல்ல விளைச்சலைப் பெற்றனர்.

ஆனால் காலப்போக்கில் குளத்தின் நீர் பற்றாக்குறையாலும் வாய்க்கால்கள் பழுதடைந்தமையாலும் ஏற்று நீர்ப்பாசனப் பம்பிகள் பழுதடைந்தமையாலும் திட்டங்கள் கைவிடப்படும் நிலை ஏற்பட்டது.

இதனால் விவசாயிகள் உப உணவுச் செய்கையினை விடுத்து நெற்செய்கையில் ஈடுபாடு கொண்டனர். ஆனால் அன்றிருந்த அதிகாரிகள் நெற்செய்கையினை மேற்கொள்ளவிடாது தடுத்ததுடன் அழிவு தரக்கூடிய மருந்துகளை அடித்து அழிக்கவும் முற்பட்டனர்.

அவர்கள் விவசாயிகளை கடுமையாக எச்சரித்து பொலிஸாரின் உதவியுடன் பயிர்களை அழித்த போதிலும் விவசாயிகள் நெற்செய்கையில் தீவிரமாக ஈடுபட்டனர்.

இதன் பிற்பாடு அதிகாரிகளின் ஆலோசனையின்படி நிலத்திற்கேற்ற பயிர்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

விவசாயிகள் இதனைச் சாட்டாகக் கொண்டு வயற் செய்கைக்கேற்றவாறு காணிகளை உருவாக்கினர். வரப்பு இல்லாமல் பயிர் செய்தவர்கள் வரப்புகளை அமைத்து விவசாயத்தை மேற்கொண்டனர்.

உப உணவுச் செய்கை படிப்படியாகக் குறைவடைந்து சென்றது. இதனால் மரக்கறிகள் குறைந்த விலையில் நிறைந்து காணப்பட்ட நிலைமாறி இவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதுடன் விலையும் அதிகரித்துச் சென்றது.

அதுமட்டுமல்ல உப உணவுச் செய்கைக்கு ஏற்றவாறு வைக்கப்பட்ட கொட்டுகள் மூலம் வயலுக்கு ஏற்ற நீரைப் பெற முடியாததால் கொட்டு களைப் புரட்டியும் வாய்க் கால்களை வெட்டியும் நீரைப் பாய்ச்சினர்.

**கைவிடப்பட்ட காணிகளில் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் மேட்டுச் செய்கை, உப உணவுச் செய்கை என்பன இல்லாமல் போய் மக்கள் நெருக்கடிகளை எதிர்கொள்வார்**

இவற்றை எவராலும் தடுக்க முடியாதிருந்தது.

எனவே காலப்போக்கில் 100 வீதம் தாழ் விவசாய நிலங்களாக மாறியுள்ளது.

அரச அதிகாரிகளால் உப உணவுச் செய்கையைத்தான் மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை தற்போது கூட்டங்களில் முன்வைக்கப்பட்ட போதிலும் நடைமுறைக்கேற்றவாறு காணிகள் இல்லை. அத்துடன் வாய்க்கால்கள் உடைந்து சீரழிந்து உள்ளதால் சில காணி ஊடாக வற்றாத ஓடையாக நீர்பாய்ந்த வண்ணமுள்ளது. இப்படியான நிலையிலும் சிலர் உப உணவுச் செய்கையில் ஈடுபட்ட போதும் சித்திரை மழையுடன் தோட்டங்களைக் கைவிட்டவர்களும் உண்டு.

செய்கைக்கேற்றவாறு காணிகள் இல்லை என்று கூறினால் வடிகால்களை அமைத்து காணிகளில் உப உணவுச் செய்கையினை மேற்கொள்ளுங்கள் எனக் கூறப்படுகின்றது. ஏற்கனவே நட்டமடைந்தவர்கள் இதற்குச் சம்மதிக்கவில்லை.

ஏற்று நீர்ப்பாசனம் மூலம் மட்டுமே உப உணவுப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியும். அடுத்ததாக பெண்கள் குடியேற்றத் திட்டம், படித்த வாலிபர் திட்டம் என்பனவற்றின் நீர்ப்பம்பிகளை மீண்டும் பொருத்தி அவைகளின் மூலமாவது கைவிடப்பட்ட காணிகளில் பயிர்களைப் பயிரிட்டு அபிவிருத்தியடைவதற்கு அரசு முன் வர வேண்டும். இல்லையெனில் மேட்டுச் செய்கையும் இல்லை உப உணவுச் செய்கையும் இல்லாமல் போய்விடும்.

எனவே நீர் முகாமைத்துவம் பேணப்படுதல், வாய்க்கால்களைத் திருத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், கைவிடப்பட்ட காணிகளில் மீள் குடியமர்த்தல் என்னும் நிலைகள் உருவாக்கப் பட வேண்டும். எவற்றையும் செயற்படுத்தாது வெறுமனே உப உணவுச் செய்கையினை மேற்கொள்ள் வேண்டும் என்றால் இது நடக்காத ஒரு காரியமாகும். வயலுக்குரிய நிலமாக மாற்ற மடைந்த பின்னர் உப உணவுச் செய்கைக்கான நிலமாக மாற்றம் செய்ய முடியுமா? இது எந்தளவுக்குச் சாத்தியமாகும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ✱

மு.சிவனேசன்

Study in UK

IELTS இன்றி

SPOT ADMISSION

O/L தகமை போதுமானது

இறுதி சந்தர்ப்பம்

புதிய விசா நடைமுறைகள் April 1st திகதி அறிமுகப்படுத்தப்பட இருப்பதால் இறுதி சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளுங்கள்

April Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் பல வருடம் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்களது விசா தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

1) UKBA Highly Trusted College
2) IELTS தேவையில்லை
3) 4 வருட visa உத்தரவாதம்
4) 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி
5) மறைமுக கட்டணங்கள் எதுவும் இல்லை
6) ஒரு மாதத்தில் பயணம்

தலைநகரில் அதி கூடுதலான விசாக்களை பெற்றுக்கொடுத்துவரும் எமது நிறுவனத்துடன் நீங்களும் இணையுங்கள்.

உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்



காலம் 26th March 2011 : 10.00a.m. - 1.00p.m.
இடம் Exponet Head Office - Colombo

விசா நடைமுறைகளுக்கு முன்னரும் பின்னரும் எவ்விதகட்டணங்களும் அறவிடப்படமாட்டாது*
எமது சேவை முற்றிலும் இலவசமானது
*Condition Apply

பதிவுகளுக்கு COLOMBO - 0117 555511 JAFFNA - 021 7538395
HOTLINE - 0117 555514 FAX - 0117 555517

EXPONET Overseas Consultants

Head office - 379-1/2, Galle Road, Colombo 6, Sri Lanka Tel:0714150995

Jaffna Branch - 102 2/2, Navalar Road, Jaffna

London Branch - No:56,The Gradens Harrow Middlessex HA1 4EY,UK

www.expogroup.lk Email:nimal@expogroup.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகள் எதுவுமின்றி மீள்குடியமர்ந்த மக்கள் அல்லல்

முல்லைத்தீவு, மார்ச் 25

முல்லைத்தீவு தேறாங்கண்டல், ஐயங்கன்குளம், மருதங்குளம், புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி உள்ளிட்ட கிராமங்களில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் தமக்கான அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் என்றுமில்லாதவாறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு துணுக்காய் உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட மேற்படி கிராமங்களில் சுமார் ஐநூறுக்கும் அதிகமான குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் இக்கிராமங்களின் அடிப்படைத் தேவைகள் எவையும் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை. குறிப்பாக இப்பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாகியும் இவர்கள் தறப்பாள் குடிசைகளிலும் பன்னிரெண்டு தகரங்களைக்கொண்டு அமைக்கப்பட்ட குடிசைகளிலுமே வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கான நிரந்தர வீடுகள் எவையும் இதுவரை அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

அத்துடன் மருத்துவ வசதிகளைப் பெற்றுக்கொள்வதாயின் நீண்ட தூரத்தில் உள்ள மல்லாவி நகருக்கோ அல்லது கிளிநொச்சி நகருக்கோ இந்த மக்கள் செல்லவேண்டும்.

கடந்த காலங்களில் இடப்பெயர்வுக்கு முன்னர் ஐயங்கன்குளத்தில் ஆரம்ப மருத்துவமனை ஒன்று இயங்கி வந்தது.

அத்துடன் அவசர நோயாளிகளைக் கொண்டு செல்லக்கூடிய நோயாளர் காவுவண்டி வசதிகளும் இருந்தன. தற்போது ஆரம்ப சுகாதார நிலையம் கூட இல்லையென்றும் இதனால் இப்பகுதி மக்கள் வேறு இடத்துக்கே மருந்துவ தேவைகளுக்குச் செல்ல வேண்டியுள்ளதாகவும் அதற்குச் சரியான போக்குவரத்து வசதிகள் எவையும் இல்லையென்றும் இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஏ-9 கொக்காவில் சந்தியினையும் வெள்ளாங்குளம்-மாங்குளம் வீதியினையும் இணைக்கும் வகையில் அமைந்துள்ள ஐயங்கன்குளம் - புத்துவெட்டுவான் ஊடான சுமார் 20 கிலோ மீற்றர் வரையான வீதி கடந்த பல ஆண்டுகளாகப் புனரமைக்கப்படாத நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படுவதுடன் பாலங்களும் மதகுகளும் சேதமடைந்து காணப்படுகின்றன.

இதனால் பொதுமக்களின் போக்குவரத்துக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. (க-6)

## விபத்தில் காயம்

பாடசாலை சென்று கொண்டிருந்த மாணவனுடன் மோட்டார் சைக்கிள் மோதியதால் தலையில் படுகாயமடைந்த மாணவன் சிகிச்சைக்கென முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிகச் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

மோட்டார் சைக்கிள் நபர் தப்பிச் சென்று விட்டார் எனக் கூறப்படுகின்றது.

இச்சம்பவம் முல்லைத்தீவு மகா வித்தியாலயப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த மிக்கேல் டனுசன் (வயது 11) என்ற மாணவனே காயமடைந்தவராவார். (ம-4)

## வளரும் சாரணியம்....



பொருத்தமான சின்னம் : வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் சாரணிய மாணவர்களுக்கு சாரணியப் பொறுப்பாசிரியர் தீ.யஸ்ரின் சின்னங்களைச் சூட்டுகின்றார். அருகில் சாரணியப் பயிற்சி வழங்கிய வளவாளர்கள் நிற்கின்றனர். (21)

# ஒழுங்கற்ற போக்குவரத்துச் சேவையால் சிரமப்படும் மக்களை கவனிப்பார் யார்?

முத்துஐயன்கட்டு, கற்சிலைமடு, கெருடமடு ஆகிய கிராமங்களுக்கான போக்குவரத்து வசதிகள் சீராக நடைபெறாததால் கிராம மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதிகளுக்கென யாழ்ப்பாணத்திலிருந்து காலை 7 மணிக்கு ஒரு பேருந்துச் சேவை இடம்பெற்றது. இதன் மூலம் ஒட்டுசுட்டான் உட்பட அனைத்து இடங்களிலுமுள்ள மக்கள் பெரிதும் பயன் பெற்றனர். ஆனால் இந்தப் பேருந்து சேவை ஒழுங்காக நடைபெறுவதில்லை. இதனால் யாழ்ப்பாணம் செல்லும் பிரயாணிகள் சுமார் ஐந்து கிலோ மீற்றர் சென்று ஒட்டுசுட்டான் முல்லைத்தீவிலிருந்து செல்லும் பேருந்தைப் பிடிக்க வேண்டிய அவலநிலையில் உள்ளனர். இல்லாவிட்டால் 200 ரூபா தொடக்கம் 300 ரூபா வரை ஆட்டோவுக்குக் கொடுத்துத்தான் செல்ல வேண்டும். யாழ்ப்பாணம் செல்லும் பேருந்து ஒழுங்கான சேவையை நடத்தினால் பிரயாணிகள் அதனை எதிர்பார்த்து நிற்பர்.

ஆனால் அதுவும் ஒழுங்காகச் சேவையாற்றாததால் பிரயாணிகள் இதனை எதிர்பார்த்துக் காத்திருப்பதில்லை.

அத்துடன் யாழ்ப்பாணம் செல்வதற்கு இந்தப் பிரதேசங்களிலிருந்து அதிகளவு பிரயாணிகள் வருவதில்லை யென்ற கருத்தினைச் சிலர் பரப்பி வருகின்றனர் - இது ஒரு தவறான கருத்தாகும்.

ஆகவே தடைப்பட்டு நிற்கும் இந்தப் பேருந்து சேவையை ஒழுங்காக நடத்தினால் தமக்குப் பேருதவியாக இருக்குமெனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். (க-500)

# பேருந்துசேவை இடைநிறுத்தப்பட்டதால் கிராம மக்கள் நடந்து செல்லும் அவலம்

அக்கராயன், மார்ச் 25

அக்கராயன் பிள்ளையார் கோயில்-யூனியன்குளம் ஊடான பேருந்து சேவை இடம்பெறாமையால் இப்பகுதி மக்கள் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரியவந்துள்ளது.

இந்தப் பகுதியில் யுத்தத்திற்கு முன்னர் பேருந்து சேவை இடம்பெற்று வந்தது. ஆனால் மக்கள் மீள்குடியமர்ந்த பின்னர் ஓரிரு நாள்கள் மட்டுமே பேருந்து சேவை இடம்பெற்றது. யூனியன் பாலம் உடைந்து காணப்படுவதால் பேருந்து சேவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதுவரை இந்தப் பாலத்தைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் பாதிப்புக்களை எதிர்கொள்வது பிரதேச மக்களே.

இந்தப் பேருந்துசேவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் யூனியன் குளம் மற்றும் 12 ஆம் துண்டு மக்கள் நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே இனியும் காலதாமதம் செய்யாது உரியவர்கள் பாலத்தைத் திருத்தம் செய்வதுடன் பேருந்து சேவையையும் ஆரம்பிக்க வேண்டுமென்பதே தினமும் பாதிப்புக்களைச் சந்திக்கும் பிரதேச மக்களின் வேண்டுகோளாகும்.

(க-410)

# சிறுபோக நெற்செய்கை இம்முறையில்லை

அக்கராயன், மார்ச் 25

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கை இவ்வாண்டு நடைபெறமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

குளத்தின் புனரமைப்பு வேலைகள் காரணமாகவே சிறுபோக நெற்செய்கை கைவிடப்பட்டது. தற்போது குளத்து நீர் முற்றாகத் திறந்து விடப்பட்டுள்ளதாலேயே சிறுபோக நெற் செய்கை நடைபெறாது.

மேலும் குள அணைக் கட்டின் உயரம் இரண்டு அடியால் உயர்த்தப்படவுள்ளது. இதனால் 23 அடியாகவுள்ள அணைக் கட்டின் உயரம் 25 அடியாக உயரும். நீர் மட்டமும் இதற்கேற்ப 25 அடியாக அதிகரிக்கும்.

இதனால் இக்குளத்தின் கீழ் காலபோகம், சிறுபோகம் ஆகிய இரு பருவங்களிலும் நீர் கட்டுப்பாடுகளின்றி விவசாயிகள் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளமுடியும். மேலும் அக்கராயன் குளத் தின் கீழ் பயன்பெறும் விவ சாயிகள் பயிர்ச் செய்கையின் மூலம் தமது வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்வதற்கும் இது வாய்ப்பாக அமையுமென மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர். (க-410)

# மீள்குடியமர்ந்துள்ள மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக இலகு கடன் திட்டம்

கிளிநொச்சி முல்லைத்தீவு மன்னார் ஆகிய மாவட்டங்களில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய அபிவிருத்தித் திணைக்களத்தினால் இலகு கடன் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் விசேட விவசாயக் கடன் திட்டங்களை வழங்குவது தொடர்பாக அண்மையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பெரும்பாலான விவசாயிகள் தங்கள் விவசாயக் காணிகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் எவற்றையும் தற்போது கொண்டிருக்கவில்லை. இவையனைத்தும் இடப்பெயர்வின்போது தவற விடப்பட்டுள்ளன. இதன் காரணமாக விவசாயிகள் வங்கிகளில் இருந்து கடன்களைப் பெற முடியாத நிலையில் இருந்தனர்.

இதைக் கருத்திற் கொண்டு இலங்கை மத்தியவங்கி விவசாயக் காணிகளை அடமானமாகக் கொண்டு பெறும் விவசாயக் கடன்களுக்கு உத்தரவாதம் வழங்க முன்வந்துள்ளது. இதன் அடிப்படையில் எந்தவொரு வங்கியும் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு விவசாயக் காணிகளை அடமானமாகப் பெற்று வழங்கும் விவசாயக் கடன்களைப் பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கி கடன் உத்தரவாதம் வழங்கும். கடன்பெறுபவர் செய்கை பண்ணப்படும் காணிக்கு உரிமையாளர் தாமே என்றும் இக்காணிக்குச் சட்டப் பிரச்சினை ஒன்றும் இல்லையென்றும் சத்தியக் கடதாசி சமர்ப்பிக்க வேண்டும். விவசாயக் கடன்களை ஒருவருட காலத்தில் மீளச் செலுத்த வேண்டும். கடன்கள் இரண்டு லட்சம் ரூபா வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனவும் விவசாயக் கடன்களுக்கு அறவிடப்படும் வட்டியே இக்கடன்களுக்கும் அறவிடப்படும் எனவும் தெரியவருகின்றது. கடந்த 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் 15 ஆம் திகதியில் இருந்து, 2012 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரை இந்தக் கடன் திட்டம் நடைமுறையில் இருக்கும். இந்த விடயங்கள் யாவும் கலந்துரையாடலில் கலந்து கொண்ட இலங்கை மத்திய வங்கியின் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண வைத்திய உத்தியோகத்தர்களின் மேலதிகக் நேர கொடுப்பனவுக்கு நிதி ஒதுக்கீடு

மட்டக்களப்பு,மார்ச்25

கிழக்கு மாகாண அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோருக்கு மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்குவதற்காக 45 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ் தெரிவித்துள்ளார். நிதிப் பற்றாக்குறை காரணமாக வைத்தியர்கள், உத்தியோகத்தர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்குவதில் தாமதமேற்பட்டுள்ளமை தொடர்பில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதை அடுத்தே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதி மூலம் கிழக்கு மாகாணத்திலுள்ள 120 அரச வைத்தியசா லைகளில் கடமையாற்றும் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் 500 இற்கும் மேற்பட்ட அதிகாரிகள் ஆகியோர் நன்மையடையவுள்ளனர்.

இந்த நிதி மாகாண சுகாதார திணைக்களத்தினூடாக திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, கல் முனை போன்ற பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் அஸீஸ் தெரிவித்துள்ளார். (204)

# பாதுகாப்பற்ற ரயில் கடவை; ஆபத்தான பயணத்தில் மக்கள்



கண்டி,மார்ச்25

கண்டி, மாவில்மட பிரதேசத்தில் காணப்படும் பாதுகாப்பற்ற ரயில் கடவை காரணமாக ஆபத்தை எதிர்நோக்கி வருவதாக அந்தப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த ரயில் பாதையைக் கடந்து ஒரு நாளைக்கு நூற்றுக்கணக்கான வாகனங்களும் பொதுமக்களும் பயணிப்பதாகவும் அவர்களுக்கு பாதுகாப்பு இல்லையெனவும் தெரிவிக்கின்ற பிரதேச மக்கள் இந்த ரயில் பாதையை சீரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (204)

# பூசகர் மீது அசிற் வீசியவருக்குப் பிணை

மட்டக்களப்பு,மார்ச்25

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள எருவில் மாரியம்மன் ஆலய பூசகர் மீது அசிற் வீசிய நபருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத் தப்பட்ட போது 100,000 ரூபாய் சரீரப்பிணையிலும், இரு ஆள்பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சந்தேக நபரை எதிர்வரும் மே மாதம் 16ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (204)

# லொறி குடைசாய்ந்ததில் இருவர் காயம்

மட்டக்களப்பு,மார்ச்25

மட்டக்களப்பு, பொலன்னறுவை பிரதான வீதியிலுள்ள சத்துருக்கொண்டான் பகுதியில் இலங்கை மின்சாரசபைக்குச் சொந்தமான லொறியொன்று குடைசாய்ந்ததில் இருவர் படுகாயமடைந்துள்ளனர். இந்த விபத்துச் சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது. லொறி குடை சாய்ந்ததில் அந்த இடத்திலுள்ள இந்து ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இருவரே படுகாயமடைந்துள்ளனர். (204)


# கிளி/திருவையாறு மகா வித்தியாலயம், கிளிநொச்சி

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோரைப் பாராட்டி வாழ்த்து

### சித்தியடைந்தோர் - 2008

| | | |
|---|---|---|
| 1. சி.சஞ்சீவன் | 133 | 41 |
| 2. யு.கீர்த்திகா | 131 | 49 |
| 3. மு.சுபேஸ்திகா | 129 | 56 |
| 4. பா.ரதீபன் | 125 | 75 |
| 5. த.தனுஜன் | 120 | 98 |
| 6. ப.விதுசன | 119 | 110 |
| 7. ம.மதுவந்தி | 115 | 135 |
| 8. செ.சாரங்கன் | 114 | 142 |
| 9. க.டிலக்ஷனா | 114 | 142 |




### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

1. ஜெ.ஜெயாணி
2. பா.தர்சிகா
3. இ.தீபிகா
4. வா.நித்திகா
5. செ.கோபிநாத்
6. த.ஸரேமிகா
7. கா.கிருஜன்

### சித்தியடைந்தோர் - 2009

| | |
|---|---|
| 1. பி.பிரதீபா | 159 |
| 2. சு.றதோஜினி | 150 |
| 3. தி.நிலானி | 140 |
| 4. சு.அனோச் | 133 |
| 5. ம.தேனுகா | 125 |
| 6. சு.அர்ச்சனா | 124 |
| 7. சௌ.குருமதி | 123 |
| 8. மு.கயாளினி | 124 |
| 9. செ.டியானி | 122 |
| 10. ப.கபிலா | 113 |
| 11. மு.சோமிலன் | 116 |
| 12. ச.நிதுசன் | 112 |




### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

1. பா.பானுஜா
2. நே.வித்தியாசாகர்
3. க.கஜீபா
4. மு.அனோஜன்
5. க.கஜானா
6. நா.ரவிறிஸ்னா

### சித்தியடைந்தோர்- 2010

| | | |
|---|---|---|
| 1.ந.அபிராமி | 173 | 02 |
| 2. இ.கிருசாந்தன் | 165 | 06 |
| 3. த.நிதுஷிகன் | 162 | 09 |
| 4.கி.காங்கேயன் | 147 | 51 |
| 5. கு.நிஷாளினி | 141 | 79 |




### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்.

- தி.பிரசன்னா
- வி.அனுசன்
- ம.அருணன்
- செ.மிதுனா
- க.கௌசிகா
- செ.கிருஷானி
- ச.லக்சிகா
- சி.ஜனாத்
- இ.கயல்விழி
- ம.கபிலானந்தன்
- ச.தயாளன்
- பா.தனுசிகா
- ம.டோசிகா
- ச.கயன்
- கோ.சஜீபன்
- சா.யதுமிளா
- ம.லீனராஜ்
- ப.ஜெக்சன்
- ட.டன்சிகா
- வி.பிறேமினி
- ஞா.துளசிகா

புலமைப் பரிசில் பரீட்சையில் 2008, 2009, 2010 ஆகிய காலப்பகுதிகளில் தோற்றி சித்தியடைந்த மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர்களான திருமதி அ.ஸ்ரீதரன், திருமதி ச.விக்கினேஸ்வரன், திருமதி அ.நாகேஸ்வரன், திருமதி அ.நகுலகுமார் ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கல்விச் சமூகம்,
கிளி/திருவையாறு மகா வித்தியாலயம்.

(49-19-20)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார சபைக்கு தமிழ் அலுவலரை நியமிக்க தோட்ட மக்கள் வலியுறுத்து

நுவரெலியா, மார்ச் 25

அம்பகமுவ மற்றும் ஹற்றன், நுவரெலியா மாவட்டங்களில் உள்ள மின்சார சபைக்குத் தமிழ்மொழி தெரிந்த அல்லது தமிழ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாமையால் பெருந்தோட்டப் பகுதியைச் சேர்ந்த மின்பாவனையாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் எனத் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள மின்சாரசபை அலுவலகங்களில் புதன்கிழமைகளில் மட்டும் உயர் அதிகாரிகள் இருக்கின்றனர். அன்றைய தினம் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேலை தினமாக உள்ளதால், அவர்கள் பணிக்குச் செல்லாமல் மின்சார சபை அலுவலகங்களுக்குச் செல்கின்றனர்.

அங்கு தமிழ்மொழி தெரிந்த உத்தியோகத்தர்கள் இல்லாத காரணத்தால் இவர்களுடன் சிங்களமொழியில் கதைப்பதற்காக மேலதிகமாக ஒருவரை அழைத்துச்செல்லும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அனைத்து மின்சாரசபை அலுவலகங்களிலும் தமிழ் மொழி தெரிந்த அல்லது தமிழ் உத்தியோகத்தர்களை நியமிக்க சம்பந்தப்பட்ட மின் அமைச்சு முன்வரவேண்டும் எனப் பெருந்தோட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மாநகர ஆணையாளரைத் தாக்க சபை உறுப்பினர் முயற்சி

அம்பாறை,மார்ச்25

கல்முனை மாநகரசபை ஆணையாளர் எம்.எம். நியாஸை முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர் தாக்க முற்பட்ட சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கல்முனை மாநகரசபையில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆவணம் ஒன்றில் கையொப்பமிடுமாறு உறுப்பினர் ஆணையாளரை கோரியுள்ளார். இந்த நடவடிக்கைக்குத் தேவையான ஏணைய ஆவணங்களை இணைத்துத் தருமாறு ஆணையாளர் கேட்டுள்ளார். இதன்போது இந்த உறுப்பினர் தகாதவார்த்தைப் பிரயோகங்களுடன் ஆணையாளரைத் தாக்க முற்பட்டுள்ளார். அந்த இடத்தில் இருந்த மாநகர சபை உறுப்பினர் ஒருவர் இதனைத் தடுத்துள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (204)

# மாணவியைத் தாக்கிய பெண் பொலிஸாரால் கைது

திருகோணமலை,மார்ச்25

திருகோணமலை பாடசாலையொன்றில் மாணவியொருவரை தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை வளாகத்துக்குள் அத்துமீறி நுழைந்து வகுப்பறையில் கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த உயர்தர வகுப்பு மாணவியை குடும்பப் பிரச்சினை காரணமாகத் தாக்கியதாக அந்தப் பெண் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த மாணவி திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (204)

## அருள் கிடைக்கட்டும்.....



மட்டக்களப்பு சிறைச்சாலையில் அமைந்துள்ள சித்திவிநாயகர் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சங்காபிஷேகப் பெருவிழா நடைபெற்றபோது சுவாமிக்குக் கிரியைகள் நடைபெறுகின்றன. (204)

# சைக்கிள்களைத் திருடிய இருவர் கைது

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் சைக்கிள்கள் பலவற்றை நீண்டகாலமாகத் திருடி வந்த இருவர் கடந்த திங்கட்கிழமை இரவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் திருடி விற்பனை செய்யப்பட்ட 5 சைக்கிள்கள் மீட்கப்பட் டுள்ளதாகத் திருக்கோவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து திருக்கோவில் காயத்திரி கிராமம், மண்டாணை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இருவரையும் அவர்களின் வீடுகளில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரதேசங்களில் நீண்ட நாள்களாகப் பொதுச்சந்தை மற்றும் வீடுகளுக்கு முன்னாள் நிறுத்தி வைக்கப்பட்ட 10 சைக்கிள்களை 3 பேர் கொண்ட குழுவினரே திருடியதாக விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

தலைமறைவாகியுள்ள நபரைக் கைது செய்வதற்கும் கைது செய்யப்பட்டவர்களை அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (204)

# 1,000 பாடசாலைகள் திட்டத்தில் கிழக்கில் மேலும் சில தெரிவுகள்

## கோரிக்கை ஏற்கப்பட்டது

மஹிந்த சிந்தனையின் கீழ் 1000 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு நிர்வாக உட்கட்டமைப்பிற்கான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவுள்ளன.


இதில் கிழக்கு மாகாணத்தில் மேலதிகமாகப் பாடசாலைகளைதெரிவு செய்யவேண்டுமென அரசியல் தலைமைகள் விடுத்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.இது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமை யில் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அனைத்து மாகாணங்களையும் சேர்ந்த கல்வி அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள்,கல்வி அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தலைமையில் கிழக்கு மாகாணத்திலுள்ள பின்தங்கிய பாடசாலைகள் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிகாரிகள் மூலம் தெரிவு செய்யப்பட்டது. இவற்றில் கல்வி அமைச்சினால் 105 பாடசாலைகள் சிபாரிசு செய்யப்பட்டுத் தெரிவு செய்யப்பட்டது.

கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பூ.பிரசாந்தனால் மண்முனைப்பற்றிலுள்ள ஆரையம்பதி மகாவித்தியாலயம், கிரான்குளம் விநாயகர் வித்தியாலயத்தோடு புதுக்குடியிருப்பு கண்ணகி மகாவித்தியாலயமும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டுமென்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டது. இந்தக் கோரிக்கை கல்வி அமைச்சினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பரிசீலனைக்கு உட்படுத்துமாறு அறிவிக்கப் பட்டது. (204)

# மின்சார சபை வளாகத்தில் குழி; நுளம்புப் பெருக்கம் அதிகரிப்பு



மட்டக்களப்பு, வாழைச்சேனை இலங்கை மின்சார சபை வளாகத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் குழியொன்றில் நீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுவதுடன், நுளம்புப் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வாழைச்சேனை சுகாதார அலுவலக அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்த போதிலும், எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வாழைச்சேனை இலங்கை மின்சார சபை மின் அத்தியட்சகர் என்.சோதிராஜாவிடம் கேட்டபோது, இந்தக் குழியை மூடுவதற்கு அதிகளவில் பணம் தேவைப்படுகிறது எனவும் இதற்கான அனுமதி பெறுவதற்கு தலைமை அலுவலகத்திற்கு அறிக்கைகள் தயாரித்து அனுப்பியுள்ளோம் என்றும் தெரிவித்துள்ளார்.

அது மட்டுமன்றி பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படாத வகையில் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த மருந்து தெளித்தல், புகையூட்டல் செயற்பாடுகளை மேற்கொண்டு தருமாறு சுகாதாரப் பகுதியினரை கேட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (204)

# ஏறாவூர் நகர பிதாவாக அலிசாகீர்

ஏறாவூர் நகரசபையின் நகர பிதாவாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாகீர் மௌலானா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்டு 9,601 விருப்பு வாக்குகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளார். ஏறாவூர் நகரசபையின் பிரதித் தலைவராக எம்.ஐ.தஸ்லீம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேசசபையின் தலைவராக கே.பி.எஸ்.ஹமீதும், பிரதித் தலைவராக ஏ.நௌபரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஞ்சிய சபைகளுக்கு மே மாதத்திற்குள் தேர்தல் நடத்தி முடிக்கப்பட வேண்டும்

## பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 25

2009 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புகளின் ஆயுள்காலம் எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதி முடிவடைவதால், அதற்கு முன் எஞ்சிய உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களை, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் நடத்தி முடிக்க வேண்டும் என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சமீந்திர பர்ணாந்து கடந்த செவ்வாய்க் கிழமை மேன் முறையீட்டு நீதிமன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எதிர்வரும் மே மாதத்துக்கு முன்பு எஞ்சிய உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் திகதியை தேர்தல் ஆணையாளர் தீர்மானிக்க வேண்டியது அவசியம். வேட்பு மனுக்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிட் மனுக்களை அந்தத்தினத்துக்கு முன்பு விசாரணை செய்து தீர்ப்பு வழங்க வேண்டுமெனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் எனக்கு அறிவித்தல் கொடுத்துள்ளார்.

வேட்பாளர்களின் வயதுகளை நிரூபிக்கக்கூடிய சட்டபூர்வ ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை உட்படப் பல்வேறு குறைபாடுகளை அடிப்படையாகக் கொண்டு தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்கள் மீதான விசாரணை கடந்த செவ்வாய்க் கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் சத்ய ஹெட்டிகே மற்றும் நீதியரசர் உபாலி அபேரத்ன ஆகியோரின் முன்னிலையில் இந்தவழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மூலமாக தேர்தல்கள் ஆணையாளர் விடுத்துள்ள கோரிக்கையை கவனத்திற்கொண்டு மே மாதம் ஐந்தாம் திகதிக்கு முன் ரிட் மனுக்களின் மீதான தீர்ப்புகள் வழங்கப்படுமென நீதியரசர் சத்ய ஹெட்டிகே உறுதியளித்துள்ளார்.

# ஐ.தே.க. கைப்பற்றிய சபைகளுக்கு இன்று தவிசாளர்கள் தெரிவாகின்றனர்

கொழும்பு, மார்ச் 25

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றிய சபைகளுக்கான தவிசாளர்கள் தெரிவு, இன்று இடம்பெறும் என்று ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நடந்து முடிந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் நாம் ஒன்பது சபைகளைக் கைப்பற்றியுள்ளோம். அவற்றுக்குத் தவிசாளர்களையும் பிரதித் தவிசாளர்களையும் இன்று வெள்ளிக்கிழமை தெரிவுசெய்து முடித்துவிடுவோம்.

அதேபோல் ஏனைய சபைகளுக்கான எதிர்க்கட்சித் தலைவர்கள் தெரிவு அடுத்தமாதம் முதலாம் திகதிக்கு முன் இடம்பெறும்.

தவிசாளர்கள் தெரிவின்போது பல விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும். அவர்கள் பெற்ற விருப்பு வாக்குகள், கட்சியின் சிரேஷ்டத்துவம், மக்கள் செல்வாக்கு, கட்சியில் வகிக்கும் பதவிகள் போன்றவற்றை அடிப்படையாக வைத்தே தவிசாளர் பதவி வழங்கப்படும்.

அதேபோல் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களம் ஆகிய மூவின மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தித் தெரிவாகியிருந்தால் அதுவும் கவனத்தில் எடுக்கப்படும்- என்றார். (ஒ-சி)

# ஏறாவூரில் கைக்குண்டு மீட்பு


மட்டக்களப்பு - ஏறாவூர் தலவாய் பிரதேசத்தில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் ஐயங்கேணி வித்தியாலயத்திற்கு அண்மையில் வைத்து இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலையடுத்தே எஸ்.எப்.பி 36 வர்க்கத்தைச் சேர்ந்த இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது என ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரால் மீட்கப்பட்ட இந்தக் கைக் குண்டை செங்கலடி இராணுவ முகாம் குண்டு செயலிழக்கும் பிரிவினர் செயலிழக்கச் செய்துள்ளனர்.

## சந்திப்பு...



இலங்கைக்கான ஆஸ்திரேலிய நாட்டின் தூதுவர் கெதே குலூக்மென் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடுகின்றார்.

# தங்க நகைகள் கொள்ளையடிப்பு: சந்தேகநபர் கைது

கொழும்பு, மார்ச் 25

பாணந்துறை ஹேனமுல்ல பிரதேசத்திலுள்ள வீடொன்றில் பட்டப்பகலில் ஆறு லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகை களை கொள்ளையடித்து தப்பிச்சென்ற நபரொருவரை பொலிஸார் நகைகளுடன் பிடித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. சம்பவம் குறித்து வீட்டு உரிமையாளர் உடனடியாக பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதையடுத்து, பொலிஸார் விசேட தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு குறித்த நபரை பிடித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# பகிஷ்கரிப்பால் புகையிரத சேவைகள் ஸ்தம்பிதம்

தங்களுக்கு குறிப்பிட்ட திகதியில் சம்பளம் வழங்கப்படாததை ஆட்சேபித்து ரயில்வேத் திணைக்களத்தின் இயக்கப் பிரிவு, சமிக்ஞைப் பிரிவு, எஞ்சின் சாரதிகள், ஏனைய பணியாளர்கள் ஆகியோர் நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் மாலை 3.30 மணி வரை பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இந்தப் பணிப் பகிஷ்கரிப்பால் நேற்று முன்தினம் மாலை நடைபெறவிருந்த ஐந்து பிரதான ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டன என ரயில்வேத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

ரயில்வே ஊழியர்களின் சம்பளங்கள் வங்கிகள் மூலமாக வழங்கப்படுவது நடை முறையாகும். அதன் அடிப்படையில் சிலருக்கு காசோலைகள் வழங்கப்படும். எனினும், சம்பள தினமான 22 ஆம் திகதி அவர்களுக்கான காசோலைகளை வழங்க அதிகாரிகள் தவறியுள்ளனர்.

அதன் பிரதிபலிப்பாகவே இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டது என புகையிரத சேவைத் தொழிற் சங்கங்களின் பிரதம செயலாளர் சம்பத் ராஜித தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் பற்றி அறிந்த போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம சம்பந்தப்பட்ட தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தினார். அதன்பின்னர் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கான காசோலைகளை நேற்று வழங்குமாறு திணைக்களத்தின் பிரதம கணக்காளருக்கு அமைச்சர் உத்தரவு பிறப்பித்ததையடுத்து வேலைநிறுத்தம் கைவிடப்பட்டு சகல ரயில் சேவைகளும் வழமைக்குத் திரும்பின.

# நிதி ஒதுக்கீடு

கொழும்பு,மார்ச்25

மொரஹகந்த நீர்த்தேக்கத்தின் நிர்மாணப் பணிகளுக்காக நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சுக்கு 2,280 மில்லியன் ரூபாய் நிதி கிடைக்கப்பெற்றுள்ளதாக நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ பிரதியமைச்சர் டப்ளியு.பீ.ஏக்கநாயக்கா தெரிவித்துள்ளார்.

# சர்வதேச நாடுகளின் கைப்பொம்மையாக ஐ.நா. சபை மாறியுள்ளது

## லிபியத் தாக்குதலை சர்வமதக் கூட்டமைப்பு கண்டிக்கிறது

கொழும்பு, மார்ச் 25

உலகில் சமாதானம், அமைதி, நீதி, நியாயம் போன்றவற்றை ஏற்படுத்துவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச சக்திகளின் கைப்பொம்மையாகச் செயற்படுவதாக தேசிய ஐக்கியத்துக்கான சர்வமத கூட்டமைப்பு நேற்று முன்தினம் குற்றஞ்சாட்டியது.

லிபியா மீது சர்வதேச நாடுகள் தாக்குதல் நடத்தி வருகின்ற நிலையில் ஐக்கிய நாடுகள் சபை இதனைக் கண்டிக்காமல் அமைதியாக வேடிக்கை பார்ப்பதாக தேசிய ஐக்கியத்துக்கான சர்வமத கூட்டமைப்பின் உறுப்பினரும் சப்ரகமுவப் பல்கலைக் கழக வேந்தருமான கும்புறுகமுவே வஜிர தேரர் கொழும்பில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

உலக சமாதானத்துக்குத் தற்போது பெரும் அச்சுறுத்தல் தோன்றியுள்ளது. உலக சமாதானத்தைக் காப்பாற்றவேண்டிய முக்கியமான நாடுகள் பல ஒன்றிணைந்து லிபியாவில் மனிதாபிமானமற்ற வகையில் தாக்குதல்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றன. லிபியாவில் மனிதாபிமானத்தை ஏற்படுத்துவதற்காகவே இந்தத் தாக்குதல்கள் என்று தம்மால் மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதலை நியாயப்படுத்துகின்றன. லிபியா மாத்திரமல்ல மத்திய கிழக்கிலுள்ள பல நாடுகளும் தற்போது இந்த அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளன.

தமது சூழ்ச்சியாளர்களை குறித்த நாடுகளுக்கு அனுப்பி அங்கு உள்நாட்டுக் குழப்பங்களை ஏற்படுத்துவதே சர்வதேச சக்திகளின் நடவடிக்கையாகும். ஈராக்கிற்கும் இதனையே செய்தனர் என்பதை நாம் கடந்த காலத்தில் கண்டோம். சதாம் ஹுசைனை எந்தவொரு காரணமுமின்றி கொலைசெய்தனர். லிபிய அதிபர் கேர்ணல் கடாபி மேற்கு நாடுகளுக்கோ, சர்வதேச சக்திகளுக்கோ அடிபணிந்தவர் அல்லர்.

கடாபியை மண்டியிடச் செய்ய வேண்டும் என மேற்கு நாடுகள் பல தடவைகள் முயற்சி செய்தபோதிலும் அதனைச் செய்ய முடியாமல் தடுமாறியதை நாம் கண்டுள்ளோம். லிபியாவின் உள்விவகாரத்தில் ஏனைய நாடுகள் தலையிட வேண்டிய அவசியமில்லை. அது அவர்களது நாட்டுப் பிரச்சினை. மேற்கு நாடுகள் பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்து வருகின்ற நிலையில் தமது பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்காக லிபியா மீது தாக்குதல்களை நடத்தி, அங்குள்ள எண்ணெய் வளங்களை சூறையாடி அதன் மூலம் தமது பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளவே முயற்சிக்கின்றன.

உலக சமாதானம், அமைதி, நீதி, நேர்மை என்பதை காப்பற்றுவதற்காக அமைக்கப்பட்ட நிறுவனமான ஐக்கிய நாடுகள் சபை தற்போது லிபியா மீது தாக்குதல் நடத்தி கொலைகளை செய்வதற்கு மேற்கத்தைய நாடுகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது. கொலைகாரர்களுக்கு அனுமதி வழங்கும் நிறுவனமாகத் தற்போது ஐக்கிய நாடுகள் சபை உள்ளது. ஐக்கிய நாடுகள் சபை மீது எமக்கிருந்த நம்பிக்கை இப்போது இல்லாமல் போய்விட்டது. நீதியை நிலைநாட்டும் நிறுவனம் என்பதையும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. சர்வதேச சக்திகளின் பகடைக் காயாகவே ஐக்கிய நாடுகள் சபை உள்ளது. - என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச்சாலைக் காட்சிகள்...



யாழ்.நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் அண்மையில் நடைபெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியின்போது விருந்தினர்களாகக் கலந்து கொண்ட சதா மகாலிங்கசிவ குருக்கள், சமுர்த்தி உத்தியோகத்தர் ஜெ.கலைச்செல்வி, பழைய மாணவர் க.விஜயராசா ஆகியோர் மாணவர்களுடன் இணைந்து இறை வணக்கம் செலுத்துகின்றனர். (ற)



கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி அண்மையில் நடைபெற்ற போது இசையும் அசைவும் நிகழ்வு இடம்பெறுகிறது. (325)



பளை தர்மக்கேணி அ.த.க. பாடசாலையில் கல்வி கற்கும் 40 மாணவர்களுக்கு பச்சிலைப்பள்ளி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் வைத்து ரூபா 1500 பெறுமதியான பயிற்சிப் புத்தகங்கள் வழங்கப் படுகின்றன. (ற)



கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின்போது பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் உரையாற்றுகிறார். கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பாடசாலை அதிபர், விருந்தினர்கள் அமர்ந்துள்ளனர்.



நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியின்போது மாணவர்களின் அணி வகுப்பு இடம்பெறுகிறது. (236)

# காலநிலை மாற்றமடைவதால் நோய்கள் பரவும் வாய்ப்பு அதிகம்

யாழ்ப்பாணம்,மார்ச் 25

நாட்டில் தென்மேற்குப் பருவ மழை ஆரம்பமாக இருப்பதனால் ஐந்து விதமான நோய்கள் யாழ். மாவட்டத்தில் பரவக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன என்று யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டின் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் யாழ்.புகையிரத நிலையத்தில் யாழ்.சிவில் அலுவலகத்தின் படைப் பிரிவினரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றும்போது:

டெங்குநோய், மலேரியா, சிக்குன்குனியா, ஜப்பானிய மூளைக் காய்ச்சல், யானைக்கால் நோய் போன்ற ஐந்து விதமான நோய்கள்பரவக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன.

இதனை அனைவரும் உணர்ந்து வீடுகள், பாடசாலைகள், வேலைத்தளங்கள் போன்ற இடங்களில் நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களைத் துப்புரவு செய்யும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். கடந்த வருடம் டெங்கு நோயினால் 300 பேர் பாதிக்கப்பட்டார்கள். அவர்களுள் 22 பேர் இறந்தும் உள்ளனர். அதேபோல் மலேரியா நோயினால் இரண்டு பேர் இறந்தனர்.

தற்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மலேரியா நோய் பரவியுள்ளது.

இதனால் வன்னிப் பிரதேசத்திலிருந்து யாழ்.மாவட் டத்துக்கு வருகின்றவர்களால் மலேரியா பரவும் அபாயம் ஏற் பட்டுள்ளது.

இதுபோன்ற நுளம்பினால் ஏற்படும் நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமானால் நுளம்பை இல்லாது ஒழிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்- என்றார். (ம-313)

# நுளம்புகளின் தாக்கத்திலிருந்து விடுபட அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்

யாழ்ப்பாணம்,மார்ச் 25

டெங்கு மற்றும் நுளம்புத் தாக்கங்களில் இருந்து நாம் விடுபட வேண்டுமானால் சிறுவர்கள் உட்பட அனைவரதும் பங்களிப்பு முக்கியம் என்று யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

டெங்கு ஒழிப்பு வாரத்தையொட்டி யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட சிரமதான ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். தொடர்ந்து உரையாற்றுகையில்:

இன்று தேசிய டெங்கு ஒழிப்புத்திட்டம் ஆரம்பமாகிறது. இது ஒரு முக்கியமான தினம். இதற்கு எமது முழு ஆதரவும் உள்ளது. யாழ்ப்பாணத்தில் பரவலாகக் காணப்பட்ட இந்த நோயை இல்லாது ஒழிக்க உங்களுடன் இணைந்து கடமையாற்றவுள்ளோம். எமது சூழலிலும் பிற பகுதிகளிலும் இந்த நோயின் தாக்கங்கள் ஏற்படாதவாறு சிறுவர்களும் அதற்கு உதவ வேண்டும். அனைவரும் ஒத்துழைத்தால் மட்டுமே இதற்கு முடிவு கிடைக்கும்.-என்றார். (ம-7)

# சமூக, சமய பணிகளில் ஈடுபட்ட நால்வர் கௌரவிப்பு

பளை,மார்ச் 25

பளைப் பிரதேசத்தில் நீண்ட காலம் சமூக, சமயப் பணிகளில் ஈடுபட்டுவரும் நால்வரை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலயத்தினர் கௌரவ பட்டங்கள் வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

மகா சிவராத்திரி தினத்தன்று இந்த ஆலயத்தில் நடை பெற்ற உற்சவத்தின்போது இந்த நால்வரும் கௌரவிக்கப்பட்டனர்.

பளை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய வைத்திய அதிகாரி ச.அம்பிகைபாகனுக்கு ''வைத்திய மாமணி'' என்னும் பட்டமும் பிரதேச மாணவர்களின் கல்வி, பாடசாலைகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு வித்திட்ட இளைப்பாறிய அதிபர் ந.தாமோதரம்பிள்ளைக்கு ''ஆசிரிய மணி'' பட்டமும், பிரதேசத்தில் நீண்ட காலமாக சித்த வைத்தியத் துறையிலும் சோதிடத் துறையிலும் செயற்பட்ட வே.சுப்பிரமணியத்துக்கு ''சித்த வைத்திய மணி'' என்னும் பட்டமும், மல்வில் ஆலயத்தில் நீண்ட காலமாக புராணிகராகவும், உற்சவங்களின் போது நடைபெறும் புராணப் படிப்புக்குப் பயன் கூறுபவராகவும் இருந்துவரும் வே.கணபதிப்பிள்ளைக்கு "புராண வித்தகர்" பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அத்துடன் சிவராத்திரியை முன்னிட்டு பிரதேச அறநெறிப் பாடசாலைகளின் மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (எ-207)

# நிர்வாகிகள் தெரிவு

மந்துவில் தியாகி இரத்தினம் சனசமூக நிலைய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. தலைவர்- யே. அருள்நேசன், உப தலைவர் - க.பாஸ்கர மூர்த்தி, செயலாளர் - இ.தர்மேந்திரா, பொருளாளர் -சி.தீபன், போசகர் - க.பவனேந்திரன். நிர்வாக சபை உறுப்பினர்களாக ப.நிதர்சன், க.நிஷாந்தன், பா.தினேஸ் குமார், க.அரியரத்தினம், ந.கோமளேஸ்வரன், இ.ஜெனார்த்தனன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ம-122)

* * *

காரைநகர் பெரிய மணலில் மாதர் கிராம அபிவிருத் திச் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகள் விவரம் வருமாறு:

தலைவி- கி.அஷ்வினி, செயலாளர் - திருமதி சு. ஏஞ்சலா, பொருளாளர்- திருமதி ச.யோகேஸ்வரி, உப தலைவி- திருமதி கு. ராதிகா, உப செயலாளர் திருமதி த. நாகரூபி. நிர்வாக உறுப்பினர்களாக பிறேமினா, இராசமலர் தவமலர்,இந்திராணி,மனோன்மணி, விக்னேஸ்வரி, செல்வராணி, நந்தினி ஆகியோர் தெரிவாகியுள்ளனர். (எ-250)

* * *

புலோலி தென் மேற்கு கந்த முருகேசனார் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாக சபையினராக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்-பா.இரகுநாதன், செயலாளர்-திருமதி சரஸ்வதி தியாகராசா, பொருளாளர்- க.கிருபாகரன் அத்துடன் 8 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (236)

## வீட்டுத் தோட்டப் போட்டி; சான்றிதழ் பெற்றோர்

காரைநகர்,மார்ச் 25

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் தேசிய செயற்றிட்டத்தின் கீழ் காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் நடத்தப்பட்ட தனியார் வீட்டுத் தோட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் காரைநகர் பிரதேச விவசாயக் குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:

சு.சண்முகராசா (தங்கோடை, காரைநகர்), சு.விஸ்வலிங்கம் (சிவன்கோயிலடி , காரைநகர்), திருமதி நவநீதராணி பத்மசோதிநாதன் (கருங்காலி, காரைநகர்). (ம-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
எந்தக் காரியத்தையும் ஒன்றுக்கு பல முறை யோசித்துச் செய்ய வேண்டும். அயலாரின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். எதிர்பார்த்த பணவரவுகள் கடும் இழுபறிக்குப் பின்னர் வந்து சேரலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவர் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களின் மீது காட்டலாம். பயணங்களில் தடை, தாமதம் ஏற்படும்.

**இடபம்:**
சஞ்சலங்கள் நீங்கி சந்தோஷம் அதிகரிக்கும் நாள். சுப காரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை தரும் வகையில் அமையும். பொதுவாழ்வில் உள்ளோருக்கு புகழ், செல்வாக்கு கூடும். பயணங்கள் பலன் தரும் விதத்தில் அமையும்.

**மிதுனம்:**
தொழில் மாற்றம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். இனிமையான பேச்சுக்களால் காரியங்கள் சாதிப்பீர்கள். உறவினர்களின் பாச மழையில் நனைவீர்கள். மலை போல் வந்த பிரச்சினை ஒன்று பனிபோல் விலகும். புதிய நண்பர்களின் அறிமுகம் கிட்டும். தேக ஆரோக்கிய பராமரிப்பில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்:**
கவலைகள், குழப்பங்கள் அதிகரிக்கலாம். நாடி வந்த நண்பர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். மற்றவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்கும் போது யோசித்துச் செய்ய வேண்டும். மன நிம்மதி பெற இறைவழிபாடுகளை மேற்கொள்வீர்கள்.

**சிங்கம்:**
தொழில் ரீதியான அலைச்சல் அதிகரிக்கலாம். கொடுக்கல் வாங்கல்களில் சிரமங்களைச் சந்திக்கலாம். மேலதிகாரிகள் அனுசரணையாக நடந்து கொள்வர். பாசமிக்க நண்பர்கள் பகையாகாமல் இருக்க யோசித்துச் செயற்பட வேண்டும். உறவினர்கள் சிலர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம்.

**கன்னி:**
நினைத்தது நினைத்தபடி நடக்கும் நாள். சந்தோஷமான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர். எதிர்ப்புகள், போட்டிகள் குறையும். தொழில் ரீதியான பயணங்கள் செல்லலாம். அதிக விலைக்கு வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்கலாம்.

**துலாம்:**
குடும்ப உறுப்பினர்கள் சிலருக்கு புத்திமதி சொல்வீர்கள். செலவுகளை நினைத்து கவலை கொள்வீர்கள். பிறரை நம்பி யாருக்கும் வாக்குறுதி கொடுக்க வேண்டாம். அலைச்சல்கள் குறைந்து ஓய்வு எடுக்கும் நாள். பொழுது போக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டலாம்.

**விருச்சிகம்:**
தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். நண்பர்கள் பாராட்டும் வகையிலான காரியம் ஒன்றைச் செய்வீர்கள். நாளை வரும் என நினைத்த பணவரவு ஒன்று இன்றே கைக்கு கிடைக்கலாம். உங்களின் கடந்த கால அனுபவங்களைப் பற்றி மற்றவர்களிடம் பெருமையாகப் பேசுவீர்கள். பெண்கள் வழியில் உதவி கிட்டும்.

**தனுசு:**
தொழில் ரீதியாக சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். பல விதமான செலவுகளால் கையிருப்பு பணம் கரையலாம். வீண் பழிகளைத் தவிர்க்க பணியில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட வேண்டும். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். குரு வழிபாட்டின் மூலம் குதூகலம் அதிகரிக்கும். காரியத் தடைகள் நேரும்.

**மகரம்:**
நீண்ட நாள் நண்பர்களின் சந்திப்பால் முக்கிய காரியம் ஒன்று முடிவிற்கு வரும். வாகன யோகத்திற்கும் வாய்ப்பு உண்டு. ஒரு வகையில் வந்த பணவரவு ஒன்றை, மற்றொரு வகையில் தாராளமாகச் செலவு செய்வீர்கள். மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:**
எடுத்த காரியங்களில் தங்கு தடையற்ற வெற்றி காணும் நாள். கணவன் மனைவி இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் அகன்று சந்தோஷம் அதிகரிக்கும். தொழில் முன்னேற்றம் கருதி முக்கிய முடிவு ஒன்றை எடுப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் நெருக்கடிகளை எதிர்கொள்ளலாம். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம்.

**மீனம்:**
மனதை விட்டு அகலாத சம்பவங்கள் நடக்கலாம். மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். தர்ம, புண்ணிய காரியங்களில் நாட்டம் செல்லும். மாமன், மைத்துனர்கள் உங்களிடம் உதவி கேட்டு வரலாம். பல நாள்களாக மற்றவர்களிடம் சொல்லாமல் வைத்திருந்த ரகசியம் ஒன்றை இன்று வெளிப்படுத்துவீர்கள்.

# பொங்கி எழுந்தனர் பொறு

# பொறுக்கு வையக





அன்றைய தினம் ஜப்பானுக்கு சபிக்கப்பட்டிருந்தது போலும். வரலாறு காணாத நிலநடுக்கம், சுனாமி மட்டுமல்ல வெடிக்கப் போகிறேன் என்று மிரட்டிக் கொண்டிருந்த அணு உலைகளும் பெரும் பிரச்சினையாக உருமாறின. இரவு எட்டு மணியை எட்டும் தறுவாயில் அணு உலைகளில் ஏற்பட்ட கோளாறுகள் காரணமாக நாட்டில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டது.

ஜப்பானியப் பிரதமர் (Prime Minister Naoto Kan) அடிக்கடி மக்களுக்கும் உலகினுக்கும் செய்திகளை விடுத்த வண்ணம் இருந்தார். நெஞ்சில் உறுதி கொண்ட மக்களின் பிரதமரான அவரின் முகத்தில் ஈயாடவில்லை. கண்கள் கலங்கிவிடுமோ என்கின்ற அளவிற்கு உணர்ச்சி விளிம்பில் நின்றுகொண்டே அவர் பேசுகிறார். நாடாளுமன்றத்தில் கூரையும் லைட்டுகளும் குலுங்க அவசர கூட்டம் நிதானமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. இடைக்கிடை கூரையைப் பார்க்கவும் உறுப்பினர்கள் தவறவில்லை.

இழப்புக்களையும் இறப்புகளையும் ஜப்பான் மிக நிதானமாக உறுதிப்படுத்தியே அறிவித்துக் கொண்டிருந்தது. மக்களை மேலும் பீதியில் ஆழ்த்த அரசு விரும்பவில்லை. எனினும் நிலைமை படு பயங்கரமானது என்பதை ஊடகங்கள் தெளிவுபடுத்திக் கொண்டிருந்தன. உலக நாடுகள் அனைத்தில் இருந்தும் ஜப்பானிலுள்ள தமது உறவுகள் பற்றிய தகவலை அறிய மக்கள் முண்டியடித்தனர். தகவல்களை அறிய விசேட தொலைபேசி இலக்கங்களை நாடுகள் பலவும் அறிவித்தன.

பூகம்பம், சுனாமிக்குத் தப்பிப் பிழைத்து இருந்தவர்களும் தமது சூழலில் மின்சாரம், தொலைத்தொடர்பு மற்றும் இணைய வசதிகள் இருந்தால் மட்டுமே ஏனையவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தக் கூடியதாக நிலைமை இருந்தது. அதுவும் தத்தமது சூழலில் உள்ள நிலைமைகளை மட்டுமே யானை பார்த்த குருடர்கள் போல அவர்கள் அறிவித்துக் கொண்டனர். குடிதண்ணீருக்கும் உணவுக்கும் கடுமையான தட்டுப்பாடு உடன டியாகவே பல இடங்களில் ஏற்பட்டுவிட்டது. விடிந் ததும் அது பெரும் சவாலாக இருக்கப் போகிறது. தண்ணீர் விநியோகம் பெரும்பாலும் துண்டிக்கப்பட்டு விட்டது.

இரவு 8.30 மணியளவில் மீண்டும் BBC செய்தியாளர் றோலன்ட் பேக் ரோக்கியோவிலிருந்து தகவல் தருகையில், பூகம்பமும் சுனாமியும் 32 பேரை காவு கொண்டமை உறுதியானதாகத் தெரிவித்தார். ஆயிரக் கணக்கில் லட்சக் கணக்கில் என்றெல்லாம் அறிக்கை விட அவர்கள் தயாரில்லை. ஆனால் உண்மை நிலைவரங்கள் எப்படி இருக்கும் என்பதை ஊகிக்க [illegible]ருக்கும் இயலும். மீட்புப் பணியாளர்கள் உடல[illegible]ளை எண்ணும்வரை இறந்தவர்கள் அவ்வாறு இறந்தவர்களாகக் கணக்கிடப்படமாட்டார்கள். ஆனால் பிரமாண்டமான சுனாமி அலைகள் கூட்டமாக விலகி ஓடிவரும் மக்களைத் துரத்தித் துரத்தி காவுகொள்ளும் கோரக் காட்சிகள் உயரமான கட்டடங்களிலிருந்து படமாக்கப்பட்டிருந்தன. அந்தக் காட்சிகளை இணையத் தளங்கள் மற்றும் ஊடகங்கள் வெளியிட்டு இருந்தன.

மீட்புப் பணியாளர்கள் சில இடங்களை எட்ட பல நாள்கள் பிடிக்கலாம். அதுவரை குற்றுயிரும் குலையுயிருமாகப் போராடிக் கொண்டிருப்பவர்களோ உணவுக்கும் தண்ணீருக்கும் பரிதவிப்பவர்களோ குழந்தைகள், வயோதிபர்களோ என்ன செய்யப்போகிறார்கள்?

மேலும் ரோக்கியோ நிலைவரம் பற்றி அனர்த்தம் நடைபெற்று 6 மணித்தியாலங்கள் கழிந்த நிலையில் அவர் குறிப்பிடுகையில் ''அங்கு ரயில்கள் ஓடவில்லை. வாக

மு.சிவநேசன்
sivanesan@usa.com

னப் போக்குவரத்தில் நெரிசல் ஏற்பட்டுள்ளது. வாகனங்களால் அசைய முடியவில்லை. மக்கள் வீதிகளில் குவிந்துள்ளனர். அனைவரின் முகங்களிலும் சோகமும் பீதியும் தெரிகின்றது. நீண்ட தொலைவுக்குக்கூட நடந்து செல்லப் பலர் முனைகிறார்கள். பஸ்கள் புறப்படவில்லை'' என்றெல்லாம் அடுக்கிக் கொண்டே போகிறார். மேலும் மொபைல் போனுக்கான சிக்னல் தடைப்பட்டு இருந்தது.


ஒரு கப்பல் 100 பயணிகளுடன் சுனாமியினால் இழுத்துச் செல்லப்பட்டதாக தகவல் வெளியாகி இருந்தது. தலைநகர் ரோக்கியோவின் வடக்கே 250 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள Fukushima அணுமின் நிலையத்தில் செயலிழப்பும் வெப்பநிலை அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளது. வெடிப்பைத் தவிர்க்க விஞ்ஞானிகளின் முனைப்பும் தீவிரமாக, போராட்டமாக இரவு முழுவதும் இருக்கப்போகிறது என்கின்ற செய்தியும் பரவிவிட்டது. அணுக்கதிர் வீச்சிலிருந்து பாதுகாக்க அப் பிராந்தியத்திலிருந்து மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் முனைப்புப் பெற்றன.

அனர்த்தம் இடம்பெற்று ஏழு மணித்தியாலங்கள் கழிந்த நிலையில் எதிர்பார்த்தபடி பிலிப்பீன்ஸ் மற்றும் இந்தோனேசிய கரைகளைச் சிறிய சிறிய சுனாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...றுமைத் தாய்

## ...தமா ...கம்








...லைகள் பதம் பார்த்தன. அவற்றின் வீரியம் குறைவாகவே இருந்துள்ளது. அவை ஒரு மீற்றர் உயரத்திற்கு குறைவாகவே காணப்பட்டன. சற்று நேரம் கழிந்த நிலையில் பசுபிக் சமுத்திர மத்தியிலுள்ள ஹவாய் தீவுகளை 2 மீற்றர் உயரமான சுனாமி அலைகள் தாக்கத் தொடங்கின. கடல் சுமார் 25 அடி வரை உள்ளே எட்டிப் பார்த்திருந்தது.

பெரும் பூகம்பத்தைத் தொடர்ந்து அடுத்தடுத்து பல பின் விளைவான அதிர்வுகளும் தீவிரமாகவே ஏற்பட்டுக் கொண்டிருந்தமை மேலும் அச்ச நிலமையைத் தோற்றுவித்தது. அவை ரிச்டர் அளவில் 5.5, 6.5 என்றெல்லாம் வாசிப்பைக் காட்டின. அதனால் மேலும் மேலும் சுனாமி எச்சரிக் கைகள் விடப்பட்டன. 300 விமானங்கள் மற்றும் ஹெலி கொப்டர்கள் 50 கப்பல்கள் சகிதம் மீட்புப் பணியில் முனைப்புடன் ஜப்பானிய இராணுவத் தினர் களமிறங்கி இருந்தனர். நேரம் நள்ளிரவை எட்டிவிட்டதால் விடியலை நோக்கி ஏங்க வேண்டிய அவசியம் அனைவருக்கும் இருந்தது.

நிமிடங்கள் யுகங்களாகக் கழிந்து கொண்டிருந்தன. களைப்பு, அசதி உறக்கமின்மை, சோகம், இழப்பு, தவிப்பு, வேதனை, வலி, தாகம், பசி, பிரிவு, ஏக்கம், அச்சம், பீதி, இருள், குளிர் எனப் பல விதமான உணர்வுகளுடன் மக்கள் தவிக்கிறார்கள்.

விடிந்தால் சனிக்கிழமை - ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வுகள், போட்டிகள் பலவும் இரவிர வாக ஒத்தி வைக்கப்பட்டன. வெள்ளிக்கிழமை நள்ளிரவில் பதிவாகிய இறப்புக்களின் எண்ணிக்கை 117 என ஜப்பான் அறிவித்திருந்தது. பலமான சுனாமித் தாக்கங்களுக்கு ஆளான இடங்கள் இதில் கருதப்பட்டிருக்கவில்லை. கற்பனைக் கதைகளை கட்டவிழ்த்துவிட அரசு தயாரில்லை.



எனினும் நிலைமையை கணித்துக் கொண்ட நாடுகள் உதவிடத் தம்மைத் தயார்ப்படுத்தின. சகல வசதிகளும் கொண்ட விமானந்தாங்கி கப்பலை அமெரிக்கா ஜப்பானிய கரையை நோக்கி நகர்த்தலானது. இரண்டாவது அமெரிக்க விமானந் தாங்கி கப்பலும் ஜப்பானை நோக்கிப் புறப்பட்டு இருந்தது. அணு உலைகளில் குளிரூட்டும் பொறிமுறையின் செயலிழப்பைச் சரிக்கட்ட விமானம் மூலமாக விஞ்ஞானிகளையும் கருவிகளையும் அனுப்பி வைக்க அமெரிக்காமேலும் தயாரானது. இங்கிலாந்து சீனா, கொரியா போன்ற நாடுகளும் மீட்புப் பணியில் உதவ ஜப்பான் கோர முன்னரே தம்மைத் தயார்ப்படுத்தி வைத்துக் கொண்டன. ஜப்பானிய நேரம் நள்ளிரவை கடந்து சனிக்கிழமை முன்னிரவு 2.00 மணி ஆகிறது. அணு உலைகள் கட்டுப்பாட்டை மீறி சூடேறி வருகின்றன. அதனைச் சூழவுள்ள மக்கள் அவசர மாகப் 10 அல்லது 15 கி.மீ. அப்பால் விலகிச் செல்லு மாறு கேட்கப்பட்டனர். இரண்டாம் உலகப் போரில் அணு குண்டு வீச்சில் அதிகம் பாதிக்கப்பட்ட ஜப்பானியர்களை மீண்டும் அணு உலைகள் அச்சுறுத்தத் தொடங்கிவிட்டன. நிம்மதியாக ஓரிடத்தில் உறங்கக் கூட வழியில்லை.

ரோக்கியோவில் குடியிருப்புக்குத் திரும்பிய ஜரோட் லென்ற் தனது மாடிக் குடியிருப்புக்கு வெளியே வீதிபிளந்து கிடப்பதாகவும் விநியோகக் குழாய்கள் துண்டிக்கப்பட்டதால் மின்சாரமோ தண்ணீரோ சமையலுக்கான எரிவாயுவோ கிடைக்கவில்லை எனவும் கடைகளுக்குச் சென்றவர்கள் அவை மூடிக் கிடப்பதால் எதையும் வாங்க முடியவில்லை எனவும் தெரிவித்தனர். தொலைவில் வேறு சில குடியிருப்புக்களில் மின்சாரம் இருப்பதையும் உறுதிப்படுத்தினார்.

கென் ஹொம் ரோக்கியோவின் ஹோட்டல் ஒன்றில் நீச்சல் தடாகத்தில் குளித்துக் கொண்டிருந்தபோதே அதிர்வு ஏற்பட்டது. இரண்டு நாள்களுக்கு முன்னரும் அவ்வாறு ஒரு சிறு அதிர்வு ஏற்பட்டதையும் அதனை தாங்கள் ரசித்து அனுபவித்ததையும் அவர் நினைவு கூர்ந்தார். அதிர்வு அடங்கிய பின்னரும் தண்ணீர் தங்களை 15 நிமிடங்கள் தாலாட்டிக் கொண்டிருந்ததாக வும் இன்றைக்கும் அதே அனுபவத்தைப் பெற விரும்பியதாகவும் ஆனால் செக்கன்கள் நிமிடங்களாக கோரம் புரியத் தொடங்கியதாகவும் அதிர்ச்சியில் உறைந்ததாகவும் தகவல் தந்திருந்தார்.

(நாளையும் அதிரும்)

# தேர்தல் பண்பாடு



"அந்த மனிதரைக் கண்டால் ஏன் இப்படி முகத்தைத் திருப்பிக் கொண்டு வருகின்றீர்? என்று ஒருத்தர் கேட்டதற்கு "தேர்தலின் என்னை எதிர்த்து நின்றவன் அவனுடன் எனக்கு என்ன பேச்சு. என்றார் மிகுந்த கோபத்துடன்.

"சரி அந்த மனிதர் யார்?" என்று கேட்டதற்கு என் கூடப் பிறந்த தம்பிதான் அவன்" என்றார் அந்தக் கோபம் சற்றும் குறையாமலே. எங்கள் ஊரிலே உள்ள நிலவரம் இப்படி? இங்கிலாந்தில் எப்படித் தெரியுமா?

அங்கே ஒரே மேடையில் போட்டி போடுகின்ற இரண்டு வேட்பாளர்களும் பேசுவார்கள். பட்டிமன்றம் மாதிரி ஒருத்தர் முதலில் எழுந்திருந்து தான் வெற்றி பெற்றால் என் னென்ன செய்வேன் என்று சொல்லிவிட்டு போய் இருப்பார். அதன்பின் மற்றவர் எழுந்து சென்று தானும் வெற்றி பெற்றால் என்னென்ன செய்வேன்என்பதை சொல்லிவிட்டு போய் இருப்பார். மக்கள் இரண்டு பேர் பேச்சையும் கேட்டுவிட்டு ஒரு முடிவுக்கு வருவார்கள்.

ஒரு முறை இந்த மாதிரி ஒரு கூட்டம் நடந்து கொண்டிருந்தது. குறிப்பிட்ட நேரத்திற்கு சரியாக ஒரு வேட்பாளர் வந்து சேர்ந்தார். தனக்கு ஏன் வாக்குப் போட வேண்டும் என்பதைப் பற்றிப் பேசினார். அதற்கான காரணங்களையும் வரிசையாகச் சொன்னார்.

மற்ற வேட்பாளர் வந்து சேரவில்லை. சற்றுநேரம் காத்திருந்தார்கள். அதன்பின் அந்த முதல் வேட்பாளரே திரும்பவும் எழுந்து சென்று ஒலி வாங்கி முன் வந்து நின்று பேச ஆரம்பித்தார்.

"என்னை எதிர்த்து நிற்கும் வேட்பாளர் ஏனோ இன்னமும் இங்கே வந்து சேரவில்லை. அதனாலே அவர் தன் பக்கமுள்ள நியாயங்களை எடுத்துச் சொல்லித் தனக்கான வாக்குகளை கேட்கின்ற வாய்ப்பை இழத்து நிற்கிறார். அதனால் இப்போது அவர் சார்பாக அவர் தனக்கு ஏன் வாக்கு கேட்கிறார் என்பதை நானே இங்கே எடுத்துச் சொல்லிவிடுகிறேன்" என்று கூறிவிட்டு போட்டி வேட்பாளர் பக்கமுள்ள நியாயங்களை இவரே எடுத்து கூறினார்.

எப்படியிருக்கிறது பார்த்தீர்களா தேர்தல் பண்பாடு? அதுமட்டுமின்றி இங்கிலாந்தில் வாக்குக் கேட்கும்போதே வெற்றியா, தோல்வியா என்பதை ஓரளவு உத்தேசித்து விடலாம்.

வேட்பாளர் ஒருவர் ஒரு வீட்டுக்கு முன் போய்நின்று எனக்கு வாக்குப் போடுங்கள் என்று கேட்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்கென்ன பார்த்துச் செய்கிறோம் போய் வாருங்கள் என்று சில வீடுகளில் வாசலில் நின்று கொண்டே சொல்லி அனுப்பி விடுவார்கள். ஆனால் வேறு சில வீடுகளில் வேட்பாளரை வீட்டுக்குள் கூப்பிட்டு தேநீர் கொடுத்து அனுப்பி வைப்பார்கள்.

இந்த இரு வீட்டு வாக்குகளிலும் எந்த வீட்டு வாக்குத் தான் நிச்சயம் என்றால் வாசலில் நின்றே வழியனுப்பி வைக்கின்ற வீட்டுக்காரரின் வாக்குத்தான் நிச்சயம். உள்ளே கூப்பிட்டு தேனீர் கொடுத்து அனுப்புபவர்களின் வாக்கு நிச்சயமில்லை. ஏன் அந்த உப சரிப்பு என்று தெரியுமா? அது ஓர் அனுதாபத்தைத் தெரிவிக்கின்ற முறை.

"ஐயோ பாவம் நாம் இவருக்கு ஓட்டுப் போடப் போவதில்லை. இதையாவது செய்வோம். சாப்பிட்டுவிட்டுப் போகட்டும், என்பதற்காக அப்படிச் செய்வார்கள்.

ஒரு சமயம் ஓர் ஊரில் தேர்தல் நடந்தது. ஒரு தொகுதியில் நின்று தோற்றுப்போன ஒருத்தர் கையில் ஒரு துப்பாக்கியோடு ஊருக்குள் சுற்றிக் கொண்டு இருந்தார். அவரை ஒரு பொலிஸ்காரர் பார்த்து சந்தேகப்பட்டார். அதனால் அவரைத் தடுத்து நிறுத்தி " ஏன் துப்பாக்கியோடு சுற்றுகிறீர்கள்?" என்று விசாரித்தார்.

அதற்கு அவர் " ஐயா இந்தத் தொகுதியில் மொத்தம் ஒரு லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். அதில் எனக்குப் பத்தாயிரம் பேர் மட்டும் தான் வாக்களித்திருக்கிறார்கள். அப்படியென்றால் என்னைப் பிடிக்காதவர்கள் இந்தத் தொகுதியில் 90 ஆயிரம் பேர் இருக்கிறார்கள் என்றுதானே அர்த்தம். இப்படியான ஒரு சூழ்நிலையில் நான் என்னுடைய பாதுகாப்புக்கு ஆயுதம் இல்லாமால் நடமாடலாமா?" என்று கேட்டார். எவ்வளவு எச்சரிக்கை!

சில பேர் வாக்குக் கேட்கிற விதமே தனி. ஒருத்தர் மிகுந்த சாமர்த்தியமாக வாக்குக் கேட்பார். அது எப்படியென்றால் ஒரு வீட்டுக்குப் போய் அந்த வீட்டுக்காரர் என்ன செய்கிறாரோ அந்த வேலையை இவரும் கொஞ்ச நேரம் சேர்ந்து செய்வார். அவருக்கு ஒத்தாசையாக. அதற்குப்பின்னர் மெதுவாகப் பேச்சுக் கொடுப்பார். பின் வாக்குக் கேட்பார்.

ஒரு தடவை இவர் போனபோது அங்கே வீட்டுக்காரர் வீட்டுக்குப் பின்னால் மாட்டுக் கொட்டகையில் பால் கறந்து கொண்டிருந்தார். இவர் ஓடிப்போய் ஒரு செம்பை எடுத்துக் கொண்டு அதே மாட்டில் இன்னொரு புறத்தில் உட்கார்ந்திருந்து பால் கறக்க ஆரம்பித்தார்.

கொஞ்சம் நேரம் போனதும் இவர் மெதுவாக அவரிடம் பேச்சுக் கொடுத்தார். "நான் தேர்தலில் நிற்கிறேன் நீங்கள் எனக்கு ஓட்டுப்போட வேண்டும்" என்றார். "அது முடியாது" என்றார் மற்றவர். ஏன் என்று கேட்டார் இவர். அதற்கு அவர் " நான் இந்த வீட்டுக் காரன் இல்லை; நானும் உன்னை மாதிரி ஓட்டுக் கேட்க வந்தவன்தான் என்றார்"

கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்துவிட்டது இன்ரநெற் எக்ஸ்புளோரர் 9

தன்னுடைய பிரவுசர் இன்ரநெற் எக்ஸ்புளோரர் தொகுப்பின் ஒன்பதாவது பதிப்பனை (IE9) மைக்ரோசொப்ட் நிறுவனம் நேற்றுமுன்தினம் வெளியிட்டது.

பெப்ரவரி முதல் வாரத்தில், இதன் இறுதி சோதனைப் பதிப்பு (Release Can didate) வெளியானது . இது ஒரு மிக மிக அழகான இணையம் என இந்த தொகுப்பின் உருவாக்கக் குழுவின் மூத்த இயக் குநர் ரையன் காவின் அடிக்கடி குறிப்பிடுவார். அதனாலேயே இதன் முழுமையான தொகுப் பினை மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

கடந்த ஏழு மாதங்களில் 3 கோடியே 60 லட்சம் பேர், சோதனைத் தொகுப்புகளைத் தரவிறக்கம் செய்து பயன்படுத்தி வந்தனர் என்று மைக்ரோசொப்ட் அறிவித்துள்ளது. பதிப்பு 8 வந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின் பதிப்பு 9 வெளியாகியுள்ளது.

பதிப்புகள் 7 இற்கும் 8 இற்கும் இடையே, இரண்டு ஆண்டுகள் ஐந்து மாத இடைவெளி இருந்தது குறிப்பிடத்தக்கது. இன்ரநெற் எக்ஸ்புளோரர் பதிப்பு 9 இன் பயன்பாடு இன்னும் பெரிய அளவில் இல்லை. இதுவரை சோதனைப் பதிப்பின் பயன்பாடு 0.6% என்ற அளவில் மட்டுமே உள்ளது.

இதுவரை வந்த இன்ரநெற் எக்ஸ்புளோரர் பிரவுசர்களைக் காட்டிலும், காட்டப்படும் இணையத் தளச் செய்திகளுக்கு இந்த பிரவுசர் அதிக இடம் தரும். விண்டோஸ் Task bar இல் இணையத்தளங்களை பின்னர் அப்டேற் செய்திடலாம்.

இதன்மூலம் இணையத்தளங்கள், கணினிப் புரோகிராம்கள் போலச் செயற்படலாம். ஏறத்தாழ விண்டோஸ் 7 சிஸ்ரத்தில் உள்ளது போல ஜம்ப் லிஸ்ட் போலச் செயற்படும். மேலும் இதன் மூலம், நாம் ஒரு இணையத் தளத்தில் குறிப் பிட்ட தகவல் பக்கத்துக்கு நேரடியாகச் செல்ல முடியும். இயக்க செயல்முறை களிலும் நிறைய மாறுதல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

பிரவுசர் இயங்கி திரைக்கு வர மிகக் குறைவான நேரமே எடுத்துக் கொள்ளப்படுகிறது. இதற்கு இந்த பிரவுசரில் பயன்படுத்தப்படும் சக்ரா (Chakra) எனப்படும் புதிய ஜாவா இன்ஜின்தான் காரணம். Chrome, Opera, Firefox, மற்றும் Safari பிரவுசர்களைக் காட்டிலும் இது வேகமாக இயங்கக் கூடியது என நிரூபிக்கப்பட்டுள்ளதாக, மைக்கு ரோசொப்ட் அறிவித்துள்ளது. இதன் பாதுகாப்பு அம்சங்களும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இன்ரநெற் எக்ஸ்புளோரர் 9 பிரவுசர் விண் டோஸ் விஸ்டா மற்றும் விண்டோஸ் 7 சிஸ்ரம் பயன்படுத்துபவர்களுக்கு மட்டுமே. இன்றைக்கு விண்டோஸ் எக்ஸ்பி பயன்படுத்துபவர்களில் 45.3% பேர் இன்னும் எக்ஸ் புளோரர் தான் பயன் படுத்தி வருகின்றனர். இவர்களுக்கு இன்ரநெற் எக்ஸ்புளோரர் பதிப்பு 9 எட்டாக் கனிதான். இவர்கள் இன்ரநெற் எக்ஸ்புளோரர் பதிப்பு 8 உடன் நிறுத்திக் கொள்ள வேண்டியதுதான். இந்த இடை வெளியினை, மற்ற கூட்டு நிறுவனங்கள் பயன் படுத்திக் கொண்டு, தங்கள் பிரவுசர்களை அமைத்து வருகின்றனர்.

இதன் சோதனைத் தொகுப்பு வந்த காலத்திற்குப் பின்னர், இன்ரர்நெற் எக்ஸ்புளோரரின் பயன்பாடு மொத்தத்தில் 3 வீதமாகக் குறைந்துள்ளது. இந்த வேளையில் பயர்பாக்ஸ் பதிப்பு 4 பிரவுசரின் முழுத் தொகுப்பினை வெளியிட மொஸில்லா தயாராகி வருகிறது. இன்ரநெற் எக்ஸ்புளோரர் தொகுப்பு 9 வெளியீட்டுக்குக் காத்திருந்தது. நவம்பர் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர், பயர்பாக்ஸ் பிரவுசரின் பங்கும் 3 வீதமாகக் குறைந்தது. அப்போது பயர்பாக்ஸ் 24.7வீதமானோரால் பயன்படுத்தப்பட்டது.

புதிய இன்ரநெற் எக்ஸ்புளோரர் பதிப்பினை தரவிறக்கம் செய்திட விரும்புபவர்கள் http://download.cnet.com /8301200742003127912.html என்னும் முகவரிக்குச் சென்று தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

# கூகுளின் நீட்சி: குரோம் தொலைக்காட்சி

தற்போது கூகுள் பல புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்து கொண்டு வருகிறது. அதில் புதிதாய் வரும் இன்னொரு நீட்சிதான் குரோம் தொலைக்காட்சி.

இதுவும் ஒரு extension தான். இதன் மூலம் பல தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை நாடு வாரியாகவும் category வாரியாகவும் பார்க்கலாம்.

முதலில் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்குச் சென்று நிறுவிக் கொள்ளவும். உடனே குரோமில் புதியதாய் ஒரு ஐ கான் தோன்றும். அதைக் கிளிக் செய்தவுடன் தொலைக்காட்சி போன்ற உரு தோன்றும்.

அதிலே உங்களுக்கு விருப்ப மானதைக் கிளிக் செய்து பார்க் கலாம். இதைவிட நாடு வாரி யாகத் தெரிவு செய்வதெனில் by country என்பதைக் கிளிக் செய்து விரும்பிய கண்டத் தைத் தெரிவு செய்து பின் நாட்டைத் தெரிவு செய்ய லாம்.


Google TV

# கூகுள் தரும் உடனடித் தகவல்!

ஒரு நாடு குறித்த பல தகவல்கள் நமக்கு அடிக்கடி தேவையாய் இருக்கும். குறிப்பாக நாம் ஒரு நாட்டைப் பற்றிய சிறு அறிக்கை அல்லது தகவல் தொகுப்பினைத் தயாரிக்க பல வகையான தகவல்கள் தேவைப்படும்.

எடுத்துக்காட்டாக, அதன் சனத்தொகை, ஆண்டுப் பொருளாதார வளர்ச்சி, அது உலக மேப்பல் எங்குள்ளது போன்ற கேள்விகளுக்கு நமக்கு விடையாகப் பலவகைத் தகவல்கள் தேவைப்படுகின்றன.

இவற்றைப் பெற, நாம் ஏதே னும் தேடு பொறியில் சென்று, நாட்டின் பெயரைக் கொடுத் துப் பின்னர் கிடைக்கும் தள முகவரிகளைக் கிளிக் செய்து தகவல்களைத் தேடிப் பெறு வோம்.




தேடு பொறி இந்தத் தகவல் களை மிகவும் எளிமை யாவும் வேகமாகவும் பெறும் வகையில் இயங்குகிறது.

எடுத்துக்காட்டாக, ஜெர்மனியின் சனத்தொகை என்னவென்று அறிய என தேடுபொறியில் கட்டத்தில் population Germany என்று கொடுத்தால் போதும்.

ஒரு நாட்டின் தேசிய கீதம் அறிய நாட்டின் பெயருடன் anthem என்றும் தலைநகர் அறிய capital city என்றும் தேசியக் கொடி குறித்துத் தெரிந்து கொள்ள flag என்றும் கொடுத்தால் போதும். எவ்வளவு எளிது பார்த்தீர்களா?

# இரண்டு மவுஸ் கிளிக்!



கணினிப் பயன்பாட்டில், சில விடயங்கள் நமக்கு எந்த நேரமும் சிறந்த பயனைத் தரும் வகையில் இருக்கும்.

அவற்றில் ஒன்று, மவுஸ் கொண்டு கிளிக் செய்து டெக்ஸ்ட் தேர்ந்தெடுப்பது. பல வேர்ட் ப்ராசசர், இமெயில் டெக்ஸ்ட் எடிட்டர்கள், இணைய தளப் பக்கங்கள் ஆகியவற்றில் இந்த மவுஸ் கிளிக் பயன்பாடு நமக்குக் கிடைக்கிறது.

ஒரு குறிப்பட்ட சொல் அல்லது வாக்கியத்தினை, பந்தியை அடிக்கோடிட, சாய்வெழுத்துக்களாக மாற்ற நாம் என்ன செய்கிறோம்? டெக்ஸ்ட்டை தேர்ந்தெடுக்க மவுஸ் கேர்சர் அல்லது ஷிப்ட் கீயுடன் அம்புக் குறியைப் பயன்படுத்தி அதனை ஹைலைட் செய்திடுகிறோம்.

இதற்குப் பதிலாக, தேர்ந்தெடுக்கப்பட வேண்டியது ஒரு சொல் எனில், அதன் மீது எங்கேனும் மவுஸ் கேர்சரைக் கொண்டு சென்று இரு முறை கிளிக் செய்திடுங்கள்.

அந்த சொல் தேர்ந்தெடுக்கப்படும். மூன்று முறை கிளிக் செய்திடுங்கள். அந்த பந்தி முழுவதும் தேர்ந்தெடுக்கப்படும். இனி நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட டெக்ஸ்ட்டை எப்படி வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம்.

# குடும்பத்தில் மூத்த பிள்ளையையே ஒவ்வாமை நோய் அதிகம் தாக்கும்

ஜப்பானில் உள்ள இயோடோ பல்கலைக்கழகத்தில் உள்ள ஷிகா குழந்தைகள் மற்றும் மருத்துவ மையத்தைச் சேர்ந்த குழந்தைகள் சிகிச்சை நிபுணர் தலைமையிலான குழு ஆய்வு ஒன்றை மேற்கொண்டது.

7 வயது முதல் 15 வயது வரையிலான 13 ஆயிரம் குழந் தைகளுக்கு ஏற்படும் நோய்கள் குறித்து ஆராய்ச்சி செய்யப்பட்டது.

அவர்களில் ஒரு பெற்றோருக்குப் பிறக்கும் முதல் குழந்தைக்கு அடுத்தபடியாகப் பிறக்கும் குழந்தைகளை விட அதிக அளவில் அலர்ஜி நோய் பாதிக்கும் எனத் தெரியவந்தது. இவர்களுக்கு ஆஸ்துமா, கண் வலி, மூக்கில் நீர் வடிதல் மற்றும் உணவுப் பொருள்களால் ஏற்படும் அலர்ஜி நோய்கள் உண்டாகும் என்றும் கூறியுள்ளனர். இது அமெரிக்க அலர்ஜி அக்கடமியில் அறிக் கையாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமபிரான் தரிசித்த இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலயம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இலங்கையில் காத்தல் கடவுளான விஷ்ணுவும் அழித்தல் கடவுளான சிவனும் ஒரே இடத்தில் இருந்து அருள்பாலிக்கும் அற்புதத் திருத்தலங்களில் ஒன்றாக இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலயம் விளங்குகின்றது.

எதிர்காலத்தில் வரும் அனர்த்தங்களை முன்பே உணர்த்தும் அருள் திறன் இந்த ஆலய அடியார்களுக்கு அதிகளவில் கிடைத் துள்ளதாக ஆலயத்தின் நீண்ட கால அடியார் ஒருவர் கூறியுள்ளார்.



இராமபிரான் இந்தப் பகுதியில் தங்கியிருந்த வேளையில் வில்லினால் உருவாக்கிய சுனையில் வருடம் முழுவதும் தாமரை மலர்களும் கிழங்குகளும் காணப்படும். எந்த வருடத்தில் சுனையில் பெரிய கிழங்குகள் காணப்படுகின்றதோ அந்த வருடம் கடும் பஞ்சம் ஏற்படுவதைக் தமது காலத்தில் கண்ணுற்றதாகவும் தெரிவித்தார் அந்த அடியார். அதேபோலவே 1990 இல் சுனையில் பெரிய கிழங்குகள் காணப்பட்டதால் அந்த வருடம் பஞ்சம் ஏற்படுமென பெருமானின் அடியார்கள் முழுமையாக எதிர்பார்த்ததைப் போன்றே அந்த வருடம் ஏற்பட்ட பொருளாதாரத் தடையினால் உணவுப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டபோது சுனையில் காணப்பட்ட கிழங்குகள் பல குடும்பங்களின் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்தன.

நீண்டகாலமாக இந்த ஆலயத்தில் அறங்காவலர் சபையில் அங்கம் வகித்திருந்த ஒருவர் 1970 இல் ஆலயத்தில் பணியாற்றிய போது ஆலய அறங்காவலர் சபையினரை அழைத்துக் ''கண்ணன் என்னை அழைக்கிறார். ஆகையால் எனது பணியை எனது சகோதரனின் மகனிடம் கொடுத்து பணியாற்றச் சொல்லுங்கள்; எனது காலம் முடிந்து விட்டது'' எனக் கூறிச் சென்றவர் மீண்டும் ஆலயத்திற்கு வரவில்லை.

மற்றும் ஒருவர் ஆலயத்தில் பாலஸ்தாபனம் செய்த பின்னர் கும்பாபிஷேகம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த வேளையில் தனது மைத்துனரை அழைத்து ஆலயப் பணியினைத் தொடர்ந்து மேற்கொள்ளுங்கள் எனக் கூறிவிட்டு ஊருக்குச் சென்றவர் மீண்டும் ஆலயத்துக்கு வரவில்லை.

இதேபோன்று பல வருடங்கள் ஆலயத்தில் தொண்டாற்றிய அர்ச்சகர் ஒருவரும் ஆலயத்தில் மேற்கொள்ளப்படும் மாசிமாத ஏகாதசி தின பூசைதான் எனது கடைசிப் பூசையாக இருக்குமெனக் கூறி அன்றைய தினம் பூசைகளை முடித்து விட்டுச் சென்றவர் அன்றே கண்ணபிரானின் திருவடி நிழலைத் தேடிச் சென்றுவிட்டார்.

இவ்வாறு எம்பெருமானைப் பரிபாலிக்கும் ஒவ்வொரு பெரியவரும் தமது காலம் நிகழ்வுற்றதனை முன்னரே உணர்ந்து ஆலய பராமரிப்புப் பொறுப்பை பொருத்தமானவரிடம் கையளிப்பது கூட எம்பெருமானது திருவருளே. ஆலயத்தில் திருவெம்பாவைக் காலத்தில் ஆலயத் தொண்டர்கள் பத்துத் தினங்களும் பத்து இடங்களுக்குச் சென்று கிரா மங்கள் தோறும் சங்கு ஊதி திருவெம்பாவைப் பாடல்களைப் பாடிவருவது வழமையாகும். திருவெம்பாவை நாள் களில் அதிகாலை ஆலயத்தில் கூடும் இளைஞர் கூட்டம் அர்ச்சகரிடம் ஆசி பெற்றுச் செல்வது வழக்கம்.

2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 24 ஆம் திகதி வடமராட்சி கிழக்குப் பகுதிக்குச் செல்வது என முடிவு செய்யப்பட்டது. அன்றைய தினம் இளைஞர்கள் அதிகாலையில் வடமராட்சி கிழக்குக்குச் செல்வதற்கான ஆயத்தங்களுடன் வருகை தந்திருந்தும் ஆலயத்தில் ஏற்பட்ட தடங்கல் காரணமாகச் சந்நிதானத்தில் தங்க வேண்டியேற்பட்டது. தடங்கல் நீங்கி இளைஞர்குழு வடமராட்சி கிழக்கு நோக்கிப் புறப்பட்ட வேளையில் பேரிடிச் செய்தியொன்று கிடைத்தது. வடமராட்சி கிழக்குப் பகுதியில் காலையில் ஏற்பட்ட ஆழிப் பேரலைத் (சுனாமி) தாக்கம் பற்றிய செய்தியே அது. ஆழிப் பேரலையின் தாக்கம் பற்றி அறிந்த எம்பெருமானே இளைஞர் குழுவினருக்குத் தடங்கலினை ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. திருவருள் மிகுந்த எம்பெருமானின் திருத்தலங்கள் குடாநாட்டின் பல இடங்களிலும் உள்ளன. ஒவ்வோர் அவதாரத்தில் ஆலயங்களில் வீற்றிருந்து அருள்பாலித்து வருகிறார். வருடத்தின் ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு திருத்தலங்களாக உற்சவங்கள் படிப்படியாக நடைபெற்று ஆவணிமாதப் பூரணை தினத்துக்குப் பன்னிரு தினங்களுக்கு முன் இங்கு உற்சவம் ஆரம்பமாகி 11ஆம் நாள் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

(தொடரும்)

# மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்

தொகுப்பு: ஐயந்தன்




(சென்றவாரத் தொடர்ச்சி)

இலங்கை அந்நியர் ஆட்சியின் பிடியில் மக்கள் சிக்குண்டிருந்த வேளை நாடு முழுவதும் கிறிஸ்தவ மதம் ஆதிக்கம் செலுத்தியது. சைவமும் தமிழும் அழிந்திடுமோ என்ற நிலையிலிருந்த இந்தக் காலப்பகுதியில் சரசாலையூர் வித்துவான் கந்தையாபிள்ளை இராமலிங்கத்தின் அயராத முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டதுதான் மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்.

2001 ஆம் ஆண்டு வித்தியாலயத்தில் தமிழ்த் தினப் போட்டிகள் மற்றும் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நடத்தப்பட்டன. தீருவில் விளையாட்டு மைதானத்தில் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நடைபெற்ற போது வருகை தந்திருந்த விருந்தினர்களும் பொது மக்களும் இடம் பெயர்ந்த மாணவர்களின் மனதில் ஏற்பட்டிருந்த தாக்கத்தை மறக்க அதிபர் மேற்கொண்ட இவ்வாறான நிகழ்வுகள் மாணவர்களுக்கு மகிழ்ச்சி தரவல்லன எனப் பாராட்டினர்.

2002 ஆம் ஆண்டு மக்கள் சொந்த இடத்திற்கு மீளக்குடியமர்ந்த வேளையில் மட்டுவிலில் பாடசாலையை இயக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்காக வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக வகுப்பறைத் தொகுதிக் கொட்டகையை எடுத்து வரச் சென்றவேளையில் அது வேறொரு பாடசாலையினரால் பிடுங்கிச் செல்லப்பட்டிருந்தது.

இதனால் மட்டுவில் வித்தியாலயம் ஆரம்பிக்க சிறிது காலம் சென்றது. 2002 ஆம் ஆண்டு வித்தியாலயம் சொந்த இடத்தில் மீளத் தொடங்கிய பின்னர் வித்தியாலயம் ஆரம்பித்து 75 ஆவது வருட நிறைவையொட்டி பவள விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பவள விழா தொடர்பான நூலும் வெளியிடப்பட்டது. அத்துடன் அந்த வருடம் ஸ்தாபகர் தினத்தையும் பரிசில் தினத்தையும் ஒரேநாளில் நடத்தியதுடன் வருடா வருடம் இந்த இரு நிகழ்வுகளும் ஸ்தாபக நாளில் நடத்தப்பட்டும் வருகிறன.

மக்கள் மீளக் குடியமர்ந்த பின்னர் வித்தியாலயம் தற்காலிக கொட்டில்களில் இயங்கிய வேளையில் 250 மாணவர்கள் கல்வி கற்றனர். அங்கு 50 மாணவர்களுக்குரிய தளபாடங்களே இருந்தன. அதிபர் விடுத்த வேண்டுகோளையடுத்து தென்மராட்சிப் பிரதேச செயலரின் சிபார்சிற்கமைய நிக்கொட் நிறுவனத்தினரும் அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் தூதுவராலயத்தினரும் (UNHCR) தளபாடங்களை வழங்கி அன்றைய மாணவர்களின் தளபாடத் தேவைகளைப் பூர்த்தி செய்தனர்.

மேலும் சேதமடைந்து காணப்பட்ட வித்தியாலய முன்பக்க மதிலை புனரமைக்க நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் 2003 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் 75 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்து மதில் அமைக்க உதவினர். அதேயாண்டு வித்தியாலயப் பழைய மாணவனான சுவிஸ் நாட்டில் வாழும் கந்தசாமி குமாரசாமி என்பவர் வித்தியாலயப் பெயர் வளை வினை அமைக்க நிதி உதவி வழங்கினார். 2000 ஆம் ஆண்டு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினரால் வித்தியாலய வளாகத்தில் அமைக்கப்பட்ட மலசலகூடம் யுத்த அனர்த்தங்களின்போது சேதமடைந்திருந்தது. அது 2002 ஆண்டு மீளப்புனரமைப்புச் செய்யப்பட்டது.

அதேபோன்று மீளக்குடியமர்ந்த வேளையில் மாணவர்களுக்கு ஏற்பட்ட குடிதண்ணீர்ப் பிரச்சினை பற்றி அதிபர் பல தொண்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டதையடுத்து 'பட்டினிக்கு எதிரான நிறுவனம்' வித்தியாலய வளாகத்தில் காணப்பட்ட பழுதடைந்த கிணற்றைப் புனரமைத்துக் கொடுத்தது.

அந்தவேளையில் தென்மராட்சி நலச்சேவைகள் சங்கத்தினர் தற்காலிக நீர் விநியோகக் குழாய்கள் பொருத்தியதுடன் நீர் இறைக்கும் இயந்திரத்தினையும் வழங்கி மாணவர்களின் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்தனர்.

தென்மராட்சிக் கல்வி வலய முறைசாராப் பிரிவினர் வித்தியாலயத் தில் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த யுவதிகளுக்கான இலவச தையல் பயிற்சி வகுப்புகளை நடத்தினர். பயிற்சியினைப் பூரணமாக நிறைவு செய்ய தையல் இயந்திரங்கள் தேவைப்பட்டன.

இந்த விடயத்தினை அறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் தனது தந்தையின் நினைவாக இரண்டு தையல் இயந்திரங்களை வழங்கிப் பயிற்சிகள் சிறப்புற இயங்க வைத்தார்.

2003 ஆம் ஆண்டு யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தினர் இந்தப் பகுதியைச் சேர்ந்த 40 யுவதிகளுக்கு மனை முகாமைத்துவப் பயிற்சி நெறியை மேற்படி பாடசாலையில் நடத்தினர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறிமுதலான பொருள்கள் ஏலம் சாவகச்சேரி மன்றில் அடுத்த மாதம்

வரணி, மார்ச் 25

சாவகச்சேரி நீதிவான் நீதி மன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டு இதுவரையில் உரிமை கோரப்படாத நிலையில் உள்ள பொருள்கள் பல ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

அடுத்தமாதம் 9ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

இந்தப் பொருள்களைப் பார்வையிட விரும்புவோர் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு முன்பு நீதிமன்றப் பதிவாளரிடம் அனுமதி பெற்றுப் பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கூடுதலாக துவிச்சக்கர வண்டிகளே ஏல விற்பனை செய்யப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-122)

## தேவாலயம் புனரமைப்பு

வரணி, மார்ச் 25

வரணி தென்னிந்திய திருச்சபையின் தேவாலயம் தற்சமயம் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. பல நூற்றாண்டு பழைமை வாய்ந்த இந்தத் தேவாலயம் யுத்தகாலத்தில் சேதமடைந்திருந்தது.

தற்சமயம் திருச்சபை நிர்வாகம் இதனைப் புனரமைத்து வருகின்றது. பாதிரியார் வளவு என்றழைக்கப்படும் இந்தத் தேவாலயம் அமைந்திருக்கும் காணி துப்புரவாக்கப்பட்டு பண்ணைப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளதுடன் இந்தக் காணியில் படையினரால் யுத்தக் காலகட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த பெரிய மண் அணையும் நீக்கப்பட்டுள்ளது.

## மணல் அகழ்ந்த தொழிலாளி காயம்

வடமராட்சி கிழக்கு அம்பன் கொத்தோடைப் பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட தொழிலாளி ஒருவர் மீது மரமும், மணல் குவியலும் வீழ்ந்ததில் குறித்த தொழிலாளி காயங்களுக்கு ஆளானார். பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பருத்தித்துறை வராத்துப்பளையைச் சேர்ந்த ஆர்.ராகவன் (வயது-32) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

(ம-236-319)

### வேலைக்கு ஆள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் நிறுவனமொன்றுக்கு போட்டோகொப்பி, கணினி ரைப்பிங் தெரிந்த கணினி அறிவுடைய பெண்பிள்ளை உடனடியாகத் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 0776051228

### நாளை ஆரம்பம்

A/L- 2013

கலை, வர்த்தகம்

காலை 8மணி

DMI, Jaffna

### வீடு வாடகைக்கு உண்டு

அம்பாள் வீதி, மல்வம் உடுவிலில் இரண்டு மாடிவீடு சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு. நேரில் வரவும்.

தொடர்பு:- 0778548312, 0775509435

## அம்மன் பாதம் பற்றிய முதலாம் ஆண்டு



திதி: அபரபக்க ஷஷ்டி

(25.03.2011)

### திருமதி நிர்மலா ஸ்ரீகரன் (பரன்)

"எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்- எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்"

ஈறில்லா பதங்கள் யாவையும்
கடந்த இன்பமே- எம்முடைய அன்பே!
எங்கள் குலவிளக்கின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவர் [கிராம அலுவலர். நல்லூர் பி.செயலகம்],
பெற்றோர், சகோதரர்கள், மைத்துனர்கள்,
மைத்துனிகள், பிள்ளைகள், மருமக்கள்.

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். [49-19-20]

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10.11.1901

மறைவு: 25.03.2001

திருமதி பிலிப்பு செல்லம்மா

உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்

பிலிப்பு தருமநாயகம் (மகன்)
43/12, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம். (43,22,24)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



சிவனடி: 30.08.1930
சிவமடி: 25.03.2008

அமரர் முருகேசு துரைராஜா

திதி: சதுர்த்தி

ஆண்டுகள் மூன்று சென்று விட்டன- தங்களின்
ஆனந்த முகத்தைக் கண்டு
சாந்தமான தங்களின் பேச்சைக் கேட்க
ஆவலாய் நிற்கின்றோம்
ஆயிரம் உறவுகள் இருந்தும் என்ன - அப்பா
உங்கள் அன்பைப் போல் வருமா
அனுதினமும் தங்களின் நினைவுடன்-நாம்
அலை மோதி நிற்கின்றோம்
உயிர் உள்ளவரை உமை மறவோம்
உம் நினைவில் வாழுகின்றோம்
உம் ஆத்ம சாந்திக்காக
வணங்குகின்றோம்

(48,26,19)

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

95, சிவன் பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

## ஓராண்டு நினைவு அஞ்சலி

அமரர் வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை



தோற்றம்
21.11.1930

மறைவு
06.04.2010

திதி: அபரபக்க ஸப்தமி
(25.03.2011)

அன்பு முகம் பார்த்து
அகமகிழ்ந்து நாம் இருந்தோம்
இவ்வின்பம் தொடரும் என
நாம் இருந்த வேளையில்
இடையில் வந்து அவன் அழைத்துச்
சென்றதுதான் தாங்க முடியவில்லை
நீர் மறைந்து ஓராண்டு சென்றாலும்
எம் விழிநீர் மட்டும் மறையவே இல்லை
ஐயா! ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது எம் துயர்.
உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகிறோம்.

மருதங்கேணி தெற்கு,
மருதங்கேணி. (49-19-20)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி தர்மலிங்கம் (வண்டு)



யாழ்ப்பாணம், இராமநாதன் வீதி, கலட்டியைப் பிறப்பிடமாகவும் உடுவில் டச்சு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தர்மலிங்கம் (22.03.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் ஐயாத்துரை- மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், தவராணியின் அன்புக் கணவரும், ரஜனிகாந்த் (கனடா), றொபேக்கா, சசிரேகா ஆகியோரின் அன்புத் தந்தையும் குமரேசன் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்), நீரஜா (கனடா) ஆகியோரின் மாமனாரும், மகாலிங்கம் (மகான்), பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான இராசலிங்கம் (பூச்சி), சுந்தரலிங்கம் மற்றும் பஞ்சலிங்கம் (பஞ்சு), சந்திரலிங்கம் (பிரான்ஸ்), யோகலிங்கம் (காந்தி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தேவராஜா (காந்தி), காலஞ்சென்ற மகிழ்ராஜா மற்றும் ஜெபராணி (கனடா), பிக்கினிராஜா (கொலன்ட்), பிறேமராஜா (கொலன்ட்), வளர்மதி (கொலன்ட்), ஜெயமதி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆருஷ்யன், தக்ஷயன் (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2011) வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டச்சு வீதி,
உடுவில். (49,20,26)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள பால் உற்பத்தியாளர் பிரச்சினை

**யாழ்.** மாவட்ட பால் பண்ணையாளர்கள் எதிர்கொண்டு வந்த பெரியதொரு சிக்கல் தற்போது தீர்வுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்தியக் கிளை யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இங்குள்ள வளத்தைக் கொண்டே பொருளாதார ரீதியில் யாழ். மாவட்டத்தை முன்னேற்றும் பொருட்டு செயற்திட்டங்கள் பலவற்றை முன்னெடுத்தது.

அப்போது இங்குள்ள முக்கிய பிரச்சினைகளுள் ஒன்றாக பால் மிதமிஞ்சி வீணாகிச் செல்வதனால் பண்ணையாளர்கள் பெரும் நஷ்டங்களை எதிர்நோக்குவதாக இனங்காணப்பட்டது.

அதாவது மழை காலங்களில் பால் உற்பத்தி அதகரிப்பதாகவும் வெயில் காலங்களில் உற்பத்தி குறைவடைவதாகவும் தெரிவிக்கப்பட்டது. பால் உற்பத்தி அதிகரிக்கும் காலங்களில் அதற்கான கேள்வி குறைவடைகின்றது. ஏனெனில் மழை காலங்களில் பாலைக் கொள்வனவு செய்வோர் மிகச்சிலரே. அதனைவிட எஞ்சும் பாலை யூஸ் போன்று மாற்று வழிகளிலும் விற்பனை செய்யமுடியாது.

வெயில் காலங்களில் பால் உற்பத்தி குறைவடையும்போது பால் கொள்வனவு செய்வோரது எண்ணிக்கை அதிகரிப்பதுடன் அடிப்படை மூலப்பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்ற ஏனைய பொருள்களின் உற்பத்திக்கான கேள்வியும் அதிகரித்துக் காணப்பட் டது.

மழை காலங்களில் மிதமிஞ்சும் பாலை சேமித்து வெயில் காலங்களில் பயன்படுத்தக் கூடியதான தொழில்நுட்ப வசதிகள் எதுவும் இங்கில்லை.

நடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தலைமையில் மாவட்ட செயலகத்தில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதமளவில் இடம்பெற்ற கலந்துரையாடலில், வடபிராந்திய விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி வி.அமிர்தலிங்கத்தால் மேற்படி தொழில்நுட்பவசதிகளுடன் கூடிய 'Ultra High Temperature Mechine' கொள்வனவு செய்து தருமாறும் இதன் பெறு மதி அண்ணளவாக ஒரு கோடியைவிட அதிகம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வளவு பெறுமதியான இயந்திரத்தை யாழ்.மாவட்டத்துக்கு மட்டுமல்லாது வடமாகாணத்துக்கு பொதுவாக கொள்வனவு செய்துதருமாறே கோரிக்கை விடுக்கப்பட்டது. அந்தக் கோரிக்கை அந்தக் கூட்டத்துடனேயே கைவிடப்பட்டுவிட்டது.

இதன் பின்னராக இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்தியக் கிளையினால் 'கிறீன் கிறாஸ்' ஹொட்டலில், மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் டபிள்யூ. எம் கருணாரத்ன தலைமையில் கடந்த வருடம் 20ஆம் திகதி ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற கலந்துரையாடலில் யாழ் மாவட்டத்திலுள்ள கால்நடை உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்னும் தலைப்பில் ஆராயப்பட்டது.

இந்தப் பிரச்சனைக்கான தீர்வாக தென்னிலங்கை நிறுவனங்கள் இங்கு வந்து பாலைப் பெற்றுச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்வதாக கூறப்பட்டது. இதற்கு பிரதிப் பணிப்பாளர் அமிர்தலிங்கத்தினால் கருத்து ஒன்று முன்வைக்கப்பட்டது. தென்னிலங்கை நிறுவனங்கள், இங்குள்ள திணைக்களங்கள் ஊடாக பால் கொள்வனவு செய்யும் விலையைவிட குறைவான விலையில் கொள்வனவு செய்வதற்கே முயலுகின்றன. இதனால் பண்ணையாளர்கள் பாதிப்படைவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்குப் பதில ளித்த மத்திய வங்கியினர் மிதமிஞ்சும் பாலிணையே அவர் கள் கொள்வனவு செய்கின்றனர். அந்தப் பால் வீணாகச் செல்வதைவிட குறைந்த விலையிலாவது விற்பதன் மூலம் பண்ணையாளன் பாதிப்பிலிருந்து விடுபட முடியுமென தெரிவிக்கப்பட்டது.

**டிலீப்**

யாழ். மாவட்டத்தில் ஏனைய இடங்களைவிட அதிக விலையில் விற்கப் படுவதற்கு காரணம், இங்கு மேச்சல் தரைகள் இல்லை. மாட்டுத் தீவனங்கள், பராமரிப்புக்கு அதிக செலவீனங்கள் ஏற்படுவதனாலேயே இங்கு பால் விலை அதிகரித்த விலையில் விற்கப்படுவதற்கு காரணமாகின்றது.

ஆனால் தென்னி லங்கை நிறுவனங்கள் தேசிய அளவில் நிர்ணயம் செய்யப்படுகின்ற விலைக்கு அமைவாகப் பாலைக் கொள்வனவு செய்யும்.

இருப்பினும் தென்னிலங்கை நிறுவனமான 'நெஸ்லே' நிறுவனம் யாழ். மாவட்டத்தில் மிதமிஞ்சும் பாலைக் கொள்வனவு செய்வதற்கு சம்மதித்து இங்கே தனது 16 பால் கொள்வனவு நிலையங்களை கடந்த வருடம் நவம்பர் மாதம் அமைத்தது.

இதனூடாக யாழ். மாவட்டத்தில் உள்ள மூன்று பால்கொள்வனவு திணைக்களங்களும் பாலை கொள்வனவு செய்யாத இடங்களுக்குச் சென்று பால் கொள்வனவில் ஈடுபட்டது.

இதன்போது இடைக்காட்டு பிரதேசத்தில் மக்கள் தெரிவித்த சில கருத்துக்கள், ' நாங்கள் இங்க இருந்து அச்சுவேலிக்கு தான் பால் கொண்டுபோய் குடுக்க வேணும். 3 லீட்டர் கொண்டுபோனா ஒரு லீட்டர் தான் எடுப்பாங்கள். இதால எங்களுக்கு நட்டம் என்றபடியாய் மாடு எல்லாதையும் வித்துப் போட்டம்' என்றனர்.

யாழ். மாவட்ட மக்களின் வாழ் வாதாரத்தை உயர்த்துவதற்காக படைத் தரப்புக்கள் மாடுகளை மக்களுக்கு வழங்கி வருகின்றன. மற்றும் வங்கிகளும் மாடு வளர்பிற்காக கடனுதவிகளையும் வழங்கி வருகின்றன.

இதன் மூலம் பால் உற்பத்தி அதிகரித்த போதும் அதைச் சந்தைப்படுத்துவதற்கோ அதன் மூலம் பண்ணையாளர்கள் உரிய இலாபம் அடைவதற்கோ சந்தர்ப்பம் இல்லாமல் இருந்தது.

ஆனால் யாழ்.மாவட்டத்தில் 'நெஸ்லே' நிறுவனம் பால் கொள்வனவில் ஈடு படத் தொடங்கியபின்னர் தற்போது யாழ். மாவட்டத்தில் பால் கொள்வனவில் ஈடுபட்ட மூன்று சங்கங்களும் பால் தேவை என்று விளம்பரப்படுத்தும் அளவுக்கு மாற்றமடைந்துவிட்டன.

(22ஆம் பக்கம் பார்க்க)

ஈரவிழிகளுடன்
ஈராண்டு..



அன்னையாய்:
23.09.1959

தெய்வமாய்:
18.03.2009

திதி: ஸப்தமி 25.03.2011

திருமதி
**நாகராணி மாயவன்**

இவ் வையகத்தில் வாழ்வுதனை
இடைநடுவில் விட்டுவிட்டு - நித்தமும்
எம் நெஞ்சில் நிலையான சுமைகளைத் தந்துவிட்டு
நீ மட்டும் விண்ணுலகில் நிரந்தரமாகிவிட்டாய் உன்
பிரிவை இற்றைவரை நம்பாமல்
எம் உளத்தில் நிலைநிறுத்தி
உம் நினைவுகளோடு என்றென்றும் நாம்

ஈரவிழிகளுடன்
உங்கள் பாசமுள்ள குடும்பத்தினர்

அண்ணா சிலையடி,
கரணவாய், கரவெட்டி.

(48/26.24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்க் காணிக்கை



யாழ். பல்கலைக்கழக கணிதமும் புள்ளி விவரவியலும் துறை விரிவுரையாளர் திரு.ந. இராமரூபன் அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் செல்லையா நடேசன்**

அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது இதயபூர்வமான கண்ணீர்க் காணிக்கைகளைச் செலுத்துகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துறைத் தலைவர், விரிவுரையாளர்கள், ஊழியர்கள்,
கணிதமும் புள்ளிவிவரவியலும்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## கண்ணீர் அஞ்சலி



**திருமதி றீற்றா ஞானதீபம் சுகந்தநாதன்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



இசையால் இனிய செல்வங்களை
இவ்வுலகில் வாழ வழிகாட்டி
ஆசானாய் அன்புடன் மாணவரை
அரவணைத்து ஸபஸ ஸ்வர வரிசையை
தாளலயத்துடன் கற்பித்து,
பல்லாண்டுகள் எம்பள்ளியிலே
இனிய ஆசிரியராய்
இன்னமுத இசையை இதமாக
பயிற்றுவித்த எம் தெய்வமே!
எங்களையெல்லாம் ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டு எங்கு சென்றீரோ? அம்மா!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம், குருநகர்.

## ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் - 110
திகதி - 23.03.2011

ஜாதிக சம்பத Jathika Sampatha
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: O
அதிர்ஷ்ட இலக்கம்: 01
வெற்றி இலக்கம்: 5 9 1 8 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | | | | | | பரிசுத் தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | O | 01 | 5 | 9 | 1 | 8 | 7 | ரூ. 13,396,326.00 | - |
| 1 பரிசு | | 01 | 5 | 9 | 1 | 8 | 7 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | | | 5 | 9 | 1 | 8 | 7 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | | | | 9 | 1 | 8 | 7 | ரூ. 10,000.00 | 31 |
| 4 பரிசு | | | | | 1 | 8 | 7 | ரூ. 1,000.00 | 302 |
| 5 பரிசு | | | | | | 8 | 7 | ரூ. 50.00 | 2956 |
| 6 பரிசு | | | | | | | 7 | ரூ. 20.00 | 28525 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | | | | | | பரிசுத் தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 5 | 9 | 1 | 8 | | ரூ. 1,000.00 | 31 |
| 8 பரிசு | | | 5 | 9 | 1 | | | ரூ. 100.00 | 289 |
| 9 பரிசு | | | 5 | 9 | | | | ரூ. 50.00 | 2975 |
| 10 பரிசு | O | | | | | | | ரூ. 20.00 | 11870 |
| 11 பரிசு | O | 01 | | | | | | ரூ. 100.00 | 1383 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,214,650.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ.13,854,148.00

## ஓராண்டு நினைவஞ்சலி

**திருமதி தங்கவடிவேல் சரோஜினிதேவி**

தோற்றம் 25.03.1952
மறைவு 05.04.2010



திதி: ஸப்தமி

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறாது துவழ்கிறதே எங்கள் உள்ளம்
அன்பு பொழியும் உங்கள் முகம் காண
தினம் தினம் ஏங்கித் தவிக்கின்றோம் அம்மா!
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசாரி லேன்,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். குடும்பத்தினர்.

## ஞானச் சுடர் வெளியீடு

வடமராட்சி, மார்ச் 25

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆன்மீகச் சஞ்சிகையின்159 ஆவது இதழ் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேரவை நிர்வாக உறுப்பினர் எஸ். அருணகிரிநாதன் தலைமையில் இடம்பெறும் இவ்விழாவில் வெளியீட்டுரையை இளைப்பாறிய அதிபர் வ.கணேசமூர்த்தியும் மதிப்பீட்டுரையை யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் மதுரகவி காரை எம்.பி அருளானந்தமும் நிகழ்த்துவர். (ம-236)

## கச்சதீவில் சிரமதானம்

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா நிறைவினை அடுத்து ஆலயச் சூழலில் சிரமதானப் பணிகள் இடம்பெற்றன.

இந்தப் பணியில் கடற்படையினர், நெடுந்தீவு பிரதேச சபை, உதவி அரச அதிபர் பணிமனை, செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டர்கள், ஊழியர்கள் ஆகியோர் ஈடுபட்டார்கள். (ம-7)

## தீர்வுக்குக் ...

(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவை எல்லாவற்றுக்கும் மேலாகத் தற்போது அரசு பால் உற்பத்தியில் 2016 ஆம் ஆண்டு தன்னிறைவு அடையும் பொருட்டு பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்காகப் பாலின் ஆகக் குறைந்த கொள்விலையாக 50 ரூபாவை நிர்ணயித்தது.

இதற்கு அமைவாகத் தேசிய ரீதியில் நிர்ணயம் செய்யப்பட்ட விலை முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் 'நெஸ்லே' நிறுவனத்தால் அமுல்ப்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் யாழ். மாவட்ட பண்ணையாளர்களும் நன்மையடையவுள்ளனர்.

இந்தத் திட்டத்தை யாழ்ப் பாணத்தில் நடைமுறைப்படுத்திய இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் சிறீதரன் தெரிவிக்கையில், ''பால் கொள்வனவு விலையினை 'நெஸ்லே' நிறுவனம் அதிகரித்தன் மூலம் யாழ். மாவட்டத்தில் பால் உற்பத்தி அதிகரிப்பதுடன், பண்ணையாளர்களும் நன்மையடைவார்கள். இருப்பினும் 'நெஸ்லே' நிறுவனம் பொதி செய்யப்பட்ட பால் பவுடருக்காகவே பாலினை இங்கு கொள்வனவு செய்கின்றது. தற் போதைய விலை அதிகரிப்பை இங்கு பால் கொள்வனவில் ஈடுபடும் ஏனைய நிறுவனங்களும் நடைமுறைப்படுத்தாவிட்டால் உள் ளூர் சந்தையில் பால் விற்பனை இல் லாமல் போய் விடும். எனவே உள்ளூர் பால் கொள்வனவாளர்களும் அதற்கேற்றாற் போல் விலை அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டும்' என்றார்.

இதனைக் கருத்திற் கொண்டு உள்ளூரில் கொள்வனவில் ஈடுபடுகின்ற3சங்கங்களும் விலை அதிகரிப்பை மேற்கொண்டால் பண்ணையாளர்கள் பெரும் நன்மையடைவர்.

## STUDY & WORK IN UK

**யாழ். மாணவர்களின் நம்பிக்கையை வென்ற நாம் உங்களின் O/L தகைமையுடன் தொழில் வாய்ப்புடன் கூடிய கல்வியை U.K இல் கற்பதற்குரிய ஒழுங்குகளை விரைவாகச் செய்து தருகின்றோம்.**

- ★ மொத்தச் செலவு 7 ½ லட்சம் மட்டுமே (College Fee, Sponsor, Airticket, P.Fee)
- ★ குடும்பமாகச் செல்வதற்குரிய ஏற்பாடும் செய்து தரப்படும்.
- ★ 4 - 5 வாரத்தினுள் U.K செல்லலாம்.
- ★ 100% பகுதிநேர வேலை வாய்ப்புக்குரிய ஏற்பாடுகள்.

கிளிநொச்சி, வன்னி வாழ் மாணவர்களுக்கு விசேட சலுகைகள், மிகக் குறைந்த கட்டணங்கள்.

தொடர்புகளுக்கு: Sana: 0776277767

## உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 596
திகதி 23/03/2011
சுப்பர் இலக்கம்: 12
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 17 23 38 65

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 10,764,589.60 | - |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 50,000.00 | 10 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 268 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 580 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 13518 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 7707 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 195412 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 31267 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசுத்தொகை ரூ. 8,809,660.00

05960214704
05960282981

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு 11,115,856.80

தேசிய லொத்தர் சபை

## ரோயல் குளுக்கோஸ்

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
ரோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
ரோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணைப்
பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

100 % டெக்றோஸ் மொனோகைட்றேட் (Dext rose Monohydrate) அடங்கிய சர்வதேச தரத்திற்கு நிகரான றோயல் குளுக்கோஸ் (100g) மிகக் குறைந்த விலையான ரூபா 31.90 இற்கு சந்தையில் கிடைக்கும்போது ஏன் மற்றைய குளுகிகோஸிற்கு அதிகவிலை கொடுக்கவேண்டும்?

இலவசம்

அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!

எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.

## காணிகள் விற்பனைக்கு

கண்டி வீதி, அறவழி நிலையத்துக்கு பின்னால் உள்ள படைப்பு வளவு 20 பரப்பும் திறமான வயல் காணிகளும் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே: 0776034626, 0772720139.

## வீசா சேவை

UK, CANADA, ITALY, USA போன்ற நாடுகளுக்கான Student Visa செய்தல் மற்றும் எல்லா நாடுகளுக்குமான Financial Sponsorship என்பன
தொடர்பு: 0779218444

## விற்பனைக்கு

JF தொடரிலக்கமுடைய Mitsubishi Buddy அலுமினியப் பொடி சிறிய வான் உடனடி விற்பனைக்கு.
தொடர்பு: 0779460966

## ஆங்கிலம் கற்பதில் ஆர்வமுள்ளவரா?

Kingbross Institute மூலம் ஆங்கிலத்தை 6 மாதத்தினுள் மிகவும் இலகுவாகவும் தெளிவாகவும் அடிப்படையில் இருந்து கற்றுக் கொள்ள இது ஓர் அரிய வாய்ப்பு. கற்கை நெறியின் நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும்.

No.102, Main street (சிறைச்சாலைக்கு எதிரே)
தொடர்பு: 0774541981, 021 2229373
[ஆங்கில மொழி கற்போருக்கு பேச்சு மொழி சிங்களம் இலவசம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியாவைத் தாக்கும் மேற்கத்திய நாடுகள் விரைவில் வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள்

## கொக்கரிக்கிறார் கடாபி

பெங்காசி, மார்ச் 25

'லிபியாவைத் தாக்கும் மேற்கத்திய பாசிச நாடுகள், விரைவில் வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குச் சென்று விடும்' என்று லிபியத் தலைவர் கடாபி, கொக்கரித்தார்.

இந்த நிலையில், கடாபி நாட்டை விட்டு வெளியேறும் முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாக, அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் கூறியுள்ளார்.

லிபியாவின் மீதான 'போர் விமானங்கள் பறக்கத் தடை தீர்மானம்', தற்போது அமெரிக்கா தலைமையில் பல்வேறு நாடுகளின் கூட்டணியில் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

**கூட்டணியில் குழப்பம்**

இதனிடையே, லிபியா மீதான தாக்குதலைத் தொடர்வதில், பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் அல்லது 'நேட்டோ' அமைப்பு இவை இரண்டில் யாரிடம் ஒப்படைப்பது என்பது குறித்து ஆலோசனை நடந்தது.

பிரிட்டனுடன் சேர்ந்து பிரான்ஸ் தலைமை ஏற்க விரும்பியது. 'நேட்டோ' தலைமையேற்றால், கூட்டணியில் உள்ள அரபு நாடுகள் கழன்று கொண்டு விடும் என்று பிரான்ஸ் காரணம் கூறியது.

'நேட்டோ' அமைப்பில் இடம் பெற்றுள்ள ஒரே இஸ்லாமிய நாடான துருக்கி, 'நேட்டோவின்' தலையீடு, லிபியாவை ஆக்கிரமிக்கும்நோக்கத்தில்முடிந்து விடும் என்று அஞ்சியது. 'நேட்டோ' தலைமை ஏற்காவிட்டால் கூட்டணியில் தொடர்வது குறித்து யோசிப்போம் என்று இத்தாலியும், நோர்வேயும் மிரட்டல் விடுத்தன.

உடனடியாக, மத்திய தரைக் கடலில் 'நேட்டோ' தனது கப்பல் படையைத் தயார் நிலையில் வைத்தது. இதையடுத்து 'நேட்டோவில்' இருந்த தனது நான்கு கப்பல்களை ஜேர்மனி, தனது நாட்டுக்கு அழைத்துக் கொண்டு விட்டது.

**ஒபாமா சமாதானம்**

கூட்டணியில் குழப்பம் ஏற்பட்டதை அடுத்து செவ்வாய்க் கிழமை, இதுகுறித்து பிரிட்டன் பிரதமர் டேவிட் கேமரூன், பிரான்ஸ் அதிபர் சர்கோசி மற்றும் துருக்கி பிரதமர் ரெசப் டையிப் எர்டோகன் மூவரிடமும் ஒபாமா பேசினார்.

லிபிய ராணுவ நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டுள்ள நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் அடங்கிய ஒரு அரசியல் குழு அமைத்து, அதன் வழிகாட்டலில் 'நேட்டோ' செயல்பட வேண்டும் என்று பிரான்ஸ் நிபந்தனை விதித்தது. ஒபாமா அதை ஏற்றுக் கொண்டார். விரைவில், 'நேட்டோ' தலைமைப் பொறுப்பு ஏற்கும் என்று தெரிகிறது.

**அடிபணிய மாட்டேன் என்கிறார் கடாபி**

செவ்வாய்க்கிழமை இரவு, தன் ஆதரவாளர்கள் மத்தியில் பேசிய கடாபி, "நான் இங்குதான் இருக்கிறேன். சரண் அடைய மாட்டேன். நாம் எவ்வகையிலாவது வெற்றி பெறுவோம். நாம் போரிடத் தயார். லிபியா மீது தாக்குதல் தொடுத்துள்ள மேற்கத்திய நாடுகள் விரைவில் வரலாற்றின் குப்பைத் தொட்டியில் விழுந்து விடும்' என்று ஆவேசமாக பேசினார்.

ஜின்டான், ஜாவியா, மிஸ்ரட்டா, அஜ்தாபியா ஆகிய நகரங்களில் தற்போது கடாபி ராணுவத்தின் தாக்குதல் அதிகரித்துள்ளது. மிஸ்ரட்டாவில் நேற்று முன்தினம் நடந்த கடும் தாக்குதலில், மேலும் 12 பேர் பலியாயினர். கடந்த ஒன்பது நாள்களில் அங்கு 90 பேர் பலியாகியுள்ளனர். மின்சாரம், குடிநீர் மற்றும் தகவல் தொடர்பு வசதியின்றி கடந்த ஒன்பது நாள்களாக மிஸ்ரட்டா நகர மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

**ஹிலாரி ஆரூடம்**

இந்த நிலையில் நேற்று முன்தினம் பேட்டியளித்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், "கடாபி நாட்டை விட்டு வெளியேறும் வழிகளை ஆலோசித்து வருகிறார். அவர் தற்போது சண்டையிடுவது போல நடிக்கிறார். அவர் நாட்டை விட்டு வெளியேறினால் அதை அமெரிக்கா வரவேற்கும், ' என்று கூறியுள்ளார். (ம)

# கனடிய விமானங்களும் லிபியாவில் தாக்குதல்

லிபியாவின் மூன்றாவது பெரிய நகரத்தில் இருந்து சர்வாதிகாரி கர்னல் கடாபியின் ராணுவத்தினரை வெளியேற்றுவதற்கு கூட்டுப்படையில் இடம் பெற்றுள்ள கனடிய போர் விமானங்கள் நேற்று முன்தினம் தாக்குதலில் ஈடுபட்டன.

லிபியாவின் இரு பெரும் மையங்களில் கூட்டுப்படைகள் தாக்குதலில் ஈடுபட்டன. கனடிய போர் விமானங்களுக்கு பக்கத்தில் இரு எரிபொருள் விமானங்கள் உடன் வந்தன. லிபிய தலைநகர் திரிபோலிக்கு கிழக்கே உள்ள மிஸ்ரட்டா நகரில் முதல் தாக்குதல் நடந்தது.

மத்திய தரைக் கடல் பகுதியில் போராட்டக் காரர்களுக்கும் கடாபிபடையினருக்கும் இடையே கடும் தாக்குதல் நடந்தது. இந்த நகரில் கடந்த வாரம் போராட்டக் காரர்கள் தாக்குதலைத் தொடர்ந்த போது 5 லட்சம் அப்பாவி மக்கள் மீது சர்வாதிகாரி துருப்புகள் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ளன.

லிபியாவில் கடந்த 41 ஆண்டுகளாக கடாபி சர்வாதிகார ஆட்சி நடைபெறுகிறது. இந்த சர்வாதிகார ஆட்சியை அகற்ற கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதியன்று போராட்டம் தொடங்கியது. போராட்டத்தை ஒடுக்குவதாக லிபிய ராணுவம் அப்பாவி மக்களை கொன்று குவித்தது.

அப்பாவி மக்களைக் காப்பாற்றுவதற்காக லிபிய வான் எல்லையில் விமானம் பறக்க ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தடை விதித்தது. இந்த தடையைத் தொடர்ந்து கூட்டுப்படைகள் லிபியா ராணுவம் மீது தாக்குதலை நடத்தி வருகிறது.

இதில் பிரிட்டன்,பிரான்ஸ், அமெரிக்கா,கனடா படைகள் உள்ளன. கடாபி நாட்டிற்குள் ஆயுங்களை கடத்திக் கொண்டவர முயற்சிப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றது. (ம)

# சவூதியில் விரைவில் தேர்தல்

ரியாத், மார்ச் 25

சவூதி அரேபியாவில் விரைவில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறும் என்று அரசின் இணையதளம் செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறலாம் என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. தொடர்ந்து தேர்தல்களில் பெண்களின் பங்களிப்பு என்ன என்பது அரசின் அறிவிப்பில் பின்னர் தெரிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 40 ஆண்டுகால அரசியலில் கடந்த 2005ஆம் ஆண்டு முதன்முறையாக நகர சபைத் தேர்தல் நடைபெற்றது. அதில் பெண்கள் பங்கேற்றனர். இருப்பினும் அரசியல் ரீதியாக வெற்றிபெற முடியாமல்போனது.

தொடர்ந்து 2009ஆம் ஆண்டு மீண்டும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த முடிவு செய்த போது பல்வேறு காரணங்களால் அவையும் ஒத்திவைக்கப்பட்டன. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது தேர்தல்களை நடத்திவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் அல்லது ஒக்டோபர் மாதத்திற்குள்ளாக தேர்தல்கள் நடத்தி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பாகிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல்

பாகிஸ்தானில் நேற்றுக் காலை நடந்த தற்கொலைப் படைத் தாக்குதலில் 5 பேர் உடல் சிதறி பரிதாபமாக பலியாகினர். மேலும் 25 பேர் படுகாயமடைந்தனர்.

வடமேற்கு பாகிஸ்தானில் ஹங்கு மாவட்டத்தில் இருக்கும் ஒரு பொலிஸ் ஸ்டேஷன் மீது காரில் வந்த பயங்கரவாதி வேகமாக மோதி தன் மீது கட்டியிருந்த குண்டை வெடிக்கச் செய்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவத்தில் 5 பேர் இறந்தனர். காயமடைந்தவர்கள் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

குண்டு வெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து அப்பகுதியில் பொலிசார் குவிக்கப்பட்டுள்ளனர். (ம)



சுலோவெனியா நாட்டுக்கு வருகை தந்த குரோஷியா அதிபர் இவோ-ஜோஸ்போவிக் அந்த நாட்டு அதிபர் டேனிலோடர்க்கின் தலைநகர் ஒடியாக் அதிபர் மாளிகையில் வரவேற்றார்.

# லிபியாவிலிருந்து அடைக்கலம் கோரியுள்ள அகதிகளின் எண்ணிக்கை குறைவு

## எஸ்.டி.சீ. கூறுகிறது

அரசியல் பதற்றம் நிலவி வரும் லிபியாவிலிருந்து குறைந்தளவான அகதிகளே எல்லை நாடுகளில் அடைக்கலம் கோரியுள்ளதாக எஸ்.டி.சீ. என்ற சுவிஸ் தொண்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

எல்லை நாடுகளான எகிப்து மற்றும் டுனீசியா போன்ற நாடுகளில் குறைந்தளவான மக்களே அடைக்கலம் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கூட்டுப் படையினர் லிபிய நிலைகள் மீது தாக்குதல் நடத்தி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

எஸ்.டி.சீ. தொண்டு நிறுவனம் லிபிய எல்லைப் பகுதிகளில் கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# உலக அதிசயங்களுள் ஒன்றான ஈபிள் ரவருக்கு வெடிகுண்டு மிரட்டல்

பரிஷ், மார்ச் 25

பிரான்ஸ் தலைநகர் பாரிஷில் இருக்கும் ஈபிள் ரவர் உலக அதிசயங்களில் ஒன்றாகும். இதற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதை தொடர்ந்து அங்கிருந்த 4000 சுற்றுலா பயணிகள் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டனர்.

பொலிஸாருக்கு வந்த மர்மத் தொலைபேசி அழைப்பில் ஈபிள் ரவரில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாக விடுக்கப்பட்ட மிரட்டலை தொடர்ந்து தீவிர தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

தீவிர சோதனைக்குப் பின்னர் அங்கு வெடிப்பொருள் ஏதும் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்துவிட்டது

## பாலசுப்பிரமணியம் தனபாலன் அவர்களின்



**கல்வி நிர்வாகத்தில் விடய ஆய்வு**
**கல்வி நிர்வாக சேவை (SLEAS)**
**போட்டிப் பரீட்சை வழிகாட்டிநூல்**

- ✱மாதிரி வினாத்தாள், கடந்தகால வினாத்தாள் விடைகளுடன்
- ✱ விடய ஆய்வு கற்கை தொடர்பான நவீன எண்ணக்கருக்கள்
- ✱ இலங்கையின் கல்விப் பிரச்சினைகள், இலங்கையின் கல்வி வரலாற்றுச் சுருக்கம்
- ✱அதிபர் வகிபங்கும் தலைமைத்துவமும் வினைத்திறனுடைய பாடசாலை
- ✱தேசிய கல்வி ஆணைக்குழு, NIE, கல்வியமைச்சு, பாடசாலை கலைத்திட்டம் ஆகியவை உள்ளடங்கிய நூல்.

இந்த நூலாசிரியர் கல்வி முகாமைத்துவம் தொடர்பான நவீன எண்ணங்களைத் தனது செயலமர்வுகள் மூலம் விதைத்து வருகின்றார். கல்வி நிர்வாக விடய ஆய்வு சார்ந்த பூரண நூல் எதுவும் வெளிவராத சூழலில் இந்த நூலின் வரவு வரவேற்கத் தக்கது. இலங்கையின் 17 கல்வியியற் கல்லூரி கல்வியியலாளர்களிலும் அதிகம் கல்வியியல் சார்ந்த நூல்களை எழுதிய முதலாமவராகவும் காணப்படும் இந்த நூலாசிரியர் பா.தனபாலன், சாதனையாளராகத் திகழ்கின்றார். அவருடைய சாதனைகளும் வளர்ச்சியும் சமுதாயத்திற்குப் பயனுள்ளதாக இருப்பதுதான் அவரது கல்விச் சேவையின் உயர் பரிமாணமாகவுள்ளது.

**திரு. S.K. யோகநாதன்**
**(பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)**

### நூல் வெளியீடும் விநியோகமும்

லங்கா பதிப்பகம்
FL, 1/14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர,
கொழும்பு -12
T.P: 0112341942

ஸ்ரீலங்கா புத்தகசாலை
243,கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்,
T.P: 0212222573

(41,19,20)

## தையல் பயிற்சி ஆரம்பம்

சாவகச்சேரி நகர் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் இந்தப் பிரிவுக்குட்பட்ட மகளிர்களுக்கான தையல் பயிற்சி வகுப்பினை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

இந்தப் பயிற்சிக்கு வகுப்புகளில் பங்குபற்றவுள்ளவர்கள் சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய கட்டடத்தில் இயங்கும் சங்க அலுவலகத்தில் பெயர்களைப் பதிவு செய்யுமாறு சங்கத் தலைவர் திருமதி லோ. நவரத்தினம் அறிவித்துள்ளார்.(எ-207)




## தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய

வருடாந்த பொதுக் குளிர்த்தி விழா

மேற்படி ஆலயத்தின் வருடாந்தப் பொதுக் குளிர்த்தி விழா பங்குனி மாதம் 14 ஆம் நாள் (28.03.2011) திங்கட்கிழமை சிறப்பாக நடைபெறத்திருவருள் பாலித்துள்ளது. அடியார்கள் அத்தருணம் ஆலயத்துக்கு வருகை தந்து விழாவைச் சிறப்பித்து அன்னையின் அருள் பெற்றேகுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அன்னதானத்துக்குத் தேவையான பொருள்களை முதல்நாளே ஆலயத்தில் கொடுத்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(48,19,20)

ஆலய பரிபாலன சபை

## வீடு வாடகைக்குத் தேவை

நல்லூர் சுற்றாடல் பகுதி, அதனை அண்டிய பகுதியில் 4பேர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றுக்கு சகல வசதிகளையும் உள்ளடக்கியதான வீடு வாடகைக்கு உடனடியாகத் தேவை. தொடர்பு இல. 0776156667

(41,20,22)

## மணமகள் தேவை

கண்டியைச் சேர்ந்த சுயதொழில் புரியும் 1984 ஆம் ஆண்டு பிறந்த, கடக இராசி, பூசம் நட்சத்திரம் கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை (தரகர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும் )
0779415954 (41,20,22)

## தவறிவிட்டது

அந்தணன்திடல் கரவெட்டியைச் சேர்ந்த சிற்றம்பலம் வனிதா என்பவரது தேசிய அடையாள அட்டை 835594181V, 14.03.2011 ஆம் திகதி அன்று நெல்லியடி-யாழ்ப்பாண சிற்றூர்தியில் பயணித்து நகர்க்கடைகளுக்கும் சென்றவேளை தவறியுள்ளது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசிகளுடன் தொடர்பு கொள்ளவும். 021-226-2760 0776059717
(41,20,22)

## GERMAN, SWISS மொழிகள்

GERMAN, SWISS மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் கற்பிக்கப்படுகின்றன.
GERMAN INSTITUTE
NO.10, PALALY ROAD, JAFFNA.
T.P: 0771604823
(41,20,22)

# 25 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## மாணிக்கம் துரைராசா (S.M.T.)

(பிரபல வர்த்தகர் - அச்சுவேலி, வவுனியா)



மண்ணுலகில் 21.10.1946 — விண்ணுலகில் 25.03.1986

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்- கபடு வராத நட்பும்
குன்றாத வளமையும் மங்காத இளமையும்- கழு பிணியிலா உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்- நெறி தவறாத சற்குணமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்- தடை வராத கொடைகளுமாய்
உடல் மொழி அறிந்து உதவிடும் பாங்கினனாய்
ஊர் போற்றும் உத்தமராய் வாழ்ந்துவந்த தெய்வமே
மறக்காது என்றும் உம் திருவடிகள்!

எமது அன்புத் தெய்வத்தின் 25ஆவது நினைவுதினத்தை முன்னிட்டு இன்று (25.03.2011) வெள்ளிக்கிழமை அச்சுவேலிவடக்கு ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமிகள் தேவஸ்தானத்தில் முற்பகல் 10மணியளவில் நடைபெறும் விசேட அபிஷேகத்திலும், அதனைத்தொடர்ந்து எமதில்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

குடும்பத்தினர்.

**மனைவி :-** துரைராசா தனலட்சுமி- (தவேஸ்வரி) பிரான்ஸ்,
**பிள்ளைகள் :-** துரைராசா சிவகுமார்- SMT வீடியோ உரிமையாளர், பிரான்ஸ்,
துரைராசா சதீஸ்குமார்-TABAC உரிமையாளர், பிரான்ஸ்,
ஜெயகாந்தன் கஜலட்சுமி- செந்தாபோட்டோ, பிரான்ஸ்,
துரைராசா ராஜகுமார்- SMT நவீன் ரவல்ஸ், பிரான்ஸ்,
துரைராசா நிமலகுமார்- Chauffeur Livreur, பிரான்ஸ்,
கலாகேந்திரன் இராஜலட்சுமி - Restaurant, பிரான்ஸ்.

*அச்சுவேலி வடக்கு,*
*அச்சுவேலி.*
*0750399265.*

(49,19.24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 63 தொகுதிகளில் காங்கிரஸுக்கு எதிராக பிரசாரம்

## இயக்குநர் சீமான் அதிரடி



சென்னை, மார்ச், 25

சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி போட்டியிடும் 63 தொகுதிகளில் காங்கிரஸுக்கு எதிராக பிரசாரம் செய்யவுள்ள தாக நாம் தமிழர் கட்சித் தலைமை ஒருங்கிணைப்பாளரும் இயக்குநருமான சீமான் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று சென்னையில் பத்திரிகையாளர்களிடம் கூறியதாவது:

சட்டசபைத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி போட்டியிடுவது இல்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் தேசிய இனத்தின் உடைமைக்கு, உயிருக்கு உணர்வுக்கு எதிராக செயற்பட்டு இலங்கை தமிழ் இனத்தை கொன்று குவித்த சிங்கள அரசுக்கு துணை நின்ற காங்கிரஸ் கட்சி போட்டியிடும் 63 தொகுதிகளிலும் தோற்கடிக்கும் பணியில் ஈடுபடுவோம்.

இதற்காக 17 தினங்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து 63 தொகுதிகளிலும் எதிர்த்து பிரசாரம் செய்வோம்.

இன்று எனது பிரசாரத்தை நெல்லை மாவட்டம் திசையன்விளையில் தொடங்குகிறேன். ஏப்ரல் 11 ஆம் திகதி வரை பிரசாரம் செய்வேன். தமிழரால் உருவெடுத்து உள்ளோம். காங்கிரஸை கருவறுப்போம். அரசியல் சமுதாய மாற்றம் ஏற்படுத்தும் வகையில் எமது பிரசாரம் அமையும்.

மேலும் இலவச திட்டங்கள் வழங்குவது பிச்சை எடுப்பதற்குச் சமமானதாகும். காங்கிரசை பழி வாங்க அரசியல்களத்தில் குதித்து உள்ளோம். வைகோவை அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேற்றியது வருத்தம் அளிக்கிறது. அவர் அனுபவம் மிக்க தலைவர் அவர் எடுத்த முடிவு சரியாக இருக்கும்.

எங்கிருந்தாலும் அவரது வாழ்த்து எங்களுக்குக் கிடைக்கும். காங்கிரஸை தோற்கடிக்கக் கூடிய வலுவான சின்னம் இரட்டை இலையாக இருந்தாலும், மொட்டை இலையாக இருந்தாலும் அதை ஆதரிப்போம்.

காங்கிரசை அழிப்பது தான் எங்களது நோக்கம். இவ்வாறு அவர் கூறினார். (201)

## பார்வதி அம்மாளின் அஸ்தி சென்னையில் கரைக்கப்பட்டது

சென்னை, மார்ச் 25

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளின் அஸ்தி கடந்த செவ்வாய்க்கிழமை சென்னையில் கரைக்கப்பட்டது.

பார்வதி அம்மாளின் 31 ஆவது நினைவு நாளான செவ்வாய்க்கிழமை அவரது அஸ்தியை சென்னை மெரினாக் கடற்கரையில் கரைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, பழ.நெடுமாறன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் அதிக எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர். (201)

## வெளியீடு...



சென்னையில் விடுதலை சிறுத்தை கட்சி தலைவர் திருமாவளவன் நேற்று முன்தினம் தேர்தல் அறிக்கையை வெளியிட்டார்.

## ஜெயலலிதா வேட்பு மனுத்தாக்கல்; தொண்டர்கள் மீது செருப்பு வீச்சு

திருச்சியில் ஸ்ரீரங்கம் தொகுதியில் போட்டியிடும் ஜெயலலிதா நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்ய வந்த போது அவருடன் வந்த அ.தி.மு.க., தொண்டர்கள் மீது செருப்பு வீசப்பட்டதால் அ.தி.மு.க. - தி.மு.க. தொண்டர்கள் மோதும் சூழல் ஏற்பட்டது.

இதனையடுத்து பொலிசார் தடியடி நடத்தி கூட்டத்தினரை கலைத்தனர்.

அ.தி.மு.க., பொதுசெயலீர் ஜெயலலிதா நேற்று வேட்புத் மனுத்தாக்கல் செய்ய தனியான விமானம் மூலம் திருச்சி வந்தார். மு.ப. 11 மணி அளவில் திருச்சி மாவட்ட செயலர் அலுவலகத்துக்கு தமது தொண்டர்கள் புடை சூழ வந்தார். இவர் முன்பு செல்ல இவரது பின்னால் அ.தி.மு.க., தொண்டர்கள் வரிசையாக வந்து கொண்டிருந்தனர்.

இவர் மனுத்தாக்கல் செய்ய வரும் போது ஜெயலலிதாவை எதிர்த்து போட்டியிடும் தி.மு.க., வேட்பாளர் ஆனந்தும் நேற்று தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்ய வந்தார்.

இந்தநேரத்தில் இருதரப்புத் தொண்டர்கள் குவிந்திருந்ததால் பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டிருந்தது.

இந்தநிலையில் ஜெயலலிதா மனுத்தாக்கல் செய்ய மாவட்டச் செயலாளர் அலுவலக வளாகத்திற்குள் சென்ற போது, தி.மு.க.,வினர் அ.தி.மு.க.,வினரை நோக்கி செருப்புவீசியதாகக்கூறப்படுகிறது.

இதனையடுத்து இருதரப்பும் பலத்த குரலில் கத்தியபடி மோதும் சூழல் ஏற்பட்டது.

வன்முறை ஏதும் நிகழாமல் தடுக்க பொலிசார் சாதாரண தடியடி நடத்தி கலைத்தனர். தொடர்ந்து அங்கு பதற்றம் நிலவியது. மனுத்தாக்கல் முடிந்து செல்லும்போது ஜெயலலிதாவை அணிவகுத்து வந்த வாகனங்கள் மீது கல் வீசப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதனால் அங்கு பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டது. (201)

## போபால் விஷ வாயுக் கசிவு: குற்றவாளி இந்தியா கொண்டுவரப்படுகிறார்



டில்லி, மார்ச் 25

போபால் விஷவாயு சம்பவத்தில் முக்கிய குற்றவாளியான வாரண் அண்டர்சனை அமெரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு அழைத்து வர சி.பி.ஐக்கு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

1984 இல் ஏற்பட்ட போபால் விஷவாயு சம்பவத்தில் சுமார் 25 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். லட்சக்கணக்கானோர் நிரந்தரமாக ஊனமடைந்தனர். இந்த சம்பவத்தின் முக்கியக் குற்றவாளியான யூனியன் கார்பைட் நிறுவனத்தின் தலைவர் வாரன் அண்டர்சன் தற்போது அமெரிக்காவில் வசித்து வருகிறார்.

அவரை இந்தியாவுக்குக் கொண்டு வர சி.பி.ஐ முயன்று வருகிறது. இந்தநிலையில், அது தொடர்பான கோரிக்கையை மத்திய அரசு மூலம் முன்வைக்க சி.பி.ஐ.,க்கு நீதிமன்றம் நேற்று அனுமதி அளித்துள்ளது.

டில்லி முதன்மை பெருநகர மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இது தொடர்பான மனு நீதிபதி வினோத் யாதவ் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

மனுவை விசாரணை செய்த நீதிபதி போபால் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் வேதனையை கணக்கில் கொண்டும், நீதியின் நலன் அடிப்படையிலும், ஆண்டர்சனை நாடு கடத்துவது சரியானது என்று கருதுகிறோம்.

எனவே, அவரை இந்தியாவுக்கு அழைத்து வர எந்தத் தடையும் இல்லை. இதில், சி.பி.ஐ.,யின் கோரிக்கைக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. என்று நீதிபதி தனது தீர்ப்பில் கூறியுள்ளார். (201)

## நடிகை அனுஷ்கா வீட்டில் வருமான வரித்துறை சோதனை



ஹைதராபாத், மார்ச்25

ஆந்திராவில் அனுஷ்கா உள்ளிட்ட முன்னணி நடிகர், நடிகைகள் வீடுகளில் வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்று முன்தினம் திடீர் சோதனை மேற்கொண்டனர்.

விசாகப்பட்டினத்தில் முக்கிய இடம் ஒன்றை ஆந்திராவின் முன்னணி திரையுலக பிரபலங்கள் வாங்கியதாக வருமான வரித்துறைக்கு ரகசியத் தகவல் கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து திரையுலக பிரபலங்கள் வசிக்கும் பஞ்சாரா ஹில்ஸ், ஜுபிலி ஹில்ஸ் ஆகிய பகுதிகளில் உள்ள அவர்களது வீடுகளில் வருமான வரித்துறையினர் நேற்று முன்தினம் காலை புகுந்து சோதனை நடத்தினர்.

நடிகர்கள் நாகர்ஜுனா, ரவி தேஜா, நடிகை அனுஷ்கா, தயாரிப்பாளர் சிவ பிரசாத் ரெட்டி ஆகியோரின் வீடுகள் மற்றும் அலுவலகங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் ஒரே நேரத்தில் இந்த சோதனைகளை நடத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (201)

# அ.தி.மு.கவும் வழங்குகிறது இலவசங்கள்

அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு 20 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும். மேலும் கரும்பு கொள்முதல் விலை தொன்னுக்கு 2,500 ரூபாவாக உயர்த்தப்படும். போன்ற அதிகமான இலவச அறிவிப்பைத் தாங்கி நேற்று அ.தி.மு.கவின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அ.தி.மு.க.பொதுச் செயலாளர் ஜெயலலிதா நேற்று திருச்சியில் ஸ்ரீரங்கம் தொகுதியில் போட்டியிடுவதற்காக வேட்புமனுத் தாக்கல் செய்தார்.

இதனையடுத்து நண்பகல் 12 மணிக்கு செய்தியாளர்களை சந்தித்து அ.தி.மு.க தேர்தல் அறிக்கையை வெளியிட்டார்.

அ.தி.மு.க.வின்தேர்தல் அறிக்கையின் முக்கிய அம்சங்களாக:

வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள தாழ்ந்த வருமானமுள்ள குடும்பங்களுக்கு 4 ஆடுகள் இலவசமாக வழங்கப்படும். கால்நடை வளத்தைப் பெருக்கும் வகையில் இந்தத்திட்டம் சிறப்பாக செயற்படுத்தப்படும்.

மாணவர்களுக்கு 4 சீருடைகளும், காலணிகளும் இலவசமாக வழங்கப்படும். அத்துடன் மாணவர்கள் இடை நிறுத்தம் குறைப்பதற்காக நடவடிக்கை. பாடசாலையில் படிக்கும் பிளஸ் 1, பிளஸ் 2 மாணவ, மாணவியர்களுக்கு 'லப்டொப்' கணினி இலவசமாக வழங்கப்படும்.

மீனவர் பாதுகாப்பு படை அமைக்கப்படும். இயந்திர மீன்பிடி படகுகள் வாங்கத் தேவையான மானியம் வழங்கப்படும்.

கச்ச தீவை மீட்டெடுத்து தமிழக மீனவர் நலன் காக்கப்பட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கைதமிழ் அகதிகளுக்கு உணவு, தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும். மேலும்பலவிடயங்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம்

**01. படவரைஞர்** (Draughtsman)
AutoCad முறையில் கட்டட வரைபடங்கள் கீறும் ஆற்றலும் அனுபவமும் உள்ளோர் தேவை. பயிலுநர்களாக விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.

**02. சாரதி** (Driver)
உழவு இயந்திரம், இரு சில்லு உழவு இயந்திரம் என்பன செலுத்தக் கூடிய சாரதி அனுமதிப்பத்திரம் உடையோர் தேவை.
அலுவலக நாள்களில் காலை 9 மணி - மாலை 4 மணிவரை சுய விவரக் கோவைகளுடன் நேரில் வரவும்.

**ருலின்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,**
(22-25-32) **இல. 08, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்



### *ஆறுமுகம் சிங்கராஜா (சிவராசா)*

(ஓய்வுபெற்ற அலுவலர் - இலங்கை துறைமுக அதிகார சபை)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பில் வசித்து வந்தவருமாகிய ஆறுமுகம் சிங்கராஜா (சிவராசா) 22.03.2011 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் கந்தையா தம்பதியரின் அன்பு மருமகனும் குணவதியின் (குணம்) அன்புக் கணவரும் ஜெயந்தன் (லண்டன்), தயானந்தன் (கனடா), நிரஞ்சன் (கனடா), கேசவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிராணி, விஜயராணி, மிராணி ஆகியோரின் அன்பு மாமனும் ஷிவானி, தீவிக்கன், வைஸ்வகன், றெமிங்ரன், ஜெஸ்ரன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற கருணாநிதி மற்றும் ஆனந்தராஜா, பிரான்ஸில் வசிப்பவர்களான கமலராணி, சந்திரராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுப்பிரமணியம் (கனடா), பாக்கியலெட்சுமி (இந்தியா), பரமேஸ்வரி, மரியம்மா, தங்கராஜா (பிரான்ஸ்), அனுலா (சறோ) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (28.03.2011) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு பொரளை சுப்பிரீம் மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் மாதம்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

854, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (22-25-32)
தகவல்: ஆனந்தராஜா (சகோதரன்).

## மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

தென்மராட்சி, மார்ச் 25

மதுபோதையில் வாகனம் செலுத்தி வந்த வவுனியா வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கினை விசாரித்த பதில் நீதிவான் செ. கணபதிப்பிள்ளை இந்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு மாதச் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

(எ-207)

### விற்பனை ஊக்குவிப்பாளர் தேவை

முதற்தர கையடக்கத் தொலைபேசி வலையமைப்பிற்கு விற்பனை ஊக்குவிப்பாளர்கள் தேவை

**தகுதியுடையவர்கள் எதிர்வரும் 28.03.2011 திங்கட்கிழமை சுயவிவரக்கோவை, அடையாள அட்டை, கிராம சேவையாளர் வதிவிட சான்றிதழ் என்பவற்றுடன் கீழே குறிப்பிடப்பட்ட முகவரிக்கு சமூகமளிக்கவும்.**
**கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.**
*முகவரி: 154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

**ஐரோப்பாவில் இறக்குமதியான நவீனமாக்கப்பட்ட பொட்டோ கொப்பி இயந்திரங்கள்**

E230/232/280/282/352/452
166/206/205/207 Canon பிரிண்டர்கள்




ஒரு வருட உத்தரவாதம்




- ரீபில் லேசர் டோனர்கள்
- பொட்டோ கொப்பியர் உதிரிப்பாகங்கள் மற்றும் டோனர்கள்

25 வருட நம்பிக்கையான சேவை

**ஸ்டார்லைட் இலெக்ட்ரோனிக்ஸ்**
753, 2nd Division, Maradana, Colombo 10.
Tel: 2693655, 2681711, 0117451465, Fax: 2681712

## பூநகரி க.தொ.கூ.ச. சமாசம் (வரையறுக்கப்பட்டது)

### பதவி வெற்றிடம்

பூநகரி க.தொ.கூ.ச. சமாசத்தில் கீழ் குறிப்பிடப்படும் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

01. பதவி: பொது முகாமையாளர்
பதவி இலக்கம்/ சம்பளக்குறியீடும்-
66/ 2006ன் படி- 10(118/82ன் படி 101/08)
சம்பள அளவுத் திட்டம்:-
10700-13200
120X10- 130X10
கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்.

02 **தகைமைகள்:**

அ. கூட்டுறவுப் பணியாளரின் 11வது சம்பளத் திட்டத்தில் முகாமை/ மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடத்துக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளரின் 12வது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற் குறித்த வண்ணம் 06 வருட அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக தொழில்நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் முகாமைமட்டத்திலான பதவியில் 01 வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) கா.பொ.த (உயர்தரம்)ல் 03 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் 02 வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

03. வயது:- 18-50 வரை
04. சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. சங்கப்பணியாளர்கள் தங்கள் சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
05. பிணை தொடர்பானது:- ரொக்கம்

ஆதனம்

06. இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.
07. **விண்ணப்ப முடிவுத் திகதி:-** 06.04.2011.
08. **விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-**
தலைவர், பூநகரி க.தொ.கூ.ச. சமாசம், ஜெயபுரம், பூநகரி.
09. விண்ணப்பத்துடன் கல்வி, வயது அத்தாட்சிப்படுத்தும் சான்றிதழ் போட்டோப்பிரதிகளை இணைக்கவும்.

**தலைவர்,**
*(2389) (35)* **பூநகரி க.தொ.கூ.ச. சமாசம், பூநகரி.**

## மரண அறிவித்தல்



### *திருமதி செல்வராசா நாகேஸ்வரி*

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப் பாய் மேற்கை வசிப்பிடமாக வும் கொண்ட செல்வராசா நாகேஸ் வரி (24.03. 2011) நேற்றுக்காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - மாணிக்கம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற செல்வராசாவின் (மில்) அன்பு மனைவியும் முத்துக்குமார், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் கனகரத்தினம், வைத்திலிங்கம் ஆகியோரின் சகோதரியும் உதயகுமார், சந்திரகுமார், ரவிக்குமார், ஜெயக்குமார், விஜயகுமார், கலாரஞ்சினி, செல்வரஞ்சினி காலஞ்சென்ற சிவரஞ்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2011) ந.ப 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்.** *(2391) (35)*
தகவல்: ஞானசுந்தரம் (மருமகன்)

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை, மல்லாகம்

## கேள்வி அறிவித்தல் - 2011

சபைநிதி, தொழிற்பாட்டுவிருத்தி நன்கொடைநிதி - 2010 நிதிமூலம் மேற்கொள்ளப்படும் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் "இக்ராட்" நிறுவனத்தில் தரம் "எம் 9" அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

*கேள்விப்பத்திரம் வழங்கப்படும் கடைசித் திகதி - 04.04.2011 திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிவரை.*

*கேள்விகள் ஏற்கப்படும் இறுதித் திகதி - 05.04.2011 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிவரை*

*கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி - 05.04.2011 செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணி.*

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், வலி. வடக்கு பிரதேச சபை, மல்லாகம்" என்ற முகவரியிட்டு அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலிடவேண்டும். இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

| இல வேலையின் பெயர் | நிதி | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் (VAT, NBT உட்பட) |
|---|---|---|---|
| 01. மாத்தனை வீதி தொடர் வேலை | சபை | 25,000.00 | 575.00 |
| 02. கீரிமலை கேணிப் பிரதேசத்தைக் கடலரிப்பிலிருந்து பாதுகாத்தல் | சபை | 15,000.00 | 575.00 |
| 03. சேர். கனகசபை வீதி தொடர்வேலை | சபை | 6,000.00 | 575.00 |
| 04. தலைமை அலுவலக பராமரிப்பு வேலை. | தொ.விருத்தி நன்கொடை | 14,000.00 | 575.00 |
| 05. அளவெட்டி நூலக நீர் விநியோக வேலை | தொ.விருத்தி நன்கொடை. | 2,500.00 | 575.00 |

*வலிகாமம் வடக்கு பிரதேச சபை,*
*காங்கேசன்துறை,*
*மல்லாகம்.*
*25.03.2011*

**திருமதி. யோகேஸ்வரி காசிலிங்கம்,**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (மல்லாகம்).**

**டோனர்கள்**
அனலொக்/ டிஜிடல்
போட்டோகொப்பி மெஷின்களுக்கும் மற்றும் லேசர் பிரிண்டர்களுக்கும்
மொத்தமாக கிடைக்கும் பாதுகாப்பான பைக்கட்டுகளில்
மீள் நிரப்பிய கார்ட்ரிஜ்களை பாவித்து இலாபத்தை அதிகரித்து கொள்ளுங்கள்
இறக்குமதியாளர்கள் /விநியோகஸ்தர்கள்
ஜப்பானில் தயாரிக்கப்பட்ட
© EOP21 டோணர்கள்
1987ல் ஆரம்பம்
**ஸ்டார்லையிட் இலெக்ட்ரோனிக்ஸ்**
753, 2வது டிவிஷன், மருதானை வீதி, கொழும்பு 10.
Email:starlight@dialognet.lk
போன்: 2693655, 2681712
பெக்ஸ்: 2681712
தரம் செலவை குறைக்கும்

**NComputing**



அனுகூலம்
- கணனி கொள்வனவிற்கான செலவீனம் மிகக்குறைவு
- மின்சாரச் சிக்கனம்
- வலையமைப்பிலானது
- இடம் சிக்கனம்
- பாடசாலைகள்
- கணனி நிறுவனங்கள்
- அரச திணைக்களங்கள்
- தனியார் அலுவலகங்கள்

மிக உபயோகமான ஓர் தீர்வு

மற்றும் சகல விதமான **Network** தீர்வுகளுக்கும் உத்தரவாதம், சிக்கனமாக, வேகமாக செய்து தரப்படும்.

**Powered by: 3M** 12 வருட உத்தரவாதம்

**Specification**
*Power requirement Powered through the USB cable (additional USB), LED indicator Connecting (flashing light) and Connected (solid light), Display resolution Normal display resolutions, (16- or 32-bit color) @60 Hz Audio 16-bit stereo audio input / output via 3.5mm stereo Jacks, Ports 2 USB 2.0 ports*

**MICRO PC SYSTEMS**
No.115C, W.A Silva Mw, Colombo - 06 | Fax: +94 77 301 3043/+94 777 30 8417
Tel : +94 11 401 6764 / +94 11 236 7405 | Email : sales@micropcsystems.com
JAFFNA ▶ 218, Hospital Road, Jaffna. Tel : 0212 225 893 0773 126 712 / 0773 963 280
NELLIYADI ▶ Main Street, Nelliyadi, Jaffna. Tel : 0773 939 536 021 226 2929
KOTAHENA ▶ 82 New Chetty Street Kotahena, Colombo -13 Tel : 0112 395 775/0773 963 285
VAVUNIYA ▶ 73, 2nd Cross Street, Vavuniya. Tel : 024 222 .969 0773 963 284

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பிரதேச செயலகத்தின் உதைபந்தாட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்25
யாழ்.பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில் கொழும்புத்துறை மேற்கு ஜெற் லைனர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்துப் பாரதி விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் கொழும்புத்துறை மேற்கு ஜெற்லைனர்ஸ் விளை யாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய பாரதி விளையாட்டுக்கழக அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.



இதனைத் தொடர்ந்து இடம் பெறவிருந்த யாழ்.முஸ்லிம் ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும்திருவள்ளுவர்விளை யாட்டுக் கழக அணிக்குமான ஆட்டத்தில் திருவள்ளுவர் விளை யாட்டுக் கழக அணி மைதானத்துக்குச் சமுகம் கொடுக்காமையால் யாழ். முஸ்லிம் விளை யாட்டுக்கழக அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

(த-23)



நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகளின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்குக் கேடயம் வழங்கி மதிப்பளிக்கிறார். அருகில் பாடசாலை அதிபர் இ.குணநாதன் உள்ளார்.

(த-72)

# தென்மராட்சிப் பிரதேச கிரிக்கெட் கிண்ணம் வென்றது வளர்மதி

தென்மராட்சி, மார்ச் 25
தென்மராட்சி பிரதேச கிரிக்கெட் போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணி சம்பியனாகியது.

மட்டுவில் மோகனதாஸ் வி.க. மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நுணாவில் புதிய பாரதி வி.க. அணி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவர்களில் 62 ஓட்டங்களைப் பெற்றது.

63 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் வளர்மதி வி.க அணி ஐந்து ஓவர்களில் 63 ஓட்டங்கள் பெற்று வெற்றி பெற்று இவ்வருட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

(எ-207)

# உடற்பயிற்சிப் போட்டி முடிவு

கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான உடற்பயிற்சிப் போட்டி கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் கிளிநொச்சி கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பி.விஷ்ணு தலைமையில் நடைபெற்றது.

இந்தப் போட்டி நிகழ்வினை கிளிநொச்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் ஆசியுரை வழங்கி ஆரம்பித்து வைத்தார். போட்டியில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய கோட்ட மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகள் பங்கு கொண்டன.போட்டி முடிவுகள் வருமாறு.

ஆண்கள் பிரிவு
இராமநாதபுரம் ம.வி, தரும புரம் ம.வி, கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயம்

பெண்கள் பிரிவு-
வட்டக்கச்சி ம.வி, இராமநாத புரம் மேற்கு அ.த.க.பாடசாலை, தருமபுரம் ம.வி.

(ம-405)

# நல்லூர் பிரதேச கழகங்களின் பெரு விளையாட்டு வெற்றியாளர்

யாழ்ப்பாணம்,மார்ச்25
நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெரு விளையாட்டுக்களில் வெற்றியீட்டிய அணிகளின் விவரங்கள் வருமாறு,

கூடைப்பந்தாட்டம்
(ஆண்கள்)
அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம், கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழகம்.

கூடைப்பந்தாட்டம்
(பெண்கள்)
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம், அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம்.

பூப்பந்தாட்டம்
(ஆண்கள்)
லெவின்ஸ்ரார் விளையாட்டுக்கழகம், ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழகம்.

மேசைப்பந்தாட்டம்
(ஆண்கள்)
சிவகுரு பொற்பதி விளையாட்டுக்கழகம், கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழகம்.

துடுப்பாட்டம்(ஆண்கள்)
இந்திரா விளையாட்டுக் கழகம், முத்துத்தம்பி மத்திய விளையாட்டுக் கழகம்.

கால்பந்தாட்டம்-(ஆண்கள்)
சிவகுரு பொற்பதி விளையாட்டுக் கழகம், அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம்.

(ம-23)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

புத்தூரைச் சேர்ந்த
ஞானசுப்பிரமணியம் ஞானச்சந்திரன்
அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 01.03.2011 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், Environmental Economics இல் முதுவிஞ்ஞான மாணிப் பட்டம் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.



ஆசிரிய நண்பர்கள் P. குக[illegible]ந்தன்,
சத்தியசீலன், சிவசீலன், [illegible]ரணிதரன்

(39)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



யோ.ரவீந்திரன்
B.Sc. Dip.in Ed. M.Ed.
நீங்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு II இற்குத் தரமுயர்த்தப்பட்டுள்ளமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். தாங்கள் விஞ்ஞானக் கல்வியின் முன்னேற்றத்திற்காகவும், முகாமைத்துவ நிர்வாகப் பொறுப்புகளிலும் சிறப்பாக உழைத்தமைக்காகவும் எமது பாராட்டுக்கள். மேலும் பல பதவிகளைப் பெற்று எமது சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்கு உழைக்க எமது வாழ்த்துக்கள்

கல்வியுலகின் நண்பர்கள்,
யாழ்ப்பாணம்.

(39)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 25
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யங்ஹென்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை 4 மணியளவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. ஆட்டத்தில் பங்குகொள்ளவுள்ள அணியின் விவரம் வருமாறு:

* பிற்பகல்- 4 மணி - ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் எதிர் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம்.

(ம-23)

# கபடிப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்.25
யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கபடிப் போட்டி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது என்று விளையாட்டு உத்தியோகத்தர் [illegible] தெரிவித்துள்ளார்.

(ம-23)

# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 25
உரும்பிராய் கிட்ஸ் பார்க் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த விழாவுக்குப் பிரதம விருந்தினராக மக்கள் வங்கி யாழ். பல்கலைக்கழகக் கிளை முகாமையாளர் ஏ. சத்தியமூர்த்தி கலந்து கொள்வார்.

(ம-250)

## வங்கியியல் கற்கை நெறிகள்
CBF, DBF

* வங்கியியல் துறையில் திறமைவாய்ந்த விரிவுரையாளர்களினால் கற்பிக்கப்படும்.
* இக்கற்கை நெறிக்குரிய பரீட்சைக்கான பாடத்திட்டங்கள் யாவும் கற்பிக்கப்படும்.
* வங்கியியல் கற்கை நெறியைப் பதிவு செய்வதற்குரிய தகைமைகளாவன:

க.பொ.த. சாதாரண தரத்தில் ஆறு பாடம் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். இதில் கணிதம், வர்த்தகம், கணக்கியல், ஆங்கிலம், தமிழ் ஆகியவற்றில் திறமைச் சித்தி இருத்தல் வேண்டும்.

விரிவுரைகள் ஆரம்பம்: 26.03.2011 மு.ப. 10 மணி.
முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.

நிர்வாகி,
புதிய உயர் கல்லூரி,
ஆரிய குளம் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P 021 222 8148

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீருடன்.....



எமது மன்றத்தின் மூத்த
அங்கத்தவராகிய

**திருமதி நிர்மலா சுகந்தநாதன்**

(சங்கீத பூஷணம் - வீணை ஆசிரியை)
அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைந்துள்ளோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன் இவரது பிரிவால் கலங்கித் தவிக்கும் உறவுகளுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (25-27-32)

- *இயக்குநர், அங்கத்தவர்கள், பணியாளர்கள்*

## மரண அறிவித்தல்



*முத்தர் கந்தசாமி*

(வேலணை மேற்கு, வேலணை)

சரவணையைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்டவரும், (ஓய்வுபெற்ற இ.போ.ச நடத்துனருமான) முத்தர் கந்தசாமி நேற்று 24.03.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தர் இளையபிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மாவின் மருமகனும், புனிதவதியின் அன்புக் கணவரும் நாகேஸ்வரி (கொழும்பு), லோகேஸ்வரி, ராஜேஸ்வரி, சித்திராதேவி (சுவிஸ்), சண்முகமணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு தந்தையும் சிவலோகநாதன் (கொழும்பு), ஞானசம்பந்தர், நவரட்ணராஜா, குகநேசநாதன் (சுவிஸ்), சந்திரமதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், கபாஸ்கர், லக்சனா, தனுஜா, தஜீபன், அபிநயா, அஜித்குமார், அபிலாஷன், அனோஜன், அர்ச்சனா (சுவிஸ்), அரிகரன் (சுவிஸ்), ஆரகன் (சுவிஸ்), சௌமிகா (ஜேர்மனி), சாருண்யா (ஜேர்மனி), மயூரிகா (ஜேர்மனி), ஆகியோரது ஆசைமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (27.03.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை அம்பலவி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*8ஆம் வட்டாரம்,*
*வேலணை மேற்கு, வேலணை.*

**தகவல்:**
**மனைவி, மக்கள், மருமக்கள்.**

## மரண அறிவித்தல்



*அருந்ததி*
*மாணிக்கவாசகர்*

கரம்பனைப் பிறப்பிடமாகவும் யாழ். பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய திருமதி அருந்ததி மாணிக்கவாசகர் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சந்தானம் தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்ற மாணிக்கவாசகரின் பாசமிகு மனைவியும் எஸ். ஜெயகௌரி, ஞானேஸ்வரன் (முன்னாள் பொறியியலாளர் கரித்தாஸ் கியூடெக், தலைவர் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை), கேதீஸ்வரன் (UK), சிவாஜினி (மீரா - UK), ஸ்ரீதரன் (UK) சுரேந்திரன் (UK), மஞ்சுளா (சுதா - UK) ஆகியோரின் அன்புத் தாயும் சோதிலிங்கம் (UK), Dr.சந்திரிக்கா (பல் வைத்தியர் ST. ஜோன்ஸ் கல்லூரி) சுஜீவா (UK), வசந்தன் (UK), கவிதா (UK), கீதா (UK), இளங்கோ (UK) ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்ற சிவபாலன் மற்றும் லீலா (கனடா), கமலா, பரராஜசிங்கம், விமலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சாம்பவி, அருசன், அஜா, அர்ச்சனா, ஆகாஷ், அனோஜன், சாருகன், சாகரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (27.03.2011) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
*எஸ். ஜெயகௌரி (மகள்)*
12 KOHAT ROAD,
WIMBLEDON,
SW19 8LD. U.K.

**தகவல்:**
**மா.ஞானேஸ்வரன் (மகன்),**
**வட்டு மேற்கு (மாவடி),**
**வட்டுக்கோட்டை.**

## மாங்குளம் ம.வி. சொந்த இடத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 25

மீள்குடியேற்ற நடவடிக்கைகளின் பின்னர் மாங்குளம் மகா வித்தியாலயம் நேற்று வியாழக்கிழமை முதல் சொந்த கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(த-410)

## மரண அறிவித்தல்

*பொன்னம்பலம் தங்கம்மா*



யாழ். நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல. 770, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் - தங்கம்மா 23.03.2011 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் (குலசிங்கம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றகந்தையா மற்றும் சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற தம்பிஐயா மற்றும் இராமாட்சிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான கௌசலாதேவி, கோணேஸ்வரி மற்றும் கோசலாதேவி (ஐயங்குளம்), புவனேஸ்வரன், புனிதராணி, புண்ணியசீலன், பிரியதர்சினி (ஆசிரியை - இராமநாதபுரம் மேற்கு, அ.த.க. பாடசாசலை), சிவபாலன், கோமளவிஜிதா (வட்டக்கச்சி), பத்மகாந்தன் (திருவையாறு ப.வா.தி.வி. உ.நு. சங்கம்), ஜோதி (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயும் படிகலிங்கம் (வட்டக்கச்சி), மோகனராசா (ஐயங்குளம்), தனலட்சுமி, இலங்காநேசன், லலிதராணி, சுதாஸ்கரன் (அதிபர்- தர்மபுரம் இல. 01 அ.த.க. பாடசாலை), இராசமாணிக்கம் (வைத்தியசாலை, மாங்குளம்), தர்சினி (திருநாவுக்குளம் - வவுனியா) ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்றவர்களான தம்பையா, பொன்னையா, செல்லையா, சண்முகம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பொன்னம்மா, நாகம்மா, சின்னம்மா, நல்லம்மா ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மம்மில் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*770, ஆறுமுகம் வீதி,*
*வட்டக்கச்சி.* (25-27-32)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங் சியூங்கை நேற்றுச் சந்தித் துப் பேசிய பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார் என்று சீனா அறிவித்துள்ளது.

தூதுவர் பதவியில் இருந்து விலகிச் செல்லும் அமுனுகம, சீன - இலங்கை உறவுகள் வலுப்படுவதற்கு பெரும் பங்காற்றியவர் என்று சீனத் துணை அமைச்சர் தெரிவித்தார். (உ)

## லிபியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இலங்கையிலும் கடைசிநேர யுத்தத்தின்போது இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள மேற்கத்தேய நாடுகள் முயற்சி செய்தபோதிலும், மக்கள் அரசுக்கு வழங்கிய ஆதரவால் எமது பிரச்சினையில் வெளிநாடுகள் தலையிட முடியாமல் போயிற்று என்றும் சம்பிக்க ரணவக்க கூறினார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

லிபியாவின் பென்காசி நகரை முதன்மைப்படுத்தி கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களால் மேற்கத்தேய நாடுகள் லிபியா மீது தாக்குதல் நடத்தி வருகின்றன. லிபியா இரண்டு நாடுகளாகப் பிரிந்துபோகும் நிலைமையே அங்கு தோன்றியுள்ளது. லிபியாவின் கடாபி, சிரியாவின் அசாத் ஆகியோருக்கு எதிராகவே மேற்கத்தேய நாடுகள் நடவடிக்கை எடுத்துள்ளன. இவை தவறான முன்னுதாரணங்களாகும். இதனைத்தான் ஐக்கிய நாடுகள் சபை 2009 மே மாதம் இலங்கையில் நடத்த முயற்சித்தது. வேலுப்பிள்ளை பிரபாகரன் , பொட்டு அம்மான் ஆகியோர் முள்ளிவாய்க்காலில் அகப்பட்டதும் ஐக்கிய அமெரிக்காவின் தூதுவர் ரொபர்ட் ஒ பிளேக் இந்த யோசனையையே வலியு றுத்தினார். பொதுமக்களைக் காப்பாற்றுவதற்காக தலையிட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

பீரங்கித் தாக்குதல்களில் பொதுமக்கள் பலியானதைக் காட்டும் புகைப்படங்களை அமெரிக்கா தனது செய்மதி ஊடாகப் பெற்ற புகைப்படங்கள் என வெளியிட்டது. எமது நாட்டுக்கு எதிராக நடவடிக்கையை மேற்கொள்ளவே அவர்கள் முயற்சித்தனர். பசுபிக் வலயத்திலுள்ள அமெரிக்காவின் யுத்தக் கப்பல்களைக் கொண்டுவந்து இலங்கையிலும் இதனையே செய்ய முயற்சித்தனர்.

மேற்கத்தேய நாடுகள் தமக்கு எதிரான போக்குகளைக் கொண்ட நாடுகள் மீது தாக்குதல் நடத்துகின்றன. லிபியா மீது இன்று தாக்குதல் மேற்கொள்பவர்கள், வேறு நாடுகள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளக்கூடும். இந்தக் கதி நாளை இலங்கைக்கும் ஏற்படக்கூடும். மேற்கத்தேய நாடுகளின் தலையீட்டை நாம் அனைவரும் வன்மையாகக் கண்டித்து அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் - என்றார்.

(உ-சி)


## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் பாக்கியம்



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பாக்கியம் (24.03.2011) நேற்றுக் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2011) மு.ப 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வங்கி வீதி, ஆவரங்கால் மேற்கு
ஆவரங்கால்.

தகவல்:
கந்தசாமி - சரஸ்வதி
குடும்பத்தினர்.

### முத்துச்சாமி சிற்றம்பலம்



புத்தூர் மேற்கைப் பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கு கொடிகாமத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துச்சாமி சிற்றம்பலம் இறைவனடி அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துச்சாமி - அன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் நிகேதினி, நளாயினி (ஆசிரியை, புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவநாயகம் (பிரதி அதிபர், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), து. இளமுருகன் (சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் கணேசன் (இளைப்பாறிய பிரதி அதிபர்) ஆகியோரின் அன்பு சகோதரனும் நகுலேஸ்வரன் (லண்டன்), வரதன் (ஆஸ்திரேலியா), கவிதா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சிறிய தந்தையும் நாகேஸ்வரன், அம்பிகை (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் விசாலி, இளநதி, குற்றாலன், மாதுளன், நாகநர்த்தனன், தர்சனா, நாககீர்த்தனன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2011) வெள்ளிக்கிழமை புத்தூரில் உள்ள அவரின் இல்லத்தில் இருந்து பூதவுடல் தகனக்கிரியைக்காக இந்துசிட்டி இந்து மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யாழ். பருத்தித்துறை வீதி,
புத்தூர். (2391) (35)

தகவல்:
திருமதி சிற்றம்பலம்.


## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் லண்டனில் ஈழத் தமிழர்கள் சிலரைச் சந்தித்து சோனியா, இந்தியா தமிழர்களுடனேயே இருக்கிறது என்பதை அவர்கள் நிச்சயம் புரிந்துகொள்ள வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

அந்தப் பின்னரே ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இறுதிப் போர் இடம்பெற்ற காலப் பகுதியில் பல தடவைகள் இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்த சிவ்சங்கர் மேனன் இந்தியாவின் அழுத்தங்களை அவருக்குத் தெரியப்படுத்தி வந்தார். எனினும் அவரது இராஜதந்திர முயற்சிகள் தமிழர் படுகொலைகளைத் தடுத்து நிறுத்தத் தவறி இருந்தன என்று குற்றஞ்சாட்டும் ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு, அதற்காக அவரைப் பதவி நீக்கி தமிழர்கள் மீதான தனது அனுதாபத்தை சோனியா வெளிப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுள்ளது.

''தான் தமிழரின் நண்பர் என்று சோனியா காந்தி சொல்லியிருக்கிறார். நாம் அவர் சொல்வது உண்மையென்று நம்புகிறோம். ஆனால், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், தான் தமிழரின் நண்பர் அல்லர் என்று தெளிவாகக் காட்டியிருக்கிறார். ஆகவே அவரை பதவி அகற்றுமாறு திருமதி சோனியா காந்திக்கு நாம் எழுதியுள்ள கடிதத்தில் கேட்டிருக்கிறோம்.'' என்றார் ஒபாவுக்கான தமிழர் அமைப்பின் பிரதிநிதி ஒருவர். (உ)

## தேடப்படும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவாகவும் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்துக்கு முன்னால் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர்.

தேசிய சுதந்திர முன்னணி ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் உள்ளிட்ட பல அமைப்புகள் கலந்துகொண்டன.

கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் முன்பாக நேற்றுக் காலை 10 மணிக்குக் கூடிய தேசிய சுதந்திர முன்னணியின் ஆதரவாளர்கள் ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, கனடா போன்ற நாடுகளுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பினர்.

''லிபியாவிலிருந்து எண்ணெய் வளத்தைக் கொள்ளையிட அமெரிக்காவும், பிரிட்டனும், பிரான்ஸும் கொலைகளைச் செய்கின்றன'', ''பான் கீ - மூன் ஐக்கிய நாடுகள் சபையை ஒபாமாவிடம் காட்டிக் கொடுத்துவிட்டார்'', ''நாங்கள் என்றுமே லிபியாவுடனேயே இருப்போம்'', ''உலக யுத்தத்தை ஏற்படுத்த பான் கீ - மூன் முயற்சிசெய்கின்றார்'' - ஆகிய கோஷங் களை ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பியிருந்தனர்.

''ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து கடாபியைக் காப்பாற்றுவோம்'', ''கடாபி தோல்வியடைந்த பின்னர் லிபி யாவால் வெற்றிபெற முடியுமா?'', ''எண்ணெய்க் காகக் கொலை செய்வது ஜனநாயகமா?'' போன்ற பதாதைகைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

அமெரிக்கா, பிரிட்டன், இத்தாலி, பிரான்ஸ், கனடா ஆகிய நாடுகளின் தலைவர்களின் புகைப்படங்களை ஏந்தியிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், இவர்கள் அனைவரும் கொலைகாரர்கள் என்ற கோஷத்தைத் தொடர்ச்சியாக எழுப்பினர்.

காலை 10 மணிக்கு ஆரம்பமான ஆர்ப்பாட்டம் ஒரு மணித் தியாலம் வரை நடைபெற்றது. இறுதியாக ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக டயர் களை எரித்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்திய ஆர்ப்பாட்டக்காரர்கள் பின்னர் கலைந்துசென்றனர்.

லிபிய அதிபரின் நெருங்கிய நண்பரான ஜனாதிபதியின் இரகசிய உத்தரவின் பேரிலேயே இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுவதாகச் செய்திகள் கூறுகின்றன. (உ)

## புலம்பெயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்களைக் கேட்பதற்குமாக இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது'' என்றார் அவர்.

போர் முடிவடைந்து விட்டதால் ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான முயற்சிகளே சாத்தியப்படும் என்றும் அதற்கே அனைத்துலக சமூகத்தின் ஆதரவு கிடைக்கும் என்றும் சந்திப்பில் சொல்ஹெய்ம் வலியுறுத்தி உள்ளார்.

இருப்பினும் ''தாயகத்தில் உள்ள நிலைமைகள் குறித்து புலம் பெயர் தமிழர்கள் என்ன கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிவதிலேயே சொல்ஹெய்ம் ஆர்வம் காட்டினார்'' என்றார் சந்திப்பில் கலந்து கொண்ட பிரதிநிதி ஒருவர்.

புலம்பெயர் தமிழர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதைச் செவிமடுப்பதே சொல்ஹெய்மின் இந்தச் சந்திப்பின் முக்கிய நோக்கம் என்று 'நோர்வே நியூஸ்' ஏஜென்சியும் தெரிவித்தது.

சந்திப்பின் முடிவில் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதாயின் புலம்பெயர் தமிழ்ச் சமூகம் இலங்கை அரசுடன் பேச வேண்டும் என்ற அறிவுரையையும் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

''இலங்கையில் அபிவிருத்தியையும் அரசியல் தீர்வையும் ஊக்குவிப்பதற்கு அந்த நாட்டு அரசுடன் பேச்சில் ஈடுபட வேண்டும் என்பதே அவர்களுக்கான சொல்ஹெய்மின் அறிவுரையாக இருந்தது'' எனத் தெரிவித்தது 'நோர்வே நியூஸ்'.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஆங்கில இணையத் தளம் ஒன்றுக்கு பேட்டியளித்த சொல்ஹெய்ம், அரசுக்கும் புலம்பெயர் தமிழர்களுக்கும் இடையிலான 'கலந்துரையாடல் பங்காளி'யாகத்தான் செயற்படலாம் என்று யோசனை தெரிவித்திருந்தார்.

ஆனால், இலங்கை அரசு அதனை அடியோடு நிராகரித்திருந்தது. சொல்ஹெய்ம் ஒரு தோற்றுப்போன மனிதர் அவரது உதவி தமக்குத் தேவையில்லை என்று அரச அமைச்சர்கள் உறுதியாகத் தெரிவித்திருந்தனர்.

அதேபோன்று இந்த யோசனையை விடுதலைப் புலிகள் அமைப்பின் நோர்வே நாட்டுப் பொறுப்பாளரான நெடியவனும் நிராகரித்திருந்தார் என்று 'நோர்வே நியூஸ்' தெரிவித்திருந்தது.

இருதரப்புக்களும் நிராகரித்திருந்த போதும் இந்த ரகசியச் சந் திப்பு எப்படி ஏற்பாடு செய்யப்பட்டது என்ற பின்னணி உறுதியாகத் தெரியவரவில்லை. (உ)


## மரண அறிவித்தல்கள்

### தங்கராசா செல்வராசா

(அம்பாள் ரான்ஸ்போட்)



பேச்சியம்மன் கோயிலடி கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா செல்வராசா நேற்று (24.03.2011) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராசா மற்றும் செல்வலட்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வரும் பத்மஜாவின் பாசமிகு கணவரும் வரெணியா (யா/ புனித ஜோன் பொஸ்கோ, தரம் -5), வாணுஜா (யா/ புனித ஜோன் பொஸ்கோ, தரம் - 1D), யாணுஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வக்குமார், அருட்செல்வன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற காசிநாதபிள்ளை மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும் புனிதரமணி, பகிரவதி, பத்மசுகந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2011) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பேச்சியம்மன் கோயிலடி,
கோப்பாய் தெற்கு கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சின்னத்தம்பி பூமணி (சரஸ்வதி)



காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி பூமணி நேற்று (24.03.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தர் - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தர் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் தேவகலா, கருணாகரன், குமாரசேகரன், செல்வகலா ஆகியோரின் பாசமிகு தாயும் சண்முகரட்ணம் (Lanka Filling Station- Karainagar), ஜெயக்குமாரி, மோகனாம்பிகை (தாதிய உத்தியோகத்தர், காரைநகர்), நிமலானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜெனரஞ்சினி, ஜெனரஞ்சன், ஜெனார்த்தனன், சரவணபவன், ராகுலன், நிரோஜன், வைஷ்ணவி, தவப்பிரியா, அஷ்வினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2011) பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தில்லை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாலாவோடை,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவும் சாத்தியம் உள்ளது.

COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை µ யாழ்ப்பாணம்
பங்குனி 24, 2011
பங்குச்சந்தைச்சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7212.75↑
மிலங்கா(MPI) 6793.59↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 2802.03Mn
பங்குகளின் அளவு(No.) 89.82Mn
வியாபாரம்(No.) 16101
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
வரபோர 1400.00
சென்றல் பினான்ஸ் 1200.00
செலிங்கோ இன்சுறன்ஸ் 740.00
கொழும்பு பார்மசி 2900.00
சிங்கலங்கா 675.00
குறைவு(Top 5 losers) - விலை Rs.
மசல் அனட் மோட்டர் 1520.00
சாலிமார் 800.00
பைன்லேஸ் 315.00
சிலோன கோல்ட் 699.90
கண்டி ஹொட்டல் 210.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# அரசின் ஒரு லட்சம் ரூபா அன்பளிப்பைப் பெறுவதற்கு மூன்றாவது பிள்ளை பெறும் முயற்சியில் இராணுவம்

## சபையில் கிண்டலடித்தார் சுனில் ஹந்துன் நெத்தி எம்.பி.

ஜே.வி.பியினர் வீதி வீதியாக உண்டியல்களைத் தூக்கிக் கொண்டும், வீடுவீடாகச் சென்று மக்களை அச்சுறுத்தியும் நிதி சேகரிக்க முடியுமானால், பாடசாலை மாணவர்கள் தாம் படிக்கும் பாடசாலை விசேட நிகழ்வுகளுக்காக பணம் சேகரிப்பது ஒன்றும் பாரதூரமான தவறு அல்ல என்கிறார். பிரதி கல்வி அமைச்சர் விஜித்த முனி சொய்ஸா.

ஜே.வி.பி. உறுப்பினரான சுனில் ஹந்துன் நெத்தி வாய் மூல விடைக்கான கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும் போது பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சினால் விடுத்துள்ள 2008/41 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி பழைய மாணவர் சங்கமோ, பழைய மாணவர்களோ, ஏனைய சங்கங்களோ, பாடசாலை மாணவர்களிடம் இருந்தும், பெற்றோர்களிடம் இருந்தும் நிதி பெற முடியாது என கண்டிப்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆனால் 2010 ஆம் ஆண்டு றோயல் கல்லூரி பழைய மாணவர் சங்கம் றோயல் பெரட் (Royal Parode) என்ற பெயரில் நூறு ரூபா பெறுமதியான கட்டமிடப்பட்ட அட்டைகளை மாணவர்களிடம் கொடுத்து பணம் வசூலித்தது. கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு எதிராக செயற்பட்டுள்ள இவ்விடயம் தொடர்பாக கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுக்காதது ஏன்? என்று ஜே.வி.பி. உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி .

### சட்டத்தைப் பார்த்தால் பாதையில் வாகனம் கூட ஓட முடியாது

இக்கேள்விக்கு பிரதிக் கல்வி அமைச்சர் விஜித்த முனி சொய்ஸா பதில் அளித்தார். அதாவது கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் படி எந்த பாடசாலையிலும் நிதி வசூலிக்க முடியாது. அதேவேளை இப் பாடசாலைகளில் இடம்பெறும் விசேட வைபவங்கள், விழாக்கள் தொடர்பாக விருப்பத்தின் பேரில் நிதி வசூலிக் முடியும் என்று கூறினார் பிரதி அமைச்சர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதி அமைச்சரை மடக்கினார் சுனில் ஹந்துன் நெத்தி.

சபாநாயகர் அவர்களே!

இந்த அமைச்சர் முதலில் கூறுகின்றார். கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் படி நிதி வசூலிக்க முடியாது என்று. பின்னர் அதே அமைச்சர் களியாட்ட விழாக்களுக்காக நிதி வசூலிக்கலாம் என்றும் கூறுகிறார். இது முன்னுக்குப் பின் முரணாக இருக்கின்றதே என்று சுட்டிக்காட்டினார் சுனில் ஹந்துன் நெத்தி.

இது பிரதி அமைச்சருக்கு சூட்டைக் கிளப்பி விட்டது. ஐயா! இந்த ஜே.வி.பி.காரர்கள் தான் வீதி வீதியாகவும் வீடு வீடாகவும் மக்களை மிரட்டி நிதி சேகரித்தனர். ஆனால் தோமஸ் கல்லூரி பழைய மாணவர்கள் சுயமாக முன்வந்து நிதி சேகரித்து பாடசாலை நிகழ்வுகளைச் சிறப்பித்தனர்.

பிள்ளைகளைப் பெற்று பாடசாலைக்கு அனுப்பி விட்டு எல்லாவற்றையும் அரசாங்கம் செய்து விடும் என்று இருக்க முடியாது. பழைய மாணவர்களும், பெற்றோரும் சுயமாக முன்வந்து உதவுவதில் குற்றம் கண்டுபிடிக்கக் கூடாது என்றார்




பிரதி அமைச்சர்.

ஆனால் சுனில் ஹந்துன் நெத்தியும் விட்டபாடில்லை.

ஐயா! சுயமாக நிதி கொடுப்பதாக நாங்கள் கூறிவில்லை. உங்களைப் போன்ற அமைச்சர்களும் செல்வந்தர்களுக்கும் நூறு ரூபா சிறிதாக இருக்கலாம்.ஆனால் ஏழை மாணவர்களும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர். இதைத்தான் சுட்டிக் காட்டுகின்றோம்.இது பாரதூரமான விடயம்தான் என்றார். சுனில் ஹந்துன் நெத்தி.

சபாநாயர்கள் அவர்களே இந்த உறுப்பினர் கூறுவது போல் சட்டத்தை மட்டும் தூக்கிப் பிடித்துக்கொண்டு நின்றால் பாதையில் ஒரு வாகனம் கூட ஓடமுடியாது என்று பதிலடி கொடுத்தார் பிரதி அமைச்சர்.

பிரதி கல்வி அமைச்சரின் கூற்றுக்கு ஆதாரமாக சில விடயங்களை சுட்டிக்காட்டினார் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன.

ஐயா! நானும் றோயல் கல்லூரியில் பழையமாணவன் என்ற வகையில் கல்லூரியின் 125 ஆவது நிறைவு விழா கொண்டாடப்பட்டதன் பின் மேலும் பல நிகழ்வுகளில் கலந்து கொண்டேன். ஊர்வலத் திலும் சென்றேன். எவரும் அப்படிக் கட்டாயப்படுத்தி நிதி வசூலிக்க வில்லை என்று கூறினார் அமைச்சர் தினேஸ் குணவர்த் தன.

நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு பிரதி அமைச்சர் சந்திர வீரக்கொடி தலைமையில் கூடியது.

### கேள்வியை கேட்டவர்கள் சபையில் இல்லை

நேற்று நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தின் படி வாய் மூல விடைக்கான 15 கேள்விகளுக்கு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் கேள்வியை கேட்டவர்கள் எவருமே சபையில் இருக்கவில்லை. இக்கேள்விகள் இரண்டாவது சுற்றில் கேட்கப்பட்டபோதுகேள்விகளைக் கேட்டவர்களுள் ஒருவரான ஜே.வி.பி. உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி சபைக்குள் வந்து கேள்வி கேட்டார்.

இதன்படி 15 கேள்விகளுக்கு முன் அறிவித்தல் கொடுத்தும் ஒரே ஒரு கேள்வி மட்டுமே கேட்கப்பட்டது உறுப்பினர்களின் அக்கறையற்ற தன்மையை காட்டுகிறது என அமைச்சர் தினேஸ் குணவர்த்தன சுட்டிக் காட்டினார்.

சட்டவரைவுகள் தொடர்பாகப் பேசிக்கொண்டிருந்த டியூ. குணசேகர திடீரென அரசியல் பேசினார். அதாவது இனி ஒரு காலத்தில் பிரேமதாச யுகத்தை தலையெடுக்க விடமாட்டோம் என்று சூளுரைத்து முடித்தார் டியூ. குணசேகரா.

### வெயிலுக்கு குடையைக் கொடுத்து மழையில் பிடுங்கி விடுகின்றனர்

இந்த அரசாங்கம் மேற்கொண்டு வரும் உறுதியற்ற பொருளாதார கொள்கையினால் சிறிய, நடுத்தர மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்களிடம் அறவிடும் வரியில் 12 வீதத்தை அர சாங்கமே சுருட்டிக்கொள்கிறது. வங்கிக் கடன் கொடுப்பனவுகளிலும் சிக்கல்களே காணப்படுகின்றன. கடன் கொடுக்கிறோம் என்றாலும் வரிச் சுமை குறைந்தபாடில்லை.

இது எப்படி இருக்கிறது என்றால் வெயிலுக்கு குடையைக் கொடுத்து விட்டு கடும் மழை பெய்யும் போது குடையை பறித்து கொள்வதற்கு ஒப்பாகவே உள்ளது என் றார் ரவி கருணாநாயக்க.

### மூன்றாவது பிள்ளைக்கு ஒருலட்சம் ரூபா ரெடியா

ஆளும் கட்சி உறுப்பினர்கள் எப்படி எதிர்க்கட்சியினரை விமர்சித்தனரோ அதற்கு ஈடாக எதிர்க்கட்சி உறுப்பினர் களும் பதிலடி கொடுக்கத் தவற வில்லை.

ஜே.வி.பி. உறுப்பினரான சுனில் ஹந்துன் நெத்தி மஹிந்த சிந்தனை யையும் வரவு, செலவுத் திட்ட உறுதி மொழிகளையும் ஞாபகப்படுத்தினார்.

மேதகு ஜனாதிபதி அவர்கள் தனது வரவு, செலவுத் திட்டத்தின் போது இராணுவ வீரர்கள் மூன்றாவது குழந்தையைப் பெற்றுக்கொண்டால் அந்தக் குடும்பத்துக்கு அரசாங் கம் ஒரு லட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கும் என்று உறுதியளித்தார். அதையிட்டு இராணுவத்தினர் மேற்கொண்டு பிள்ளைகளைப் பெற முயற்சிக்கின்றனர்.

இந்த அரசாங்கம் துறைமுகம் மற்றும் விமானப் போக்குவரத்து எனப் பல வகைகளில் வரி

புத்திரசிகாமணி

களை அறவிட்டு வருகிறது.

மூன்றாவது பிள்ளை பெறும் இரா ணுவ வீரர்கள் இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு ஒரு லட்சம் ரூபா வழங்க எந்த வகையில் நிதியை பெற உள்ளீர்கள். இதுவரை எத்தனை குடும்பங்களுக்கு அன்பளிப்பு வழங்கி உள்ளீர்கள். அதில் ஏதாவது ஒரு குடும்பத்தின் பெயர் விவரங்களை ஆவது வெளியிட முடியுமா? என்று கேட்டார் சுனில் ஹந்துன் நெத்தி. ஆனால் அமைச்சர்களிடம் இருந்து எந்த விதமானப் பதிலும் கிடைக்கவில்லை.

### சோபை இழந்து அழுது வடித்த சபை

நேற்று நாடாளுமன்றில் வரிகள் தொடர்பான ஐந்து சட்ட வரைவுகள் விவாதிக்கப் பட்ட போதும் சபை முழு நேரமும் அழுது வடித்த நிலையில் இருந்தது. ஆளும் கட்சி எதிர்க் கட்சி ஆசனங்கள் 90 வீதம் வெறிச் சோடி சபை சோபை இழந்து காணப்பட்டது.

சட்டவரைவுகள் அனைத்தும் திருத் தத்துடன் நிறைவேற் றப்பட்டன நாடா ளுமன் றம் மீண்டும் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கூடும்.

# நிகழ்வுகள்

### விழிப்புணர்வுக் கருத்தரங்கு

உலக காசநோய் ஒழிப்பு வாரத்தையொட்டி பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்களால் காசநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் இன்று வெள்ளிக்கிழமையும் எதிர்வரும் திங்கட் கிழமையும் தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 29,30 ஆகிய திகதிகளில் கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையம் மற்றும் சாவகச்சேரி நகர்ப்பகுதியில் குடியிருப்பு அதிகம் உள்ள பகுதிகள் போன்ற இடங்களில் சளிப் பரிசோதனை இடம்பெறவுள்ளது. (ற-207)

### நுழைவாயில் திறப்பு விழா

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நுழைவாயில் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலையின் அதிபர் திருமதி செல்வ மலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஓய்வு பெற்ற வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி பி.பெரியதம்பி, ஓய்வு பெற்ற உப ஆதிபர் செல்வி ரி.வேலுப்பிள்ளை, பழைய மாணவிகள் சங்கத்தின் உபதலைவி செல்வி ஐ.நல்லதம்பி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பாடசாலையின் பழைய மாணவ சங்கத்தின் கனடா கிளையின் நிதியுதவியுடன் இந்த நுழைய வாயில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற-9-190)

### ஆன்மீகச்சொற்பொழிவு

கொக்குவில் சின்மயா மிஷன் நிறுவனத்தினால் பாடசாலைகள் தோறும் ஆன்மீகச் சொற் பொழிவுகள் இடம் பெற்று வருகின்றன. இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ''வெற்றி எங்கள் கைகளில்'' எனும் தலைப்பில் பிரம்மச்சாரி ஜாக் ரத் சைதன்ய சுவாமி நிகழ்த்தவுள்ளார். (ற-313)

### அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளிக் கிழமை காலை 8.30 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மற்றும் சர்வதேசக் கலைஞர்கள் பங்கேற்கும் இசை நிகழ்வு இன்று முதல்

கொழும்பு, மார்ச் 25

இலங்கை மற்றும் சர்வதேச கிராமிய கலைஞர்கள் யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடி இன்று முதல் கலை நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளனர்.

இலங்கையின் சகல பகுதிகளிலிருந்தும் கலந்துகொள்ளவிருக்கும் கலைஞர்கள் இந்த நாட்டின் பழம்பெரும் கலை அம்சங்களை வெளிப்படுத்தவிருக்கும் அதேவேளை இந்தியா, நேபாளம், பாலஸ்தீனம், தென்னாபிரிக்கா மற்றும் நோர்வே நாடுகளைச் சேர்ந்த பிரபல கலைஞர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இன்று முதல் 27ஆம் திகதி வரை காலை 9 மணி தொடக்கம் ஒரு மணிவரையும் பின்னர் 4 மணி தொடக்கம் இரவு 10 மணி வரையும் நிகழ்ச்சிகள் இடம்பெறும். அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி முகவர் அமைப்பு நோர்வே - இலங்கை ஒத்துழைப்பு முகவர் அமைப்பு ஆகியவை இதில் முக்கிய பங்கு ஏற்றுள்ளன. நிகழ்ச்சியை சேவா லங்கா நிறுவனம் பொறுப்பேற்று நடத்துகிறது.

யாழ்ப்பாணம் மாநகர சபை வளாகத்தில் மைதானத்தில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவிருக்கின்றன. இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் 24 கிராமியக் குழுக்கள் கலந்துகொள்கின்றன. (ப)

# யாழ்.பல்கலைக் கழகத்தின் தேவைகளை நேரில் ஆராய்ந்தார் நோர்வேத் தூதுவர்

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும், பல்கலைக்கழகத்தின் தேவைகள் தொடர்பாகவும் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹில்டே ஹரலட்ஸ்டட் கேட்டறிந்தார்.

இலங்கைக்கான நோர்வேத் தூதுவராகப் பதவி ஏற்றுக்கொண்ட பின்னர் முதல் தடவையாக யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்த அவரும் அவரது குழுவினரும் நான்கு நாள்கள் இங்கு தங்கிநின்று பல்வேறு தரப்புக்களையும் சந்திக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்த நோர்வேத் தூதுவர் யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியை நோர்வேத் தூதுவர் நேற்று முற்பகல் 10 மணியளவில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் போது வடமாகாணத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. மற்றும் நோர்வே அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் நோர்வே அரசின் நிதி உதவி மூலம் உள்ளூர்த் தொண்டு நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாகவும் இதில் ஆராயப்பட்டது.

இதன் பின் யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்த நோர்வேத் தூதுவர், பதில் துணைவேந்தரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. நோர்வே நாட்டின் நிதி உதவியுடன் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்துக்குச் சென்ற நோர்வேத் தூதுவர் அங்கு பயிலும் மாணவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இன்று நோர்வே அரசின் அனுசரணையில் இடம் பெறும் இசை நிகழ்வையும் ஆரம்பித்து வைக்கவுள்ளார். இதில் நோர்வேத் தூதுவர் ஹில்டே ஹரலட்ஸ்டட், நோர்வேத் தூதரகத்தைச் சேர்ந்த அரசியல் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஆலோசகர் மீனிலங்கோ ஆகியோர் கலந்துகொள்வர். (த-15)

# தேர்தல் ஆணைக்குழுவை இயக்க ஐ.தே.க. போராட்டம் நடத்தும்



கொழும்பு, மார்ச் 25

தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட அனைத்துக் குழுக்களையும் இயங்க வைக்கக் கோரியும் 18ஆவது திருத்தச் சட்டத்தைச் செல்லுபடியற்றதாகக் கோரியும் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் நாள்களில் போராட்டங்களை நடத்தும் என்று அக்கட்சியின் எம்.பி. மங்கள சமரவீர நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்த அனைவருக்கும் நான் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். வழமைக்கு மாறாகவே இத்தேர்தல் இடம்பெற்றது.

அரசின் அனைத்து அதிகாரங்களும், அரச சொத்துகளும் இத்தேர்தலில் அரசால் பயன்படுத்தப்பட்டன; தேர்தல் சட்டங்கள் அப்பட்டமாக மீறப்பட்டன; வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரங்களாகப் பாடசாலைகளில் கூட நிகழ்வுகளை நடத்தினர்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னரும் அரச ஊடகங்கள் அரசுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரங்களைச் செய்தன. தேர்தல் சட்டங்களை அப்பட்டமாக மீறி நடத்தப்பட்ட இத்தேர்தலில் நாம் 35 வீத வாக்குகளைப் பெற்றமை எமக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும்.

எதிர்வரும் நாள்களில் தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட அனைத்து சுயாதீன ஆணைக் குழுக்களையும் மீள நிறுவுவதற்கும் 18ஆவது திருத்தச் சட்டத்தை செல்லுபடியாக்குவதற்கும் நாம் போராட்டங்களை நடத்துவோம்.

எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் கட்சியின் தலைவராக நியமிக்கக் கட்சி ஏகமனதாகத் தீர்மானித்து அவர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரது தலைமையின் கீழ் எமது செயற்பாடுகள் வெற்றிகரமாக் முன்னெடுக்கப்படும். - என்றார். (த-சி)

# 50 ரூபா ரீலோட் செய்தால் 12 ரூபா 50 சதம் அரசுக்கு வரி

## சபையில் ரவி கருணாநாயக்க

கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர் ஒருவர் 50 ரூபாவை 'ரீலோட்' செய்யும் போது அதில் 12 ரூபா 50 சதத்தை அரசு வரியாக அறிவிடுகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

வாடிக்கையாளர்களை வதைப்பதை விடுத்து, இலாபம் ஈட்டும் நிறுவனங்களிடமிருந்து வரிகளை அறவிடும் வகையிலேயே இங்கு திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும்.

எமது நாட்டில் வங்கிகளின் நடைமுறைகள் மிக மோசமடைந்து வருகின்றன. பாரிய முதலீட்டாளர்களுக்கு வசதி வாய்ப்புகளை வழங்குகின்ற இந்த வங்கிகள் சிறிய நடுத்தர முதலீட்டு முயற்சியாளர்களுக்கு அவ்வாய்ப்புகளை வழங்க மிதமான போக்கைக் கடைப் பிடிக்கிறது.

எமது நாட்டு வங்கிகளின் கொள்கையானது வெயில் காலத்தில் குடையைக் கொடுத்து மாரி காலத்தில் கொடுத்த குடையை பறித்தெடுப்பது போலாகும் - இப்படி அவர் தெரிவித்தார். (த-சி)

## ஈழ அகதிகளை கண்காணிக்க புலனாய்வுப் பிரிவு

தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளின் விவரங்களைத் திரட்டி அவர்களது புலம்பெயர் உறவுகளுடனான தொடர்புகளை கண்காணிக்க இலங்கையிலிருந்து சிறப்பு புலனாய்வு பிரிவினர் தமிழகத்திற்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபாய ராஜபக்ஷவின் நேரடி கண்காணிப்பின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ரணிலுக்கு ஜனாதிபதி வாழ்த்து





கொழும்பு, மார்ச் 25

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுக்காலை தொலைபேசியில் தொடர்புகொண்டு வாழ்த்துத் தெரிவித்தார் என ஜனாதிபதியின் பேச்சாளர் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

''ஐ.தே.கட்சியின் தலைமைப் பொறுப்பில் நீங்கள் தொடர்வது உங்களுக்குக் கிடைத்த பிறந்த நாள் பரிசு'' என ஜனாதிபதி தொலைபேசி மூலம் ரணிலிடம் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் 62ஆவது பிறந்தநாள் நேற்று என்பது குறிப்பிடத்தக்கது. (த-சி)

## 14 வயதுச் சிறுமி மீது 55 வயது நபர் வல்லுறவு

வாழைச்சேனை, மார்ச் 25

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெண்டுகள் சேனையின் பூலாக்காடு பிரதேசத்தில் 14 வயதுடைய சிறுமியை 55 வயதான நபரொருவர் பாலியல் வல்லுறவுக்குட் படுத்தியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை காலை குறித்த சிறுமி வீட்டில் தனிமையிலிருந்த வேளையில் வீட்டிற்கு வந்த மேற்படி நபர், சிறுமியை பாலியல் வல்லுறவுக் குட்படுத்தியதாக வாழைச் சேனை பொலிஸ் நிலையத்தில் குறித்த சிறுமியின் தாயார் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த சிறுமி வாழைச் சேனை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். சந்தேக நபரை கைது செய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (த-10)

# திரிபோலியில் ஐந்தாவது நாளாக கூட்டுப்படைகள் உக்கிரத் தாக்குதல்

திரிபோலி, மார்ச் 25

லிபியாவின் தலைநகர் திரிபோலியில் கூட்டுப்படைகள் வியாழக்கிழமை இரவும் தாக்குதல் நடத்தின. கடாபியின் இராணுவ தாங்கிகள் முன்னேறிச் செல்ல முடியாதபடி கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. இது 5ஆவது இரவுத் தாக்குதலாகும்.

லிபியாவில் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை நிறுத்தும் வகையில், அங்கு விமானங்கள் பறக்கத் தடை விதிப்பதற்கான தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபை அண்மையில் நிறைவேற்றியது.

அதை அமுல்படுத்தும் பொருட்டு லிபியாவில் உள்ள விமானக் கட்டுப்பாட்டு மையங்களையும், பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளையும் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் தாக்கி வருகின்றன.

தலைநகர் திரிபோலி உள்ளிட்ட முக்கிய நகரங்களில் குண்டுகள் வீசப்பட்டு வருகின்றன. கடாபியின் வீடுகள் குண்டு வீச்சில் சேதமடைந்திருக்கின்றன.

### சண்டை தீவிரம்

தலைநகரம் திரிபோலி, மிஸ்ருதா, சின்தன், அனுபியா, ஜாமர், பென்காசி ஆகிய 6 நகரங்களை குறி வைத்து குண்டுகள் வீசப்பட்டு வருகின்றன. இவற்றில் லிபிய படை முகாம்கள் உள்ளன.

தாக்குதலில் இராணுவ வாகனங்கள் மற்றும் தளவாடங்கள் அழிக்கப்பட்டன. கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 175 தடவைகள் குண்டுகள் வீசப்பட்டன.

லிபியா வான வீதி முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விட்டனர் என பிரிட்டிஷ் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மிஸ்ருதா நகரில் கிளர்ச்சியாளர்களுடன் கடாபியின் படைகள் தொடர்ந்து போரிட்டு வருகின்றன. சண்டையில் 17 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர். கடாபியின் படைகள் நடத்திய தாக்குதலில் குழந்தைகள் உட்பட 50இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர் எனக் கிளர்ச்சியாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

மிஸ்ருதாவில் கடந்த 4 வாரங்களாகச் சண்டை நடந்து வருகின்றமையால், அங்கு அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்காமல் பொதுமக்கள் தவிக்கின்றனர். மருந்துகளுக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று அல்-ஜஸீரா தொலைக்காட்சி கூறியிருக்கிறது.

அஜ்டாபியா நகரிலும் சண்டை முடிவுக்கு வரவில்லை. இரு தரப்பினரும் பின்வாங்காமல் போரிட்டு வருகின்றனர். இதனால் அங்கு கடும். நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என அல்-ஜஸீரா செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஜின்டான் நகரிலும் சண்டை தீவிரமடைந் திருக்கிறது. இராணுவத்தினர் பலமுறை பின்வாங்கினாலும் நகரைக் கைப்பற்றும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

### ஒபாமா எச்சரிக்கை:

கடாபி அதிகாரத்தில் இருக்கும்வரை அல்லது மக்கள் மீதான தாக்குதலை நிறுத்தும்வரை கூட்டுப் படைகளின் தாக்குதலில் எந்தவித மாற்றமும் செய்யப்படாது என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூறியுள்ளார்.

### வெளிநாட்டுக்குத் தப்பிச்செல்ல கடாபி முயற்சி?

வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்வதற்கு கடாபி முயன்று வருகிறார் எனத் தகவல் வந்திருக்கிறது என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் கூறியுள்ளார்.

நெருக்கமான நாடுகளுடன் தொடர்புகொண்டு நாட்டை விட்டு வெளியேறும் திட்டம் குறித்து பேச கடாபியின் ஆதரவாளர்கள் முயன்று வருகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
A/L 2013
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் : 26-03-2011 சனி 8.00 மணி

Barathy
சித்தன்கேணி
கலை, வர்த்தகப் பிரிவு
A/L 2013 மீண்டும் புதிய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன
பிரபல்யம் பெற்ற நிறுவனமான பொருளியல் கல்லூரி ஆசிரியர்களுடன் மற்றும் பிரபல்யம் பெற்ற ஆசிரியர்கள் இணைந்து கற்பிக்கின்றனர்.

| | |
|---|---|
| பொருளியல் | மகேந்திரன் |
| கணக்கீடு | திருக்குமரன் |
| வணிகக்கல்வி | பசில் |
| தமிழ் | பாலா |
| இந்து நாகரிகம்/இந்து சமயம் | என்.ரி.தரன் |
| புவியியல் | குமரன் |
| வரலாறு | சுதன் |
| அளவையியல் | ஆர்.பி.சர்மா |
| அரசியல் | கோகுலன் |
| நாடகமும்/அரங்கியலும் | கணேஷ் |
| கிறிஸ்தவம்/கிறிஸ்தவ நாகரிகம் | வசந்தன் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் |

(48,20,25)
புதிய பிரிவுகளுக்கான உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்

## கிடைத்தது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய பொறுப்பை ஏற்றுக்கொள்வார் என்று ஜனாதிபதி செயலகம் நேற்று மாலை அறிவித்தது. தயானந்த திஸநாயக்க பல வருடங்களின் முன்னர் ஓய்வு பெறும் வயதை அடைந்துவிட்டார். எனினும் அவருக்குப் பதிலாக நியமிக்கப்பட வேண்டியவரைத் தெரிந்தெடுக்க வேண்டிய தேர்தல்கள் ஆணைக்குழு செயலிழந்து கிடந்ததால் அவரே பதவியில் தொடர வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. (உ)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றவர்களே தலைவர்களாகவும், தவிசாளர்களாகவும் நியமிக்கப்படுவர் என நேற்று முன்தினம் கூட்டமைப்பு அறிவித்திருந்தது.

இவர்களின் பதவியேற்பு வைபவத்தை எதிர்வரும் முதலாம் திகதி திருகோணமலையில் நடத்துவது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார். (உ-சி)

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகமாகக் காணப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் கடலில் தொழிலுக்குச் சென்ற வல்வெட்டித்துறை ஆதிகோயிலடியைச் சேர்ந்த மீனவர் ஒருவர் நேற்று அதிகாலை 2 மணியளவில் கடலில் வைத்து இந்திய மீனவர்களால் தாக்கப்பட்டதாக முறைப்பாடுகிடைத்துள்ளதாகவும் எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

கடந்த மூன்று நாள்களில் இந்திய மீனவர்களால் கடத்தப்பட்ட ஐந்தாவது மீனவர் இவர். (உ-த-236)

O/L DAY CLASS க்கு யாழில் அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனம்
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
(ஸ்ரீதர் தியட்டருக்கு அருகில்)
O/L DAY CLASS (8.00 - 2.30)
* தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதி.
* இம்முறை பிரிவு 6 மட்டுமே. அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
(ஸ்ரீதர் தியட்டருக்கு அருகில்)
A/L 2010, 2011 மாணவர்களுக்கான வகுப்புகள் ஆரம்பம்
புவியியல் P.S.V. தினேஷ்
துரித மீட்டல் வகுப்புகள் ஆரம்பம்
Mon. Thur → புள்ளிவிபரவியல் (12-2மணி)
Wed → சூழல் முகாமைத்துவம் (10-12)
Tues. Fri → மானிடப்புவியியல் (12-2)
Sat. Sun → கடந்த கால வினாவிடைகள் (10-12)
A/L 2013 Sat. Sun - (12-1)
2012 Sat. Sun - (1-2)
* யாழ். மாவட்டத்தில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக்கொள்ள இன்றே இணையுங்கள்.
* 4 கிழமையில் 14 மணித்தியால வகுப்புகள்

நாளை ஆரம்பம்
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
(ஸ்ரீதர் தியட்டருக்கு அருகில்)
A/L 2013 கலைப்பிரிவு

| | |
|---|---|
| TAM - குழந்தை | ECO. - N.B. கஜீதரன் |
| H.C. - பத்மராஜா | LOG. - வாகீசன் |
| Geo - P.S.V. தினேஷ் | Hin - N.T. தரன் |
| Hist - தாஸ் | Plsci.. - ஸ்ரீரங்கநாத் |
| Chri - யூட் | Drama - கஜீதரன் |

ஆரம்பம்:- 26.03.2011 8 மணி

புதிய பிரிவுகள் ஆரம்பம்
வங்கியியல் கற்கைநெறிகள்
CBF, DBF
அடிப்படைத்தகைமைகள்
G.C.E.(O/L) 06 PASSES with 05 Credits including Maths/Commerce & Accounts, and Language (Tamil/English)
விரிவுரைகள் ஆரம்பம் - 26-03-2011 சனி (8.00am)
Chartered Accountancy
Foundation level & Intermediate level
CAB-I & CAB-II
Minimum Requirement :- GCE A/L 3 Passes
Further Detail
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.

நாளை ஆரம்பம்
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
(ஸ்ரீதர் தியட்டருக்கு அருகில்)
A/L 2013 - வர்த்தகப் பிரிவு
வழமையான ஆசிரியர் குழு.
ஆரம்பம்:- 26.03.2011 8 மணி

அறிவித்தல்
வெற்றி நிச்சயம்
PHYSICS - PART - I
25.03.2011 - வெள்ளி
DAY BATCH - 1.00
2011 - BATCH - 2.30

புதிய பிரிவுகள் ஆரம்பம்
G.A.Q; B.A
'வரலாறு'
வி. விஜயரூபன் (விக்கி)
ஆரம்பம்:- 26. 03.2011 சனி
BEACON - யாழ்.நகர்

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
நாளை மீண்டும் புதிய பிரிவு
A/L 2013
கலை வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்: 26.03.2011 சனி காலை 8மணி
எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரிய குழுவினால்

| பாடம் | யாழ்.நகரில் | இணுவிலில் |
|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | மகேந்திரன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக் கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | சத்தியவேந்தன் | சத்தியவேந்தன் |
| இந்து நாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| புவியியல் | குமரன் | குமரன் |
| வரலாறு | சுதன் | சுதன் |
| அரசியல் | கோகுலன் | கோகுலன் |
| அளவையியல் | ஜெயசுரேஸ் | ஜெயசுரேஸ் |
| நாடக அரங்கியல் | கணேஷ் | கணேஷ் |
| விவசாயம் | விக்கி | விக்கி |
| கிறிஸ்தவம்/கிறி.நாக | வசந்தன் | வசந்தன் |
| இந்து சமயம் | தரன் | தரன் |
| ஊடகவியல் | ஆனந்தன் | ஆனந்தன் |
| இலகுகணிதம் | ஐங்கரன் | ஐங்கரன் |
| சித்திரம் | சிறிஸ் | சிறிஸ் |
| மனைப்பொருளியல் | தர்சிகா | தர்சிகா |
| சங்கீதம் | குமுதினி | குமுதினி |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |
| | ஜைஷன் | |

(48,20,25)
இடநெருக்கடியைத் தவிர்க்கும் முகமாக தாமதியாது உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
A/L 2013
வர்த்தகப் பிரிவு
கணக்கீடு : AP. பகீரதன்
பொருளியல் : NB. கஜீதரன்
வணிகக்கல்வி : S. யசோதரன்
ஆரம்பம் : 26-03-2011 சனி 8.00 மணி
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.

திருமணக்கார் வாடகைக்கு

வெள்ளை நிறமுடைய குளிரூட்டப் பட்ட கார் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:-0215673555, 0215673666

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE - JAFFNA
2013 A/L
பிரிவு - II
ஆரம்பம் 26/03/2011
சனி - 9.30AM
சனி, ஞாயிறு வகுப்புகள்

| பௌதிகவியல் | இரசாயனவியல் |
|---|---|
| அனபாயன் | அன்பு |
| காலை 9.30 - 10.30 | மு.ப. 10.30 - 11.30 |
| உயிரியல் | இணைந்த கணிதம் |
| பொன்திவாகரன் | சிவகரன் |
| மு.ப. 11.30 - 1.00 | மு.ப. 11.30 - 1.00 |


அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் யாழ்நகரில்........
எந்த முதலீடும் இல்லாமல் மாதம் ரூபா 50,000/= க்கு மேல் சம்பாதிக்க ஆசையா.....?? !!!!
யாழ் குடாநாட்டு இளைஞர் யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் இணையத்தளம் மூலம் மாதம் ரூபா 50,000/= மேல் வீட்டிலிருந்தபடியே சம்பாதிப்பதற்கு ஓர் இலகு வழிகாட்டல் வகுப்பு
இல்லத்தரசிகளே நீங்களும் உங்கள் குடும்பத்தை முன்னேற்ற நினைக்கிறீர்களா??? ஆனால் என்ன வேலை செய்வது என்று தெரியவில்லை??? முதலீடு இல்லை மற்றும் குழந்தைகளை விட்டு வெளியே சென்று வேலை செய்ய யோசிக்கிறீர்களா? கவலையை விடுங்கள் உங்கள் வீட்டிலிருந்தபடியே மாதம் ரூபா 50,000/= மேல் சம்பாதித்து கொள்ளுங்கள்
உங்களிடம் இருக்க வேண்டியது ஓர் கணனியும் இணைய வசதியும் மட்டுமே.
குறிப்பு : கணனி பற்றி அறிவில்லாதவர்களும் பயப்படாமல் எம்முடன் இணைந்து கொள்ளலாம்.
வகுப்பு நடை பெறும் நாள் : 26ந் திகதி நாளை (சனிக்கிழமை) காலை 11.00 மணி
இடம்:யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச்சங்க மண்டபம்
பதிவுக்கட்டணம் எதுவுமில்லை
மேலதிக விபரங்களுக்கு 0779235804,0215675916
வறுமைக்கோட்டிற்கு கீழ் பட்டவர்களுக்கு விசேட கட்டணம்

Quick Learning Course
Spoken English with Grammar
Duration 1 Month
Rs. 3000.00
உரையாடல் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்தின் மூலமாக Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna.
BCHS
Tel:021 2224550 Hotlines: 0777222422/ 0777585913/ 0714299935
18-04-2011
Batch 14 : 09.00 AM - 01.00 PM
Batch 15 : 01.30 PM - 05.30 PM
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
22ஆவது வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்
* தலைவர் :- திரு.க.சண்முகசுந்தரம்
* இடம் :- யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பேராசிரியர் அ.துரைராஜா ஞாபகார்த்தமண்டபம்.
* காலம் :- 27.03.2011 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணி
அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.
"ஒளி இருளை அகற்றும்"
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை.
பொ.சுரேஸ்குமார், (செயலாளர்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்பிளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் ... வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org